புதுமை

322
1322
1-58
OF THE REGISTRAR OF
25 MAR 1958
MADRAS
197682

சீமான்களும்
சீமாட்டிகளும்
என்றும் விரும்புவது
சீமாட்டி
ஸ்டோர்ஸ்
துணிகளையே!
சீமாட்டி ஸ்டோர்ஸ்
சாலைபசார், திருவனந்தபுரம்.

உங்களுக்கு ஏன் கவலை?



நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்

TVS

வெளி அறிகுறிகளைக் கொண்டு மட்டுமே உள்ளே நிறைந்துள்ள கோளாறுகளைக் கண்டுபிடிக்க முடியாது 45 வருட அனுபவம் வாய்ந்த எங்கள் ஸ்தாபனத்தின் நிபுணர்கள் உங்கள் காரின் ஒவ்வொரு பாகத்தையும் நன்கு அறிவர். ஆகையால் எந்தக் கோளாறையும் வெகுசீக்கிரத்தில் திருத்திக் கொடுப்பார்கள்.

கார் கவலை நீங்க எஙகளிடம் அனுபபுங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்

PRESS & REGISTRATION OF BOOKS ACT

Registration of Newspapers (Central) Rules, 1956

FORM IV (SEE RULE 8)

Statement about ownership & other particulars

about Newspaper PUTHUMAI

1.	*Place of Publication*	...	202, J. J. Khan Road, Madras-14.
2.	*Periodicity of its Publication*	...	Monthly
3.	*Printer's Name*	...	G. Rengiah, Manager, Mohan Ram Press, Madras-14.
	Nationality	...	Indian
	Address	...	202, J. J. Khan Road, Madras-14
4.	*Publisher's Name*	...	K. T. Kosalram
	Nationality	...	Indian
	Address	...	202, J. J. Khan Road, Madras-14.
5.	*Editor's Name*	...	K. T. Kosalram
	Nationality	...	Indian
	Address	...	202, J. J. Khan Road, Madras-14
6.	*Names and Address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.*		K. T. Kosalram (*Sole Proprietor*) 202, J. J. Khan Road, Madras-14

I, K. T. Kosalram hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated, 1-3-58 *Signature of Publisher : (Sd.)* K. T. KOSALRAM

உன்னத தயாரிப்பு !

உயர்ந்த ரகம் !!

காரம், மணம், குணம்

இவற்றில் நிகரற்றது

C. V. ராமு சுருட்டு

வாசனைப் புகையிலை

தயாரிப்பாளர்கள்.

A. வெங்கட்ராம

கவுடர் & சன்ஸ்

: கோயமுத்தூர் :

ஸ்ரீ காளீஸ்வரி

லித்தோ ஒர்க்ஸ்

தபால் பெட்டி எண் 42,

சிவகாசி.

அச்சுத் தொழில் வளர்ச்சிக்கு

ஓர் அத்தாட்சி எங்கள்

ஸ்தாபனம் !

ஒரு முறைப் பரீட்சித்துப்

பாருங்கள்.

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1	மார்ச் 1958	ஓசை 8

			பக்கம்
அரசியல் :			
முதலாளித்துவத்தின் முதல் வெற்றி !		...	5
வடக்கும் தெற்கும் வருந்துகிறது !		...	10
பேட்டி :			
செக் அறிஞர் டாக்டர் கமில்	கன்னிக்கண்ணன்	...	12
தொடர் கதைகள் :			
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	17
காமனை வென்ற கண்	சுகி	...	61
கதைகள் :			
அரசும் வேம்பும்	'எல்லார்வி'	...	30
தண்டனை	விமலாரமணி	...	33
பித்தமும் சித்தமும்	'வியார்ஜி'	...	41
காப்டன் கண்ணாயிரம்	'புனர்வசு'	...	49
விந்தை மனிதன்	எம். கே. நாதன்	...	77
கவிதை :			
ஒரு வரம்	'சோமு'	...	58
நாடகம் :			
வந்தானே மாணிக்கம்	ராஜன்	...	69
கலைப்பகுதி :			
நல்ல இடத்து சம்மந்தம்	'கண்ணாடி'	...	86
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ. எம்.லிட்.	...	89
மற்றவை :			
இயற்கை வைத்தியம்	என். எஸ். சுப்பையர்	...	92

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

சதி வேண்டாம், சென்று வருகிறேன்!

197692

புதுமை

முதலாளித்துவத்தின் முதல் வெற்றி!

திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ராஜினாமாச் செய்து விட்டார்; சீரிய முன் மாதிரியாக அரசியல் வரலாற்றிலே வழி காட்ட, சிறந்த ஓர் உதாரணத்தை, சம்பிரதாயத்தை உருவாக்க, 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்' போல், இழுக்கு அநீதியாகக் கற்பிக்கப் பட்டால் இன்னுயிர் ஈந்தும் அதைப் போக்கும் தமிழ் கலாசாரத்தின் அடிப்படையில், திரு டி. டி. கே. பதவியை உதறி எறிந்து விட்டார்.

அவரது பதவி நீக்கம், அவருக்கு நஷ்டமல்ல; தேசத்தின் மாபெரும் நஷ்டம்; தேய்ந்து போன தேசீயப் பொருளாதாரம் வளர்ந்து வரும் நேரத்திலே ஏற்பட்டுள்ள மகத்தான இழப்பு; கண்ணீர் வடிக்கக் கூட சக்தியற்று காய்ந்த கண்களுடன் காட்சி அளித்து வரும் சாதாரண இந்தியப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஈடு செய்ய முடியாத இடுக்கண். சோஷலிஸ வாதிகள் முன்னணிப் படையில் அநுபவமிக்க தளபதியின் இடம் காலியாகி விட்டது.

இதற்கு மாறாக, முதலாளித்வ வட்டாரத்தின் முதல் மாபெரும் வெற்றியாக அவருடைய ராஜினாமா வரவேற்கப்படுகின்றது; ஜனநாயக வாதிகளின் தலை குனிவைப் பார்த்து, பண நாயக வட்டாரத்தின் பூசணிக்காய் தொந்தியில் நகைப்பு எக்காளமிடுகின்றது.

நமது சென்ற இதழ்களின் தலையங்கங்களிலேயே இத்தகைய ஓர் நிலை ஏற்படலாம் என்று எச்சரித்து இருந்தோம். அந்த எச்சரிக்கைகள் உண்மையாகி விட்டன; முதலாளித்வ முகாம் முதல் மாபெரும் வெற்றியைக் கண்டு விட்டது.

இந்த வெற்றி முதலாளித்வ முகாமிற்கு எளிதிலே கிடைக்க வில்லை; தேர்தலிலே நமது நிதி யமைச்சர் நின்ற பொழுது அவருக்கு எதிராக லட்சக் கணக்கிலே பணத்தை வாரி இறைத்தார்கள்; ஆனால் சென்னை மக்கள் பணத்தை ஒதுக்கி விட்டு பண்பாட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். கரன்ஸி வாலாக்கள் முகத்திலே, கண்ணியமாக நடந்து கரி பூசி னார்கள். அன்று நீதியும் நேர்மை யும் வென்றன.

பிறகு...? தோல்வி கண்ட பணத் தொப்பைகள், 'இனி என்ன செய்வது?' என்று சூழ்ச்சி வலை பின்ன ஆரம்பித் தார்கள்; அவர்கள் எதிர் பார்த்த நேரம், முந்த்ரா விவகாரத்தில் விளைந்தது—அதுவே அவர் களது முதல் வெற்றியாகவும், சோஷலிஸத்தின் முதல் தோல்வியாகவும் முடிந்தது.

இந்த முதல் வெற்றியைப் பெறுவதற்காக, இந்த வட்டா ரம் பல லட்ச ரூபாய்கள் செல வழித்ததாகவும் கேள்விப் படு கின்றோம்.

x x x

செல்வம் ஓரிடத்திலே தேங் காமல் தடுக்க, சோஷலிஸ சமுதாயம் காண, செல்வ வரி; தொழிலதிபர்கள் கூக்குரலைப் புறக்கணித்து மரண வரி; இன்னும் இந்தியாவின் ஏழை மக்கள் வாழ்வுயரப் பல நட வடிக்கைகள்; இவற்றையெல் லாம் செய்த காரணத்தால், திரு டி. டி. கே. மீது இந்த வட்டாரத் திற்கு ஆத்திரம். அந்த ஆத் திரத்தை, 'நூல் ஏற்றுமதி வர்த் தக ஊழலை ஒழித்துக் கட்டி, முதலாளிகள் கள்ள மார்க்கெட் கொள்ளை லாபத்தைக் குறைக்க, ஓர் கார்ப்பரேஷனை ஏற்படுத்த திரு டி. டி. கே. திட்டமிட்டு வருகிறார்' என்ற செய்தி அதிகப்படுத்தி, பம்பாய் குஜராத்தி மில் முதலாளி வட் டாரத்தைக் கொதித்து எழச் செய்தது.

நேர்மை மிக்க நேருவையும், அவரது நிதியமைச்சரான திரு டி. டி. கே.யையும் கொலை செய் யும் அளவிற்குக் கூட சதி உரு வானதாக அறிகின்றோம்; இதை அரசாங்கமும் அறியும் என்று கூறப்படுகிறது.

x x x

'சக்ளா விசாரணை நாடகம்' பற்றி நமது கருத்துக்களை இனிக் கூறுவோம்.

பாராளுமன்றத்தின் விவாதத் தைக் கூர்ந்து கவனித்து வந்த வர்களுக்கு, சக்ளா விசாரணை அறிக்கை பற்றிய இரு வித அபிப்பிராயங்கள் அங்கே நிலவி யது எளிதில் புலனாகும்.

'சக்ளா விசாரணை அறிக்கை ஓர் நீதிபதியின் தீர்ப்பு; எனவே அதை எழுத்துக்கு எழுத்து அங்கீகரித்து, வார்த்தைக்கு வார்த்தை அந்த உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டும்' என் பது ஒரு சிலரின் கருத்து.

'சக்ளா விசாரணை அறிக்கை ஓர் கமிஷனின் அறிக்கையே; அதனுடைய முடிவுகளைப் பரி சீலனை செய்து, ஏற்றுக்கொள் வதை எடுத்துக் கொண்டு, பிற வற்றைப் புறக்கணித்து விடல் வேண்டும்' என்பது பெரும் பாலோர் கருத்து.

பெரும்பாலோர் மாத்திர மல்ல; பாராளுமன்றத்தின்

சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார் உள்பட பலர் ஒப்புக்கொண்ட கருத்து.

அது ஒருபுற மிருக்க, தேசத்தின் மிகப் பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் அட்டார்னி ஜெனரலின் விசித்திர வாதங்களும், விபரீதப் போக்கும் நமது சிந்தனைக்குரியவை.

இன்றைய அட்டார்னி ஜெனரல், காலஞ் சென்ற இன்ஷூரன்ஸ் துறைத் திமிங்கிலமான செதல்வாட் அவர்களின் திருக்குமாரர் என்பதை எண்ணும் பொழுது, அவருடைய விபரீதப் போக்கு நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை.

அரசாங்கத்தின் உயர்தர அதிகாரியாக திரு செதல்வாட் மீது நாம் ஆதாரமில்லாமல் இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்தவில்லை.

இன்ஷூரன்ஸ் ஊழல் குறித்து, திரு. பிரோஸ் காந்தி பாராளுமன்றத்திலே பேசிய உடனே, அவரைப் பாராட்டி, "நீங்கள் ஒருவர்தான் நேர்மையாக அரசாங்கத்தின் ஊழலையும்கொள்கையையும், எதிர்த்து நடந்து கொண்டு இருக்கிறீர்கள்!" என்று கடிதம் எழுதியவரிடம், எத்தகைய கண்ணியத்தை நாம் எதிர்பார்க்க முடியும்?

பயிரையே மேயும் வேலி போல, தானே திருடும் போலீஸ்காரனைப் போல, நமது மதிப்புக்குரிய அட்டார்னி ஜெனரல் அரசாங்கக்கொள்கைகளையே எதிர்த்து வாதாடி இருக்கிறார்.

x x x

வழக்குரைக்க வந்த வக்கீலின் வக்கிரப் போக்கு இப்படியிருக்க, நீதி செலுத்த வேண்டிய நீதிபதி அவர்களோ, தமது எல்லையைத் தாண்டி இருட்டிலே சென்றிருக்கிறார்.

தேசத்தின் கௌரவம் மிக்க நீதிபதிகளில் ஒருவர் திரு. சக்ளா என்பதை நாம் மறுக்கவில்லை. திறமை வாய்ந்த நீதிபதி—நாமும் ஒப்புக் கொள்கின்றோம்.

ஆனால்...? கொடுக்கப் பட்ட பணிக்கு அப்பாலும் சென்று, கமிஷனின் அதிகார வரம்பையும் மீறி, அரசாங்கத்தின் கொள்கை விமர்சனமும், அரசியல் சட்ட மதிப்புரையும் அவர் வழங்க வேண்டியது ஏன்? அவருடைய அறிக்கையில் பெரும் பகுதியை இந்த இல்லாத அதிகாரத்தைச் செலுத்துவதில் திறமையோடு செய்திருக்கிறார்!

அது மாத்திரமல்ல; அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவது மந்திரியின் பொறுப்பு; இது ஜனநாயகத்தின் அரிச்சுவடி மாத்திரம் அறிந்தவர் கூட உணரக் கூடிய உண்மை. அதையும் கூட திரு. சக்ளா மறந்திருக்கிறார் என்று பார்க்கின்றோம்.

'பாலிஸிதாரர்களின் நன்மை கருதி பெறுமானமுள்ள பங்குகளை வாங்குவது அரசாங்கக் கொள்கை' என்று நிதியமைச்சர் கூறுகிறார்.

'மார்க்கெட் நெருக்கடியைத் தவிர்க்க பங்குகள் வாங்கப் படும்' என்று நிதி இலாகா காரியதரிசி திரித்துச் சொல்கிறார்.

அமைச்சர் கூறிய கொள்கை விளக்கத்தைப் புறக்கணித்து, காரியதரிசியாரின் கூற்றை அங்கீகரித்து இருக்கிருர், திரு. சக்ளா.

அத்துடன் இருந்தால் கூட பரவாயில்லையே? 'இந்த விவகாரம் பிரதிவாதிகள் இல்லாத வழக்கு' என்று முதலிலே கூறி, பிறகு 'மூன்று பிரதிவாதிகள் கொண்ட வழக்கு' என்று இடையிலே வர்ணனை வழங்கி இருக்கின்ருர்.

அந்தப் பிரதிவாதிகளில் இருவருக்கு வழக்கறிஞர்கள் வாதாட அனுமதிக்கப்பட்டனர்; நியாயமாக மூன்ருவது பிரதிவாதிக்கும் வக்கீல் வைத்து வழக்காடும் வசதியைத் தாமே அல்லவா வழங்கி இருக்க வேண்டும்?

அதை விடுத்து, மூன்ருவது பிரதிவாதிக்காகப் பேச வந்த திரு. செளத்ரியை, திரு. சக்ளாவும், திரு. செதல்வாடுமாகச் சேர்ந்து நெருக்கியடித்து வெளியேற்றி விட்டது, விந்தை! மிக விந்தை!

இந்த விசாரணையை, நாம் 'நாடகம்' என்ற அடை மொழியால் ஆரம்பத்தில் அழைத்ததில் உள்ள அர்த்த புஷ்டியை இப்பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

x x x

இவ்வாருக, முதலாளிகள் விரித்த வலை, விசாரணைமன்றத்தில் இறுக்கப்பட்டது; ஆனுல் இறுக்கப்பட்ட இந்த வலையைப் பாராளுமன்றத்திலே அறுத்தெறியப் பெரும் முயற்சியும் நடந்தது.

தென்னகப் பிரதிநிதி திரு. தாணுப் பிள்ளை, 'நீதிபதி திரு. சக்ளா அவர்களை சில தொழிலதிபர்களும், சிலபார்லிமெண்ட் அங்கத்தினர்களும், சந்தித்தார்கள்' என்று ஓர் குற்றச்சாட்டைக் கூறினுர். 'அந்த அங்கத்தினர்கள் யார், யார்?' என்று பாராளுமன்றத்தின் லாபி வட்டாரங்களிலே வெளிப்படை ரகசியமாகவே அடிபட்டதாம்.

திரு. தாணுப் பிள்ளை பேசிய பொழுது பலமுறை குறுக்கிட்டவர்களும், அரசாங்கத் தரப்பிலே பேசிய பொறுப்பு மிக்க அமைச்சர்களும் 'இந்தக் குற்றச்சாட்டை ஏன் மறுக்கவில்லை?' என்பது பெரும் மர்மமாகவே உள்ளது!

பாராளுமன்றத்தில் பிரதமர் நேரு 'நிதி அமைச்சர் இந்த விவகாரத்திற்குப் பொறுப்பாளி அல்ல என்ருலும் கூட சூழ்நிலை காரணமாகப் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டது' என்று சிக்கலை அறுத்துத் தீர்ப்பு வழங்கி விட்டார்.

தேசத்திற்கு, மக்கள் தலைவரின் தீர்ப்பே முக்கியம். இந்தக் கண்ணேட்டத்திலே, நிதி அமைச்சரின் நேர்மை நிலை நிறுத்தப்பட்டு விட்டது.

ஊழல் அம்பலமாகி, அதிகாரி எஸ். ஒய். கிருஷ்ணசாமி கோட்டிற்குக் கொண்டு போகப்பட்ட பொழுது அந்த இலாகாப் பொறுப்பில், பட்டேலுக்காக வக்காலத்து வாங்கி 'பட்டேலின் குற்றத்துக்கு அமைச்சரே பொறுப்பு' என்று வழக்குரைத்த திரு. முன்ஷி, அன்று தனது இலாகா அதிகாரியின்

தண்டனை கண்டும். அதிகாரம் துறக்கவில்லை !

குற்றம் ருசுவாகி திரு. எஸ். ஏ. வெங்கட்ராமன் கம்பி எண்ண நேர்ந்த போது, அந்தத் துறை அதிகாரத்திலே அமர்ந் திருந்த திரு. ஸ்ரீ பிரகாசா ராஜி னுமா செய்யவில்லை !

அதிகார பூர்வமாக பட்ஜெட் வெளி வருமுன் திருட்டுத்தன மாக வெளி வந்த பொழுது, நிதி அமைச்சராக இருந்த திரு. தேஷ்முக், கஷாயம் தரித்துக் கொள்ளவில்லை !

இ ரா ணு வ முக்கியத்வம் வாய்ந்த தஸ்தாவேஜிகள் கள வாடப்பட்ட பொழுதும் கூட, மந்திரி சபை 'கூண்டோடு கைலாசமாக' விலகி விட வில்லை !

ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப் பரேஷன் சுயேச்சையான, அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஸ்தாபனம்; அந்த ஸ்தாபனம் 'முந்த்ரா' பங்கு களை வாங்க விரும்பியதாக, திரு. பட்டேல் தெரிவித்த பொழுது, 'அந்த ஸ்தாபனம் விரும்பினுல், பங்குகளை வாங்கு வது பற்றி பரிசீலிக்கலாம்; ஆனுல் முந்த்ரா விஷயத்தில் எச்சரிக்கையோடு, நடக்க வேண்டும்' என்று திரு. டி. டி. கே. கூறியதை எல்லோரும் ஒப்புக் கொள்கிருர்கள்.

ஸ்ரீ உமாச்சந்திரன் பட்நாயக் என்ற மக்கள் சபை அங்கத் தினர் வர்ணித்தபடி, 'ஜீப் ஊழல், சர்க்கரை ஊழல், உர ஊழல், ஆயுதக் கொள்முதல் ஊழல்' எல்லாவற்றிலும் சம் மந்தப் பட்ட காரியதரிசியார் கைங்கர்யத்திற்காக திரு. டி. டி. கே. பதவியைத் துறந்திருக்கா மல் ஒட்டிக் கொண்டு இருந் திருக்கலாம்.

ஆனுல், செய்யாத தவறுக் காக, பம்பாய் முதலாளி வட் டாரத்தினரின் சூழ்ச்சியில் விளைந்த சிக்கலுக்காக, அரசிய லில் சீரிய ஓர் உதாரணத்தை ஏற்படுத்தி ஜனநாயக அமைப்பை உறுதிப்படுத்து வதற்காக, நிதி அமைச்சர் பதவி யைத் துறந்து விட்டார், திரு. டி. டி. கே.

சோதனைத் தீயிலே பாய்ந்து மீண்ட தங்கத் தமிழர் திரு. டி. டி. கே.க்கு நமது பாராட்டுக் களைக் காணிக்கை யாக்கு கின்ருேம்.

மனிதர்களைக் கொன்று தின்று வரும் புலிகள் உலவி வருவ தாக எச்சரித்து சென்னை வந் துள்ளார், திரு. டி. டி. கே.

சோஷலிஸ அமைப்புக்காக உள்ள வரியமைப்புத் திட்டத்தை உடைத்து சாத்திய மானுல் பிரதமர் நேருவையே கவிழ்க்க, தலைநகரிலே முத லாளிகள் முகாமினர் பவனி வரத் தொடங்கி விட்டார்கள்; சூழ்ந்து வரும் இச் சூழ்ச்சி வலையை, அறுத் தெறியும் தைரி யத்தை நேருவுக்கு நாட்டு மக்கள் அளித்தாக வேண்டும்; அப்பொழுதுதான் சோஷலிஸம் பிழைக்கும்; மக்கள் சக்தி வெல்லும்.

நிதி அமைச்சராக திரு. டி. டி. கே.யின் இடத்தில்பொறுப்பேற் றுள்ள பிரதமர் நேரு, சோஷ லிஸம் காண திரு. டி. டி. கே. யால் கொண்டு வரப்பட்டுள்ள எல்லாத் திட்டங்களையும், வரி அமைப்புக்களையும் ஒரு சிறிது

கூட மாருமல் அமுல் நடத்து வார் என நம்புகின்ருேம்.

அதற்கு மாருக, கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கடும் புலி களுக்கு ஏதாவது சலுகைகள் காட்டப்படுமாளுல், அதுவே சோஷலிஸ அமைப்பின் அடிப் படைக்கு வைக்கப்படும் அதிர் வேட்டாக அமையும் என்றும் எச்சரிக்கின்ருேம். அவ்வித விபத்து எதுவும் நேராது நாட்டை நேரு காப்பாற்றுவா ராக!

வடக்கும் தெற்கும் வருந்துகிறது.

பாரதத் தாயின் அடிமை விலங் கொடித்த இரு பெரு வீரர்களை இந்தியத்தாய் சென்ற மாதம் இழந்து விட்டாள். ஒருவர் வடக்கே உள்ள ஒரு உன்னத புருஷர். மற்ருருவர் தென்னகத்தின் தியாக புருஷர். தேச விடுதலைப் போராட்ட காலத்தில் இந்தியத்தாய் பல வீர புருஷர்களை ஈன்றெடுத்து வெற்றி கண்டது. அமரரான வர்களில் ஒருவர் வடக்கே உள்ள அன்புக்குரிய ஆசாத். மற்றவர் தென்னக மக்களின் இதயம் கலந்த உழைப்பின் சின்னமான உத்தம புருஷர் உபயதுல்லா. இருவரும் சீலம் நிறைந்த இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள். இவ்விருவரது மறைவும் இந்தியத் தாய்க்கு எற்பட்ட ஒரு ஈடு இணையற்ற நஷ்டம். இவ்விரு பெரியவர் களின் பிரிவால் வடக்கும் தெற்கும் இன்று வருந்தி நிற் கிறது.

இந்திய மக்களின் இதயங் களில் அழியா அமரத்வம் பெற்று விட்ட அவர்களின் திரு நாமம் என்றென்றும் வாழ்க!

அட்டைப் பட விளக்கம்

"...ஆங்கப் பொழுதிலென்
பின்புறத்திலே,
ஆள்வந்து நின்றெனது
கண்மறைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந்
தீண்டியறிந்தேன்,
பட்டுடை வீசுகமழ்
தன்னிலறிந்தேன்.
ஓங்கி வருமுவகை
யூற்றிலறிந்தேன்;
ஒட்டும் இரண்டுளத்தின்
தட்டிலறிந்தேன்......"

என்ற இருகாதலர்களைப் பற்றிய பாரதியாரின் பாடலில் பொதிந் திருக்கும் காட்சிதான் இவ் விதழ் அட்டையை அழகுறச் செய்கிறது.

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்.

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்குப்

உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

பிற நாட்டுத் தமிழறிஞர் பேட்டி

டாக்டர் கமில் ஸ்வெலபில்

— கன்னிக் கண்ணன் ☆

பளபளப்பான மேனி, சுறு சுறுப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் 'திரு திரு' வென்று எதையோ துருவிப் பார்ப்பது போன்ற சுடர்விடும் கண்கள், புன் முறுவல் பூத்த முகம், அந்த முறுவலின் சிரிப்பொலியில் பிரதிபலிக்கும் தங்க ஒளி. (தங்கப்பல் சிலவற்றைத் தான் குறிப்பிடுகிறேன்) மேதைத் தன்மையைக் காட்டுகின்ற பரந்த நெற்றி. "வாருங்கள் வணக்கம்!" என்று இதயங் கலந்த அன்பொலி நிறைந்த வரவேற்கும் தன்மை. இத்தனையும் கதைகளிலோ, நவீனங்களிலோ வரும் கதாநாயகனைப் பற்றிய வருணனையல்ல. பிற நாட்டில் தமிழ் வளர்க்கும் ஒரு பிற நாட்டுப் பேரறிஞனைப் பற்றிய படப் பிடிப்புத் தான்.

அவர்தான் பூத்து மலரும் பொது உடமைப் பூமியான செக்கோஸ்லோவோக்கிய நாட்டிலிருந்து தமிழகம் வந்திருக்கும் தமிழறிஞர். அவர் பெயர் தான் டாக்டர் கமில் ஸ்வெலபில். கமில் ஸ்வெலபில் என்று அவரை அழைப்பதைவிட, 'தமில் ஸ்வெலபில்' என்று அழைப்பது தான் சாலச் சிறந்தது என்பது எனது கருத்து. அந்த அளவுக்கு அவர் தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறார் - செய்து கொண்டிருக்கிறார் இன்னும் நிரம்பச்செய்யப் போகிறார்.

தமிழன்னையின் அன்புத் திருவடியிலே பிறந்து, அவளது அன்பு அரவணைப்பிலே வளர்ந்து, வாழ்ந்து வரும் தமிழர்கள்கூட தமிழை, தமிழ் தாயை, தமிழகத்தை மறந்து, பிரிந்து, ஆங்கிலம் போன்ற அந்நிய மொழிகளைக் கற்று தமிழ் பேச 'வெட்கமாக' இருக்கிறது என்று சொல்லும் நிலையில் ஒரு அந்நிய நாட்டவர் தமிழைக் கற்றுத் தேர்ந்து தமிழறிஞராக வாழ்ந்து, தமிழன்னையின் தவத் திருவடிகளுக்கே தன்னை அர்ப்பணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று, சொல்கிறாரென்றால் உண்மையில் அவர் 'தமிழ் ஸ்வெலபில்' தானே!

31-வயதுக்குள்ளேயே மேதைத் தன்மையை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் அந்தத் தமிழ் அன்பரை 'புதுமை' யின் சார்பில் தமிழன்பர்களுக்காக பேட்டி காணும் பேறு கிடைத்ததை மிகவும் பெருமையாகவே எண்ணுகிறேன்.

அன்று காலை - அதுதான் சென்ற பிப்பரவரி மாதம் 8-ம் தேதி காலை எட்டு மணிக்கு முன்னேற்பாட்டின்படி அவரது ஜாகையில் சந்தித்தேன். அவரது அறைக்குள் நுழைந்ததும் "வாருங்கள், வணக்கம்"

என்ற நல்ல தமிழ்ச் சொற்களா லேயே என்னை வரவேற்ற காட்சி உண்மையிலேயே என் இதயத்தில் இன்பத்தைச் சுரக்கச் செய்தது என்று சொன்னால் மிகையாகாது. 'புதுமை'யை அவர் கையில் கொடுத்ததும் ''புதுமைக்கு எனது அன்பார்ந்த வாழ்த்துக்கள்'' என்று தமிழிலேயே எழுதி அதில் தமிழி லேயே கையெழுத்திட்டுத் தந்தார். அவரது இந்த அற்புதச் செயல் என்னை ஆச்சரியத்தின் கொடு முடிக்கு அழைத்துச் சென்று விட்ட தென்றால் பாருங்களேன். அந்த அவரது வாழ்த்தை - அந்த முத்து முத்தான கையெழுத்தை நீங்களும் பார்த்துப் பெருமை கொள்ள வேண்டு மென்பதற்காகவே கீழே பிரசுரித்திருக்கிறேன்.



எங்கள் பேட்டியை ஆரம்பிக்கும் தறுவாயில் பாரதி நிபுணர் ஒருவர் சிவ பூஜையில் கரடி புகுந்தாற் போல் அங்கு வந்து சேர்ந்தார். பாரதியைப் பற்றிப் பாதியும், தன் பிரதாபங்களைப் பற்றிப் பாதியுமாக பிரசங்கம் செய்யத் தொடங்கியவர் இரண்டரை மணி நேரமாகியும் விட்டபாடில்லை. உண்மையில் அவர்மீது எனக்குக் கொஞ்சம் ஆத்திரம் தான். நல்லவேளை யாக சுமார் 12 மணிக்கு தமது பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டதற்காக அவருக்கு ஒரு நன்றி தெரிவித்து விட்டு என் பேட்டியை ஆரம்பித்தேன்.

பேட்டியை ஆரம்பிப்பதற்கு முன்னே டாக்டர் கமில் எனக்கு ஒரு எச்சரிக்கை தந்தார்.

''தயவு செய்து நீங்கள் தமிழிலேயே பேச வேண்டும்.'' இது தான் அவர் தந்த அந்த எச்சரிக்கை.

''எதற்காக இப்படிக் கூறினீர்கள் என்று கேட்டேன்.''

''தமிழகத்துக்கு வந்ததின் முக்கிய நோக்கமே தமிழ் மொழியை நன்றாக உச்சரித்துப் பழகவேண்டும் என்பதற்காகத்தான். தன்னந் தனியாக சுயமுயற்சியிலேய தமிழ் கற்ற எனக்கு, கற்ற அந்த அருமையான மொழியை மற்றவர்களுடன் பேசிப் பழகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. தமிழகத்துக்கு வந்து தமிழர்களோடு பேசிப் பழகினால் நல்ல முறையில் உச்சரிக்க முடியும் என்றெண்ணியே தமிழகத்துக்கு வந்தேன். ஆனால் எனக்கு கிடைத்தது பெரும் ஏமாற்றம் தான். என்னைச் சந்தித்த அனைவரும் என்னிடம் ஆங்கிலத்திலேயே பேச முயற்சிக்கின்றனர். அந்த முயற்சியில் தாங்களும் ஈடுபட வேண்டாமென்று தான் அந்த அன்புக் கட்டளையைப் பிறப்பித்தேன்'' என்றார்.

உண்மையில் என் நெஞ்சம் பெருமையால் விம்மிப் பெருகியது. அவரை கட்டித் தழுவிக் கொண்டேன்.

இதைத் தொடர்ந்து எங்கள் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தோம். நான் சில கேள்விகளைக் கேட்க, அவர் அதற்குத் தகுந்த பதில்களை அடுக்கிக் கொண்டே சென்றார்.

நான்: தங்களுக்கு எப்படி இந்த திராவிட மொழி ஆர்வம் ஏற்பட்டது ?

அவர் : பிரஞ்சு, அமெரிக்கா, ஆக்ஸ்போர்டு, ஹாலண்டு ஆகியஇடங்களில் திராவிட மொழி அறிஞர்கள் இருப்பதாகத் தெரிந்ததும், மத்திய ஐரோப்பாவில் அந்தக்குறை இருப்பதாக உணர்ந்தேன். மத்திய

ஐரோப்பாவின் இக்குறையைப் போக்கவே தமிழை கற்றுத் தேற வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் உதயமாயிற்று.

நான்: திராவிட மொழிகளில் முக்கியமாக தமிழைத் தேர்ந்தெடுத்ததேன் ?

அவர்: ஏனைய த் திராவிட மொழிகளோடு தமிழை ஒப்பிட்டுப் பார்த்ததில் தமிழுக்கு இலக்கணம் என்ற உறுதியான அடிப்படை இருப்பதாக அறிந்ததாலும் சிறந்த அழியா அமரத்வம் பெற்ற இலக்கியங்கள் நிரம்ப உண்டு என்று தெரிந்திருந்ததாலுமே தமிழை விசேஷமாய் படித்து பாண்டித்தியம் பெறவேண்டுமென்று எண்ணியே தமிழைத் தேர்ந்தெடுத்தேன்.

நான்: எப்படி தமிழைப் படிக்க ஆரம்பித்தீர்கள் ?

அவர்: இந்திய ஸ்தானிகராலயத்தில் பணிபுரிந்து வந்த திரு நாகேஸ்வரன் அவர்களின் மேற்பார்வையில் தமிழ் பாலபாடங்களின் துணை கொண்டு தமிழைப் பயில ஆரம்பித்தேன். ஓரளவு கிடைத்த ஓய்வுநேரங்களில் திரு நாகேஸ்வரன் அவர்களுடன் அளவளாவியதின் மூலம் தமிழைச் சுமாராகப் பேசவும் பழகிக் கொண்டேன்.

நான்: தாங்கள் செக் மொழியில் மொழி பெயர்த்த தமிழ் நூல்கள் எத்தனை ?

அவர்: எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கியங்களை முதன் முதலில் மொழி பெயர்த்தேன். அதைத் தொடர்ந்து 'புதுமைப் பித்தன்' 'வல்லிக் கண்ணன்', 'விந்தன்' 'ரகுநாதன்' 'தூரன்' ஆகியவர்களின் சிறு கதைகளில் சிலவற்றையும், பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியவர்களின் கவிதைகளில் ஒன்றிரண்டையும் மொழி பெயர்த்துள்ளேன். இவற்றிற் கெல்லாம் நான் எதிர்பார்த்ததை விட அபரிமிதமான வரவேற்புக் கிடைத்தது எனது நாட்டில். ரகுநாதன் அவர்களின் "பஞ்சும் பசியும்" என்ற நாவலையும், "புதுமைப் பித்தன் அவர்களின்" வாக்கும் வக்கும்" என்ற நாடகத்தையும் எங்கள் மொழியில் பெயர்த்துள்ளேன். ரகுநாதன் அவர்களின் "பஞ்சும் பசியும்" என்ற நாவலின் மொழி பெயர்ப்பு மட்டும் ஒரு வாரத்திற்குள் 30400 பிரதிகள் விற்பனையாகி யிருக்கிறதென்றால் எனக்குக் கிடைத்த வெற்றியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

நான்: இப்போது எந்தெந்த நூல்களை மொழி பெயர்க்க முனைந்துள்ளீர்கள் ?

அவர்: சிலப்பதிகாரம் என்ற பெரும் காப்பியத்தையும், தமிழ் நாடோடிப் பாடல்களையும் மொழி பெயர்க்க முனைந்துள்ளேன்.

நான்; தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சிகள் எதையும் செய்து வருகிறீர்களா ?

அவர்: பராகில் இருக்கும் செக்கோஸ்லோவாக்கியா விஞ்ஞான கழகத்தின் மொழிப் பயிற்சி நிலையத்தில் திராவிட மொழிகளின் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் எனக்கு பொதுவாக திராவிட மொழி களைப் பற்றியும் குறிப்பாக தமிழைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்துவதுதானே எனது தொழிலாக இருக்கமுடியும்.

நான்: தாங்கள் இங்கு வந்திருப்பது எந்த அரசாங்கத்தின் உதவியின் பேரில் ?

அவர்: உங்கள் அரசாங்கத்தின் உதவியின் பேரில் தான் நான் இங்கு வந்துள்ளேன்.

நான்: கட்சிக் கொள்கை கண்ணோட்டங்களில் தாங்கள் தங்கள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியை செய்யப் போகிறீர்களா ?

அவர்: அப்படி எந்தவிதமான கண்ணோட்டங்களிலும் என் ஆராய்ச்சி இருக்காது. தமிழ் இலக்கியமும் தமிழ் மக்களும் எனக்குப் பொதுவானவர்கள். எனவே

என்து ஆராய்ச்சிகளும் பொது வாகவே இருக்கும்.

நான்: பராகில் தங்கள் திரா விட மொழி கல்வி நிலையத்தில் எத்தனை மாணவர்கள் படித்து வரு கிருர்கள் ?

அவர்: மூன்று மாணவர்கள் !

நான்: சென்ற ஒரு வார கால மாக தமிழர்களுடன் நெருங்கிப் பழகியதில் தங்களுக்கு ஏதாவது புது அனுபவங்கள் ஏற்பட்ட துண்டா ?

அவர்: நானும் தமிழனுகவே மாறிவிட்டதைப் போன்ற ஒரு உணர்ச்சிதான் ஏற்பட்டது. தமிழர்கள் பண்பாட்டிற்கும், பழக்க வழக்கங்களுக்கும்பேர்போனவர்கள் என்பதை அறிந்து கொண்டேன். அவர்களது அன்பு உள்ளம் அலைபுரளும் அகழியை விட ஆழ மானது. அவர்களது உபசரிக்கும் தன்மை உங்கள் இமயத்தை விடவும் மிக உயர்ந்தது. இதுதான் தமிழன்பர்களைப் பற்றிய எனது அபிப்பிராயம். ஆனல், என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர் களோ ?

நான் : தாங்கள் கமில் ஸ்வல பில் அல்ல. நல்ல் தமிழ் ஸ்வலபில் என்று தான் நினைக்கிருேம்.

நான் : தமிழ் நாடகங்களைப் படித்திருக்கிறீர்களா ?

அவர் : படித்திருக்கிறீர்களா என்ரு கேட்கிறீர்கள். நான் பார்த்து ரசித்தே விட்டேன்.

நான் : என்ன நாடகம் பார்த் தீர்கள் ?

அவர் : ராஜ ராஜ சோழன் !

நான் : "ழ" வை இப்படி அழகாக உச்சரிக்கிறீர்களே. அது எப்படி சாத்தியமாகிறது ?

அவர் : வாளைப்பளம் நளுவி கீலே விளுந்து விட்டது என்று நான் சொல்வதில்லை. வாழைப் பழம் நழுவி கீழே விழுந்து விட்டது என்றுதான் சொல்கிறேன். கோபித் துக் கொள்ளாதீர்கள்.

நான் : ராஜ ராஜ சோழன் நாடகத்தை தங்களால் ரசிக்க முடிந்ததா ?

அவர் : ஒவ்வொரு பாத்திரங் களின் நடிப்பும் என்னை உணர்ச்சிப் பிழம்பாக மாற்றி பரவசப்படுத்தி விட்டது.நாடகத்தின்காட்சிஅமைப்பு கள், ஜோடனைகள், நடிப்பு, பாட்டு அனைத்தும் எனக்கு 'தேவ லோகக் கனவு போல்' இருந்தது.

நான் : சங்க கால இலக்கிய ஆராய்ச்சியுடன் இன்றைய இலக் கிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபடும் எண்ணம் உண்டா ?

அவர் : மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 'புதுமைப் பித்தன்' ஆகியவர்களின் 'சிருஷ்டி'களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய எண்ணி யுள்ளேன்.

மணி சரியாக ஒன்றடித்தது. அவர் என்னை ஏறிட்டுப் பார்க்தார். "நான் அத்துடன் நம் பேட்டியை முடித்துக் கொள்கிறேன்" என்ற தற்கு "இன்னும் ஏதாவது..." என்று அவர் கூறி முடிப்பதற்குள் "விட்டுப் போயிருந்தால் இன் ெருரு நாள் சந்திக்கிறேன்" என்று சொல்லி வைத்தேன். "அப்படியே செய்வோ"மென்ருர். 'வருகிறேன்' என்று கரம் கூப்பினேன். "வணக் கம். சென்று வாருங்கள்" என்று இன்பத் தமிழிலேயே விடை கொடுத்தார்.

குமாரி இராதா நாட்டிய அரங்கேற்றம்.

பாளை. ஓய்வுபெற்ற ஜட்ஜ் ஸ்ரீ. T. A. சுப்பையா பிள்ளையின் குமாரர் திரு. T. S. அனவரதம் பிள்ளை (தஞ்சை உதவி ஜட்ஜ்) புதல்வி குமாரி **இராதாவின்** நாட்டிய அரங்கேற்றம் தஞ்சை யில் 15-2-58ல் நடைபெற்றது.

வளர்க, குமாரி இராதாவின் கலைத்தொண்டு !

கண்ணைப் பறிக்கும் வர்ண வகைகளில் உங்கள் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே எங்கள் சேவையில் இன்பமான பகுதி !

சிவகாசி

இண்டஸ்ட்ரியல்
பிரின்டிங் ஒர்க்ஸ்

லித்தோ பிரிண்டர்ஸ்,
சிவகாசி, தென் இந்தியா.

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்த புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல் இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூ. 5/- V.P. செலவு ரூ. 1-20

வாணி தமிழ் ஹிந்தி ஆசான்

தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தாமாகவே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூ 2-25 V.P. செலவு 75nP.

தையற்கலை நீங்கள் கற்றுக்கொண்டீர்களா ?

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் ஒத்தாசையில்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். 60க்கு மேற்பட்ட படங்களுடன் வெட்டித் தைக்கும் முறை தமிழ் விளக்கத்துடன் உள்ள புஸ்தகம்.

விலை ரூ. 3/- V.P. செலவு ரூ. 1/-

NATHAN BOOK DEPOT.,
9, Krishnappa Maistry St.,
Madras-3.

She dares to be different!

She's the "glamour girl" who likes to be noticed! She's first with every smart beauty trick and fashion. The one and only Max Factor Pan-Cake* Make-Up is her foundation for glamour. You, too, can have fresh, smooth, flawless complexion beauty that will make heads turn. Lanolin-rich Pan-Cake can't dry your skin, feels fresh and light *all day long.* 12 luscious shades to choose from. Ask for Max Factor's Pan-Cake Make-Up at your favorite department or drug store cosmetic counter.

PAN-CAKE
Make-Up
by MAX FACTOR
HOLLYWOOD

*Pan-Cake (trademark) means Max Factor Hollywood cake make-up



கு. ப. சேதுஅம்மாள்

அத்தியாயம் 11

ஆறுமுகம்

சுகம், சந்தோஷம் இவற்ருல் மகிழ்வு கொள்வது மனித இயல்பு. துன்பமும், அவமானமும், கோபமும், துக்கமும் வரும் சமயம் உணர்ச்சி வசப்பட்டு தன் நிலை தவருமலிருப்பவர்கள் மிக அபூர்வம்.

அப்படிப்பட்ட அபூர்வ மனிதர்களில் ஏழை உழவனுகிய கந்தப்பனும் ஒருவன்! தன்னைக் கெடுத்தவனைக் கூட வையத் தெரியாத பரமார்த்தி! அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது, கையெழுத்துப் போடுவதற்காக, 'கந்தப்பன்' என்ற எழுத்துக்களை மணலில் எழுதிப் பழகியவன்!

தன் தம்பியின் சுபாவமும், கோபமும் கண்டு கந்தப்பன் அந்த வேகத்தில் அவன் வெளியே போகக் கூடாது என்ற யோசனை உதித்ததும், "டேய் ஆறுமுகம், வா இப்படி," என்று ஒரு அதட்டல் போட்டான் கந்தப்பன்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கூவிய கந்தப்பனுடைய குரல் ஆறுமுகத்தைத் தடுத்து நிறுத்தி உள்ளே திரும்பச் சொல்லிற்று. கந்தப்பன் எதிரில் வந்து நின்று கோபத்துடன், "என்னவாம்?" என்ருன் விறைப்பாக.

"தம்பி, ஆத்திரப்படாதே பொறு, கோபம் பொல்லாதது. அதனுல் நமக்கே தீமை விளையும். இது இப்படியே அடங்கிப் போகட்டும். ஐயர் ஊரிலிருந்து வந்தப்புறம் ஒரு நாள் கூட்டிக் கொண்டு போ. 'வயசு வந்த பெண். இனிமேல் அக்கிரகாரம் கூட்டப்போனுல் நன்ருகயிராது,' என்று சித்தப்பா சொல்லுகிருர் என்று வள்ளியம்மாளைச் சொல்லச் சொல்லி விட்டு அழைத்துக் கொண்டு வந்துவிடு. தீர்ந்தது விஷயம்," என்ருன் கந்தப்பன்.

"ஓகோ, இதற்கப்புறமும் அந்த வீட்டு வாசற்படியேறிப் போய் விட்டு வரச் சொல்லுகிருயா மகளை?" என்று சீறினுன் ஆறுமுகம்.

தெருவோடு நடந்து கொண்டிருந்த நாகலிங்கம் ஆறுமுகத்தின் உஷ்ணமான பேச்சைக் கேட்டுவிட்டு உள்ளே வந்தான். சொட்டச் சொட்ட ஈரப் புடவையுடன் நின்று அழுது கொண்டிருந்த வள்ளியைப் பார்த்து திடுக்கிட்டவனுக, "என்ன என்ன சங்கதியம்மா?" என்ருன்.

வள்ளியின் கண்கள் மீண்டும் நீரைக் கொட்டலாயின!

"என் பொல்லாத கிரகமடா நாகு! இன்னும் எவ்வளவு

நாளைக்கு இந்த வேதனையெல்லாம் அனுபவிக்க வேண்டுமோ?''

கந்தப்பன் பேச்சை இடைமறித்து நெருப்பாக ஒரு சிரிப்பைச் சிந்திவிட்டு ''அந்தத் தென்பாதி வீட்டுப் பூண்டு ஒன்று இருக்குது பார் நாகு—அது கதவையெல்லாம் அடைத்துக் கொண்டு கையைப் பிடித்துக் கொண்டானாம். சாகத் துணிந்து கிணற்றில் குதித்திருக்கிறாள். உயிர் போகு முன்பு ஜனங்கள் கரையேற்றி விட்டு விட்டார்கள்; வந்து நிற்கிறாள்! அவ்வளவுதான் சங்கதி!'' என்று சொன்னான் தணியாத ஆத்திரத்துடன்.

''வீட்டில் அந்தக் கிழவியம்மாள் இருப்பாளே'' 'இல்லை 'யென்பது போலத் தலையசைத்தாள் வள்ளி.

''என் பாவம் அப்படி, நன்றாக இருந்த கையும் காலும் கூட நேற்று இரவிலிருந்து நரம்பெல்லாம் சுண்டியிழுக்கிறது. வலி தாங்காமல் துடித்தேன். 'அம்மா வீட்டிலேயிருந்து தைலம் வாங்கி வந்து தடவி ஒத்தடம் போடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போனாள்! அங்கே அம்மாயில்லை''

''ஊம், சரி. தென் பாதியான் வீடு பாழடையப் போகிறது. போம்மா, நீ போய் துணியை மாற்றிக் கொள். உன் கண்களிலிருந்து வழிகிறதே அது தண்ணீரல்ல, ரத்தம்! அது பழி தீர்த்துக் கொள்ளும். உள்ளே போ,'' என்றான் ஆறுமுகம்.

வள்ளி உள்ளே சென்றதும், நாகலிங்கம் ஆறுமுகத்தைப்பார்த்து, ''வாருங்கள். இப்படி கொஞ்சம் நடந்து விட்டு வரலாம்'', என்று கூப்பிட்டான்.

இருவரும் கிளம்பி வெளியேறியதும் கந்தப்பன்நாகுவைக் கூப்பிட்டு, தம்பி நாகு, பதருத காரியம் சிதரு து என்று சொல்லுவார்கள் பெரியவர்கள். ஆத்திரப்படாதிர்கள். ஆறுமுகத்தைக் கொஞ்சம் பதப்படுத்திவை '' என்ருன் நல்லதனமாக.

''ஆகட்டும் மாமா. கொஞ்சம் படுத்து இளைப்பாறுங்கள் '' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான் நாகு.

''என்ன உளறுகிறது கிழம்?'' என்று உறுமினுன் ஆறுமுகம்.

'' அந்தக் காலத்து மனிதரு. அவரைச் சொல்லக் குற்றமில்லை—''

'' பெற்ற மகள் சாகத் தெர்ந்தாளே என்கிறதைக் காணேம்; தென்பாதியானுக்குத் தலையிறக்கம் வந்து விடுமே என்று கவலைப் படுவதைப் பார்த்தாயா ?'' என்று வயிற்றெரிச்சலுடன் கேட்டான் ஆறுமுகம்.

'' அதுதான் சொன்னேனே ஒரு வார்த்தையிலே! ஐயர்மாரைக் கண்கண்ட தெய்வமாகக் கும்பிட்ட பழக்கம் அல்லவா ?'' என்று விளக்கினுன் நாகு.

''ஒழியட்டும், அதைத் தள்ளுதூர, இப்போது ஆக வேண்டியதைப் பற்றி என்ன யோசனை ?'' என்று யோசனையோடு கூட வினவினுன் ஆறுமுகம்.

'' வேறே என்ன, வீட்டை விட்டு வெளியேருமல் வைத்திருந்து முதல் வேலையாக அதைக் கட்டிக் கொடுத்து விட வேண்டியதுதான் ''

'' அது அப்புறமல்லவா நாகு இப்பொழுது அந்தப் பயலை சும்மா விட்டுவிடுகிறதா ?''

'' விடாமல் என்ன பண்ணுவதாம் ?''

'' விட்டு விட்டால் ஊரிலிருக்கிற அறியாப் பெண்களையெல்லாம் பாழாக்கி விடமாட்டானு ! ஒன்று அவன் சாக வேண்டும், அல்லது நான் சாக வேண்டும். இரண்டில் ஒன்று......''

"அவ்வளவுக்கு முற்றவில்லை விஷயம்..."

"முற்ற விட வேண்டும். இனிமேல் அதுதான் என் வேலை. என்னப்பா இது! மனிதன் என்று இருந்தால், நல்லது, பொல்லாதது பார்க்க வேண்டாமா? கட்டுப்பாடு, நியாயம், நீதிக்குக் கட்டுப்பட வேண்டாமா?" என்று நெஞ்சுக் கொதிப்புடன் படபடத்தான் ஆறுமுகம்.

நாகு ஒன்றும் பேச வில்லை. அவன் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஆறுமுகம் மேலும் பேசத் தொடங்கி, "நாகு, இன்னொன்றும் இந்த வேக்காட்டிலேயே சொல்லி வைக்கிறேன்; ஆறு மாதப் பிள்ளையிலேயே தாயில்லாமல் போய்விட்டதால், என் தோளிலும், மார்பிலும் சுமந்து இந்த வள்ளியை வளர்த்தெடுத்தேன். என் உயிரை விட எனக்கு அவள் அருமை. யோக்கியப் பொறுப்பும் நாணயமுள்ள உன்னைத்தான் அவளுக்கு ஏற்ற புருஷனாக என் மனதுக்குள் திட்டம் பண்ணி வைத்திருக்கிறேன். நீ பெறப் போகிற சரக்கு அது. அந்த நினைப்பில் தலை போனால் தலை கொடுக்க வேண்டும் நீ. அதனால் நீ சாக நேரிட்டாலும் சரிதான், என் மகள் கன்னி கழியாமல் நிற்கட்டும்; சாகட்டும்; பரவாயில்லை! செய்வாயா நாகு?" என்று கேட்கும்போது ஆறுமுகத்தின் குரலில் வீரிய உணர்ச்சியும், தன்மானமும் பொங்கி வெளிப்பட்டது.

நாகு ஒரு முறை உலுக்கி விழுந்தான்! அவன் உடலும் உள்ளமும் பரவச உணர்ச்சியால் புளகாங்கித மடைந்து மயிர்க் கூச்சிட்டது!

புல்லின் புதிய துளிர் போல, உள்ளடங்கி சிறியதாகவும், ஆனால் கூரியதாகவும் பரம ரகசியமாகத் தன்னுள் இது காறும் வளர்ந்து கொண்டிருந்த ஒரு இன்ப நினைவை—நினைவு சித்திக்குமா என்ற ஏக்கத்திலும் உழன்று வந்த நாகு, ஆறுமுகத்தின் வாயால் 'அவள் உன் சரக்கு' என்று சொன்ன சொல் அவனுடைய புலன்களில் சூடேற்றி எழுப்பி விட்டது! அந்த ஆனந்தத்தில் பேசக்கூடத் தோன்றாமல் மௌனமாக நடந்தான் நாகு.

"என்ன நாகு பதிலையே காணோமே?" என்று ஆறுமுகம் கேட்ட பிறகு "அப்படியே செய்கிறேன் மாமா," என்றான் புல்லரிப்புடன். போகும்வழியிலிருந்த வாராவதியின் மீதமர்ந்து இருவரும் வெகு நேரம் வரையில் இதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

இருள் பரவிக் கொண்டு வருவதைக் கண்ட நாகு, எழுந்து "வாருங்கள், அங்கே வள்ளியம்மாள் என்ன செய்திருக்கிறாளோ என்னவோ, வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு போனால் போச்சு," என்று கூறியபடி ஆறுமுகத்தை அழைத்தான் நாகு.

அவனுடைய அழைப்பை மறுக்கக் கூடாது என்று அவனுடன் சென்று சாப்பிட்டதாகப் பெயர் செய்து விட்டு எழுந்து விடைபெற்றுக் கொண்டான் ஆறுமுகம். "பெரியவர் கூட ஒன்றும் பேச்சு வைத்துக்

கொள்ளாதிர்கள். நாளைக்கு நாம் மேற்கொண்டு செய்ய வேண்டியதை யோசிப்போம். உங்களைக் காணுமே என்று கவலையும், திகிலும் படுவார் அவர். சீக்கிரம் வீடு போய்ச் சேருங்கள்,'' என்று சொல்லி ஆறுமுகத்தை அனுப்பினுன் நாகு.

காலையில் பத்து மணிக்குக் கோயிலுக்கு கிளம்பிய கமலம் பிற்பகல் மூன்று மணிக்கு வீடு திரும்பி வந்து கதவை யிடித் தாள்.

துரை வந்து கதவைத் திறந் ததும் "சாப்பிட்டாயோ துரை?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் கமலம்.

''ஊம்'' என்றவாறு கதவைத் தாளிட்டான் துரை.

'' தாழ்ப்பாள் போடாதே, திறந்து விடு. அந்தக் குட்டி வேலைக்கு வரும் நாழிகை யாகி விட்டது...'' என்று சொல்லிக் கொண்டே அலுப்புடன் ஊஞ் சலில் அமர்ந்தாள் கமலம்.

'' அது வந்தாகி விட்டது; கிணற்றில் விழுந்தாகி விட் டது......''

'' ஐயையோ, எங்கே அவள்? பிழைத்தாளா, இல்லையா ?''

'' பிழைக்காமல் என்ன கேடு,''

'' அகாலத்தில் எங்கே வந் தாள்? கிணற்றிலே விழுவா னேன் ?''

'' யார் கண்டார்கள் ?''

'' அப்பொழுது நீ வீட்டிலில் லையா ?

'' இருந்தேன்,''

''என்னடா விளையாடுகிருய்? நிஜத்தைச் சொல், என்ன ஆச்சு ?'' என்று கோபத்து டன் கேட்டாள் கமலம்.

'' என்னத்தைச் சொல்வது? கொழுப்பெடுத்த கிடாரி அது. அவள் இஷ்டத்திற்கு நான் இணங்கவில்லை என்பதற்காக என் தலையில் பழியைப் போட கிணற்றிலே குதித்து விட்டாள் அவள்!'' என்றுன் துரை.

கமலத்தின் கோபம் கரை கடந்து விட்டது.

'' டேய், உன்னைக் குற்றம் சொல்வதை விட என் புத்தி யைச் செருப்பாலடிக்க வேண்டு மடா! இப்பொழுது எங்கே வரப் போகிருள், அவள் வேலைக்கு வருமுன்பு நாம் வந்து விடலாம் என்று அதனி டம் ஒரு வார்த்தை சொல்லாமல் போய் விட்டேன் பாவி ! பொய் சொன்னுலும் பொருந்தச் சொல்ல வேண்டுமடா! நான் கூட முதலிலெல்லாம் அவள் மேல் சந்தேகந்தான் பட்டேன். அப்புறம் அப்புறம் கவனித்த தில் உன்னிடம்தான் சூது இருந் தது! திருட்டுத்தனமும் இருந்தது. நீ சொல்லாவிட்டால் நான் சொல்லுகிறேன் கேளு; ஏதோ கேட்பதற்காக வந்தி ருப்பாள் அவள். நீ உன் கை வரிசையைக் காட்டியிருப்பாய்! அவள்மானிக்குப் பிறந்த குட்டி. மானம் தக்கினுல் போதும் என்று கிணற்றில் குதித்திருக் கிருள்! இதற்கு இடம் கொடுத்து விட்டுப் போய்விட் டேனே படு பாவி. நாளைக்கு உன் அப்பனுக்கு என்ன வழி சொல்வது? குடியானவர்களின் கூட்டம் அவ்வளவும் ஒன்று சேர்ந்துவிடுமே. என்ன விபரீ தம் இருக்கிறதோ பகவானே?'' என்று நெஞ்சு பதற அப்படியே உட்கார்ந்து விட்டாள் கமலம்.

அத்தியாயம் 12

ஆற்ருமை

பிற்பகல் நேரம்:-

கால்வாய் கரை மாமரத்து நிழலில் கயிற்றுக் கட்டில் போட்டு அதில் படுத்திருந்தான் சோமு. பாதி படித்த புத்தகம் பிரித்தவாறு அவன் மார்பின் மீது கவிழ்ந்து கிடந்தது. மாமரத்தின் மீது பார்வையைச் செலுத்தி யோசனையிலாழ்ந் திருந்தான் அவன்.

எருமைகளைக் குளிப்பாட்டுவதற்காக ஓட்டி வந்து கால்வாயில் இறக்கிவிட்டு சோமுவிடம் வந்து, "அம்மா உன்னை காபி சாப்பிட வரச் சொன்னுர்கள் சோமு," என்ருன், நாகு.

சோமு அதை அலட்சியம் செய்து, "ஏன் நாகு, நீ அக்கரை சீமையில் கற்றது இவ்வளவு தானு? இன்னு மிருக்கிறதா?" என்று புன்னகையுடன் கேட்டான் சோமு-

"ஏன இப்படிக் கேட்கிருய் சோமு?"

"உன் சாமர்த்தியத்தைக் கண்டுதான் கேட்கிறேன்."

"உன் கேள்வி புரிந்தால் தானே பதில்சொல்ல?"

"இதற்குப் பெயர்தான் 'வித்தாரம்' என்பது போகிறது. புரியும் படியாகக் கேட்கிறேன், இவ்வளவு தடபுடல் நடக்கிறது துரையின் வீட்டில். ஒன்றுமே தெரியாதவன் மாதிரி 'கப் சிப்' என்று இருக்கிருயே, என்ன காரணம்?"

"என்னவென்று சொல்லச் சொல்லுகிருய் சோமு. நல்ல செய்தியாக இருந்தால் சொல்லி சந்தோஷப்படலாம். நமக்கு ஜன்மசத்துரு தென்பாதிக்காரன். இருந்தாலும் அவா பெயரைக் கெடுக்க இப்படி ஒரு பிள்ளை வந்து பிறந்திருக்கிறது என்ற கவலையிலிருந்து நான் இன்னும் மீளவில்லை."

"கவலைப்படுவதிருக்கட்டும். இப்பொழுது அந்தக்குட்டி இங்கேதானே இருக்கிருள்?"

"பின்னே? மைனருக்குப் பயந்து அவள் எங்கே ஓடிப் போகிறது?"

"அதுசரி. இது இத்துடன் போகுமென்று தோன்றவில்லை எனக்கு" என்று வார்த்தையை விட்டு நாகுவின் வாயிலிருந்து வார்த்தையை வரவழைக்க முயன்ருன் சோமு.

அவன் வாயைத் திறக்கவில்லை.

"ஆறுமுகம் ஒரு முரடன். சரியான வேளாளன். நினைத்துப்பார்த்தால் பயமாக இல்லை நாகு?"

நாகு திணறினுன்!

"என்ன, மூச்சே விடக்காணுமே அப்பா!"

"எனக்கே ஒன்றும் தோன்றவில்லை சோமு. விதிவிட்டவழி" என்ருன் நாகு மையமாக.

"விதியாவது மண்ணுவது? சும்மா இருந்தோமானுல் ஊரில் கொலை விழும் நாகு!" என்று சோமு கூறியதும் நாகுவுக்கு ஆத்திரம் பொங்கியது.

ஆனுலும் அதை அப்படியே அடக்கி விட்டு சர்வ சாதாரணமான குரலில் "என்ன, நீ சோமு சின்னக் குழந்தை மாதிரி பேசு

கிருயே? கொலையாவது குத்தாவது! அப்படியே அடங்கி விடும் பார்'', என்ருன் நாகு.

''அடங்கி விடுமா? சரிதான். ஏதோ என்னுல் முடிந்ததைச் செய்து அவனைக் காப்பாற்றப் பார்க்கிறேன்! நீ நம் ஆள் என்கிற வகையில் என் பங்கில் நீயிருப்பாய் என்று எதிர் பார்த்தேன். சரி. பார்ப்போம்'' என்று கூறியபடி எழுந்து நடந்தான் சோமு.

ஒற்றை அடிப் பாதையிலிருந்து சாலையில் திரும்பி நடந்ததும் ஐயரும், அவர் சம்சாரம் அன்னம்மாளும் வண்டியில் செல்வதைப் பார்த்து எண்ணுததெல்லாம் எண்ணியபடி அவர்களைப் பார்த்தவாறு நடந்தான் சோமு.

சோமுவை வண்டியிலிருந்து அன்னம்மாள் கவனித்து விட்டு, ''அதோ பாருங்கள் வடபாதியான் பிள்ளை போகிருன், நம்ம பிள்ளையும் இருக்கிறதே ...'' ஐயர் சோமுவைப் பார்த்து விட்டு, ''என்னவாம் அவனுக்கு?'' என்று கேட்டார்,

''என்னவா? சொத்து சேருகிறதற்குத் தகுந்தாப் போல பிள்ளையின் சிக்கனத்தைப் பாருங்களேன்! நாலு முழ வேஷ்டி இடுப்பில்; மேலே மலையாளத் துண்டு. காலில் செருப்புகூட இல்லாமல் நடந்து போகிருன்!'' புழுங்கினுள் அன்னம்மாள்.

''இதெல்லாம் அவரவர்களுடைய கர்ம பலன் அன்னம்! இதற்கெல்லாம் வருத்தப்பட்டு சாத்யமே யில்லை!''

—இதற்குள் வண்டி வீட்டு வாசலுக்கு வந்து விட்டது.

வண்டி நின்றதும் இருவரும் இறங்கி உள்ளே சென்ருர்கள்.

கருப்பையா கூடத்தில் கொண்டுவந்து வைத்த மூட்டைகளைக் கணக்கிட்ட அன்னம்மாள், ''ஏன் கருப்பையா, இன்னெரு மூட்டை இருக்க வேண்டுமே?''

''இல்லிங்க, சமுக்காளம் கூட கொண்டாந்து விட்டேன்'' என்ருன் கருப்பையா.

கூடத்தில் பேச்சுக் குரல் கேட்டதும் கமலம் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''அடடா, பக்ஷணமூட்டை தவறிப் போய் விட்டதே! ரயிலிலிருந்து இறக்கினுர்களோ இல்லையோ?''

''ஆமாம். இன்னும் கொஞ்சம் நாழிகை பொறுத்து தேடு! பிளாட்பாரத்தில் மூட்டைகள் இறக்கினதும் சரி பார்க்கவேண்டாமா?''

''அதுதான் நாம் இறங்கி மூட்டைகளை இறக்குகிற போதே சட் என்று நகர்ந்து விட்டதே வண்டி.''

''பக்ஷண மூட்டைதானே போய் விட்டுப் போகிறது. யாரோ தின்று விட்டுப் போகிருர்கள் போ'' என்ருள் கமலம்.

''அத்தனையும் அசல் நெய்யில் செய்தது அக்கா! போதும் போதும் என்கிற போதே, இருக்கட்டும் பத்து நாளைக்கு சாப்பிடுங்கள் என்று கட்டிக் கொடுத்தார் நாத்தனர்.''

''அதற்கென்ன செய்வது? ஸ்டேஷன் சின்னது. எல்லாவற்றையும் முன்னடி எடுத்து வைத்துக் கொண்டு சட்டென்று இறங்கி எடுக்கணும்.''

"சொன்னால் கேட்டால் தானே? 'எல்லாம் நான் எடுத்துத் தருகிறேன். ஊருக்கு வழியை அடைக்காதே' என்று மிரட்டினார் உங்கள் தம்பி."

"அதெல்லாம் என்ன கூடை?"

"இரண்டு கூடை, வத்தல் வடாம், அப்பளம். ஒரு கூடை இங்கிலீஷ் காய்கறிகள். எல்லாம் ஏறக்குறைய வாங்கி மிச்சப் பட்டு இப்படி விநியோகம் எல்லோருக்கும்! 'கமலுக்கா வராமல் வைத்ததில் ஆயிர ரூபாய்க்கு மேல் நஷ்டம் மன்னி' என்று குறை பட்டார் உங்கள் தங்கை."

"போடி போ. இங்கே நம் கவலை தலைக்கு மேலே கிடக்கிறது. அவர்கள் வீட்டுக் கவலை நமக்கெதற்கு? போய் கை கால் அலம்பிக் கொண்டு வா. காபி கலக்குகிறேன்," என்று உள்ளே சென்றாள் கமலம்.

கொல்லைப்புறம் சென்ற ஐயர் திரும்பி வந்து, "காபி ஆகி விட்டதா அக்கா? ஒரே தலை வலி."

"இதோ ஆகிவிட்டது." என்று ஆவி பறக்கும் காபியை ஆற்றி அவரிடம் கொடுத்தாள் கமலம்.

"ஏனக்கா, ஒரு மாதிரி இருக்கிறாயே ஏன்? உடம்பு ஒன்றுமில்லையே?" என்று கேட்டார் ஐயர்.

அவர் காபி சாப்பிடும் வரையில் தாமதித்து விட்டு, பிறகு, "இந்தத் துப்புக் கெட்ட பிள்ளையை வலுக்கட்டாயமாகக் கலியாணத்திற்கு இழுத்துக் கொண்டு போகச் சொல்லியிருக்க வேண்டும் நான். புத்தி பிசகிப் போய் விட்டது..."

"சங்கதியைச் சொல்லு," என்றார் ஐயர் அவசரமாக.

"சொல்லவே பிடிக்க வில்லை அந்த வெட்கக்கேட்டை. இப்படி ஒரு பிள்ளைக்கு புத்தி போகுமா, சிவா, உன் வயிற்றில் பிறந்து விட்டு, ஊம்?"

அங்கே வந்த அன்னம்மாள் அப்படியே பிரமித்து நின்று விட்டாள்!

"ரொம்பச் சரி. காரியம் நடந்து போய் விட்டதோ?"

"அந்த அவதியை யார் கண்டார்கள்? கல்யாணத்தன்று கண்ணமங்கலம் கோவிலில் கும்பாபிஷேகம் அல்லவா? இது காலையிலே வேலை செய்து விட்டுப் போனால் மறுபடி சாயந்திரம் நாலு மணிக்குத் தானே வரும். அதற்குள் நாம் வந்து விடலாம் என்று போனேன். இந்த அனர்த்தத்திற்கு இசைவாக, அவள் எதற்குவந்தாளோ, என்ன பாவமோ, 'அவள் என் கையைப் பிடித்து இழுத்து விட்டு, நான் இணங்காததால் என்மேல்பழி போடுவதற்காகக் கிணற்றில் குதித்து விட்டாள்' என்கிறான் இவன். வீணாக அந்தக் குட்டியைச் சொல்லக் கூடாது."

"பிழைத்ததா, இல்லையா?"

"திருநாள் கூட்டம் 'ஜேஜே' என்று தெருவிலே ஜன நடமாட்டம் இருக்கவே அது பிழைத்தது!"

"இவன் வாயாலே என்ன தான் சொல்லுகிறான்?" என்று அவமானத்தால் குன்றிப் போய் கேட்டார் ஐயர்.

"புத்தி யில்லாமல் அசட்டு வேலை துணிந்து செய்து

விட்டான். என்னத்தைக் கேட்பது அவனே?'' என்ருள் கமலம்.

இது வரையிலும் வாய் திறவாமல் பிரமை பிடித்து நின்றிருந்த அன்னம்மாள் தனது நினைவின் தொடர்ச்சியாக, "இதைக் கட்டையில் வைக்க கிணற்றிலே குதித்திருக்கிறதே, செத்துக் கிடந்தால்?'' என்று கேட்டாள்.

"செத்துக் கிடக்க வேண்டும்; ஊர் சிரிக்க வேண்டும் என்று தானே விழுந்திருக்கிருள் அவள்!'' என்ருர் ஐயர்.

"நம் கண்களில் ஒன்றையும் பார்க்கவில்லை சிவா. நமக்கு மனதாற தெரிந்ததை வைத்து ஊகித்துப் பார்த்தோமானல், 'பிராணன் போனலும் போகட்டும் மானம் போகக் கூடாது' என்கிற எண்ணத்தில்தான், தப்பிக்க வேறே வழியில்லாமல் போகவே கிணற்றில் குதித்து விட்டாள். அவ்வளவுதான்.''

"நாசமாகப் போன பிள்ளை. அசட்டுக் காரியத்திற்கு தான் தலை கொடுத்தானே அப்பவே பத்தோ ஐந்தோ அதன் முகத்தில் விட்டெறிந்து அதன் வாயை அடைத்திருக்கக் கூடாது? அது போய் ஊர் முழுதும் என்னவெல்லாம் தம்பட்டமடித்து வைத்திருக்கிறதோ?'' என்று கலங்கினள் அன்னம்மாள்.

மனம் நொந்தவராக ஒன்றும் பேசாமல் வாசலைப் பார்க்க நடந்தார் ஐயர்.

கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள் அன்னம்மாள்.

"எழுந்து போய் காபியைச் சாப்பிடு போ. அது ஜில்லிட்டுக் கூடப் போயிருக்கும்.''

"ஏன் அக்கா அவள் வேலைக்கு வருகிருளோ?''

"வருவாளா? அன்னம், என்ன இப்படிக் கேட்கிருய்?''

"நம் புத்தியும் கட்டையாகத்தான் போய் விட்டது என்று வையுங்கள். என்றைக்கு அவள் மேல் இவன் கவனம் பாய்ந்ததென்று தெரிந்ததோ, அன்றைக்கே அதை ஒழித்துத் தலை முழுகியிருந்தால் இன்று இந்த துன்பமில்லை......''

"நினைத்தேனே மனதில். செய்யத் தோன்ருமல் போய் விட்டது நமது கஷ்ட காலம்,''

"சிரிப்பவர்களுக்கு முன் இடறி விழுந்த கதையாக வடபாதியான் பிள்ளை இருக்கிற சமர்த்துக்கும், குணத்துக்கும் நேரிடையாக இந்தப் பிள்ளை நம் தலையை குனியவைத்துக்

"இப்பொழுதாவது ஒரு வார்த்தை என்னைக் காதலிக்கிறேன் என்று...''

விட்டதே" என்று மனம் புழுங்கிக் கண்ணீர் விட்டாள் அன்னம்மாள்.

"அழுது என்ன செய்கிறது அன்னம்? எழுந்திரு, காரியத்தைப் பார்" என்ருள் கமலம்.

அசையவில்லை அன்னம்மாள். வேதனையும் அவமானமும் அவளை செயலறச் செய்து உட்கார்த்தி வைத்திருந்தது!

மெதுவாக அஸ்தமிக்கும் நேரத்தில் மாடியிலிருந்து இறங்கிக் கிழே வந்தான் துரை. கூடத்தில் உட்கார்ந்திருந்த தாயாரைக் கண்டதும் "எப்போது வந்தாய் அம்மா?" என்று கேட்டுக் கொண்டே கொல்லைப் பக்கம் சென்ருன் துரை.

மகனைக் கண்டதும் அன்னம்மாளின் துக்கம் அதிகரித்து விட்டது. கண்களில் அருவியாகப் பெருகிக் கொண்டிருந்தது கண்ணீர்.

நடுக் கூடத்தில் அமர்ந்து மனம் புழுங்கி அழுது கொண்டிருந்த அன்னம்மாள் ஆத்திரம் தாங்காமல், "ஏண்டா, மானம் கெட்டவனே, இதற்குத் தான் ஊருக்கு வரமாட்டேன் என்று இங்கே தங்கினயா?" என்று அழுகைக் கிடையில் கத்தினள் அன்னம்மாள்.

"எதற்குத்தான்?" என்று அதே ஆத்திரத்துடன் எதிர்த்தான் துரை.

(தொடரும்)

Phone: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதீ
ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்
கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஓர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை
M. N. P.
லிங்க மார்க்
சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரியாவை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.
M.N.P.N. & M.N.P.T.
மதுரை.

AT
YOUR
SERVICE

Grams : CORONATION

Phone : 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX No: 2, SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: **HOOGHLY INK Co, Private, Ltd.**

வளர்க கைத்தறி! வாழ்க கூட்டுறவு!

ஜவஹர்புரம் தேவாங்க நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.,

ரெ. K. 1516.

100 நெ. கெட்டிச்சாய கைத்தறி சேலைகள் தயாரிப்பவர்கள்.
வேலாண்டிபாளையம் P.O., கோயமுத்தூர்.

புதுமையான டிசைன்கள் ! உடைக்கு உகந்தது !
கண்ணைக் கவரும் கலர்கள் !! விலையில் குறைந்தது !!
உத்திரவாதமான கெட்டிச் சாயம்!!! நாணயமான சரக்கு !!!

இவை யனைத்திற்கும் பெயர் பெற்றது
எமது **ஜவஹர் சேலைகள்.**

இந்தியா, பர்மா, சிலோன் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்கிறோம்.

கோவை கைத்தறித் துணிப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.

தங்கள் தேவைக்கு எழுதவும்.

எமது சேலைகள் கிடைக்குமிடம்:—

R. S. புரம், காந்திபுரம் சேல்ஸ் எம்போரியங்களிலும்
மற்றும் எல்லா இடங்களிலுமுள்ள சேல்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

குறிப்பு : *ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்புகிறோம்.*

S. மாரி செட்டியார், தலைவர்.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : 'TRANSPORT'

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% C. H.)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்கு சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்து கொள்ளவும்.

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 Tel. Address: MACSALT

Telephone: MADRAS 4890. MADURAI : 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதராஸ் . பெங்களூர் . விஜயவாடா

அரசும் வேம்பும்

'எல்லார்வி'

நால்

ராமநாதபுரம் சம்ஸ்தானத்தின் சேதுபதி மன்னர் பரம்பரையினரில் பாஸ்கரசேதுபதி அவர்களின் சீலமும், தர்ம சிந்தையும், கலைப் பற்றும், தமிழ் அபிமானமும் சரித்திரத்திலே குறிப்பிடத் தக்கன. இலக்கிய மரபிலே சேதுபதியின் வள்ளண்மை உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவதாகும்.

தமிழையும், இசையையும் தம் இரு கண்களெனப் போற்றிப் பாதுகாத்து வந்த பாஸ்கர சேதுபதி அவர்களின் ஆட்சிக் காலத்திலே அவ்விரு கலைகளும் புதுப் பொலிவுடன் திகழ்ந்தன. கலைஞர்கள் எந்நேரமும் குதூகலத்துடன் வாழ்ந்தனர்.

ராமநாதபுரம் ஜில்லாவிலே வேம்பத்தூர் ஒரு சிறிய கிராமம். அங்கே தோன்றி வளர்ந்த பிச்சுவையர் இசையைப் பிறவி ஞானமாகப் பெற்றவர். தமிழை விரும்பிக் கற்றவர். நாளுக்கு நாள் வளர்பிறைபோல ஓங்கி வளர்ந்த அவருடைய புலமை கண்டு எல்லாரும் வியந்தனர். இதை அறிந்த சேதுபதி அவர்கள் உளம் மகிழ்ந்தனர். தக்காரைக் கொண்டு பிச்சுவையரைத் தம் அவைக்கு அழைப்பித்தார்.

அவருடைய தமிழ்ப் புலமை, இசைச் சிறப்பு ஆகியவற்றை அறிந்து களித்தார். அவர் இயற்றிய சாகித்தியங்களின் உயர்வை உணர்ந்து ரசித்தார். தக்க சன்மானங்களை அளித்துக் கௌரவித்தார். "அடிக்கடி அவைக்கு வந்து போகவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

சில காலத்திற்குப் பின் வேம்பத்தூர் பிச்சுவையர் சேதுபதி மன்னரின் அவைப் புலவர்களுள் ஒருவராக இடம் பெற்றார். அவருடைய புலமையால் அந்த அரசவை மிகுந்த சிறப்பைப் பெற்றது. பிச்சுவையரின் கவிதைகளைக் கேட்டுக்

கேட்டு மன்னரின் உள்ளத்திலே எந்நேரமும் மகிழ்ச்சி உணர்வு பொங்கலாயிற்று.

சேதுபதி மன்னர் வேம்பத்தூர் பிச்சுவையரிடம் விசேஷ அன்பு பாராட்டுகிருர் என்று மற்ற தமிழ்ப் புலவர்களும் இசைப் புலவர்களும் எண்ணினர்கள். அது பற்றித் தங்களுக்குள் பலப்பல பேசிக் கொண்டார்கள். அவர்கள் உள்ளத்திலே தோன்றிய பொருமை உணர்ச்சி வெகு சீக்கிரத்திலே காட்டுத் தீயைப் போல வளர்ச்சி பெற்றது. இத்தனை பெரிய சபையில் அவருக்கு மரியாதைக் குறைவை உண்டு பண்ண வேண்டும் என்று எண்ணினர்கள். அதற்குரிய திட்டம் ஒன்றையும் வகுத்தார்கள்.

ஒரு நாள் அரசவையில் அனைவரும் கூடினர்கள். தத்தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். அங்கே வேம்பத்தூர் பிச்சுவையருக்கும் ஓர் ஆசனம் உண்டு. அதிலும் ஒருவரை அமரச்செய்தார்கள். பின்னர் மன்னர் அழைப்பதாகப் பிச்சுவையரைக் கூப்பிட்டனுப்பினர்கள்.

பிச்சுவையர் வந்தார். வருகிறபோதே அவையைநோட்டமிட்டார். தமக்கென ஓர் ஆசனம்கூட அங்கே காலியாக இல்லை என்பதை ஒரு நொடியில் உணர்ந்தார். அங்கே இங்கே பார்த்துக் கொண்டு தயங்கி மயங்கி நிற்கவில்லை. நேரே நடந்து சென்ருர். மன்னரின் அருகே சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

எல்லாரும் அவருடைய துணிச்சலைக் கண்டு மெய் சிலிர்த்துப் போனர்கள். அரசர் அதிர்ச்சியுறவில்லை. முறுவல் பூத்த முகத்துடன் பிச்சுவையரை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்ன பார்க்கிறீர்கள்?", என்று கேட்டார் பிச்சுவையர்.

"ஒன்றும் இல்லை. தாங்கள் தமிழிலும் இசையிலும் தான் புலமை நிரம்பியவர் என்று இதுகாறும் எண்ணியிருந்தேன். சமயோசிதச் செயல்களிலும் மிகுந்த திறமை உடையவர் என்பதை இப்போதுதான் அறிந்தேன்" என்ருர் சேதுபதி.

"மன்னர் அழைப்பதாகச் செய்தி வந்தது. உடனே கிளம்பி இங்கே வந்தேன். அழைப்பித்த மன்னர் ஆசனம் அளிக்காததிலிருந்தே எனக்கென்று தனி ஆசனம் தேவையில்லை என்பது அரசரின் அபிப்பிராயம் என்று கண்டு கொண்டேன். அதிலிருந்து அரசும் வேம்பும் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்தேன். இப்போது அதை மற்றவர்களும் உணர்ந்து விட்டார்கள்..."

சேதுபதி மன்னர் அவையை நோக்கினர். அங்கே இருந்த புலவர்கள் தரையை நோக்கினர்கள்!

Telegrams : 'RANGAVILAS'　　　Telephone : 17 & 817

SRI RANGA VILAS

GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O.　　　COIMBATORE

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2s to 80s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

தண்டனை

ராமு

விமலாரமணி

கோசல நாட்டு இராணியின் அந்தப்புரம் அல்லோலகல்லோலப்பட்டது. நாளை ராணிக்கு பிறந்த நாள். அந்தப்புரத்தை அலங்கரிப்பதில் முனைந்திருந்தனர் அத்தனை சேடிகளும். அரசருக்கும் ஏதேதோ யோசனை! நாளை ராணிக்கு என்ன பரிசளிப்பது என்று! அரசரின் கவலையை விட அதிகக் கவலைப்பட்டாள் சேடி மாலினி! அரசருக்கென்ன? கஜானாவின் பணம் இருக்கிறது! தன் இன்பத்திற்காக அரசிக்கு என்ன வேண்டுமானாலும் கொடுக்கலாம்! சேடி மாலினி பொற்காசிற்கு எங்கே போவாள்!

அரண்மனைத் தாதி வேலையாயினும், ராணிக்கு அந்தரங்கச் சேடி மாலினி! எல்லா சேடிகளையும்விட மாலினிக்கு அதிகச் சலுகை கொடுத்திருந்தாள் **ராணி. எனவே** ராணிக்கு நாளை என்ன பரிசளிப்பது என்று மாலினி கவலைப்பட்டதில் வியப்பில்லை அல்லவா? பரிசு! அது என்ன! அதை வாங்க அவளிடம் பணம்......?

இவை இரண்டும் தீராப் பிரச்னையாகி விட்டன மால்னிக்கு! அரண்மனையிலேயே உடுக்க உடையும், உண்ண உணவும் கிடைக்கையில் தனியாக அவளிடம் ஏது பணம்?

யோசித்தாள்! யோசித்தாள்—முடிவில்லாமல் யோசித்தாள் மாலினி! திடீரென ஒரு மின்வெட்டு! ஆ! இதுதான் சரி! அவள் தந்தை ஒரு தியாகி! முன்பு கோசல நாட்டை, மகத நாட்டான் படை எடுப்பிலிருந்து காத்ததிற்காக அரசரின் சன்மானமாக நிலம் ஒன்று கொடுக்கப் பட்டிருக்கிறது! அந்த நிலம் ஊரின் ஒதுக்குப் புறத்திலே எங்கோ கிடந்தது! அதைப் பயிரிட ஆட்களும் கிடையாது. மாலினியும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை! வீணாகக் கிடக்கும் நிலத்தை விற்றுவிட்டால் என்ன? அருமையான யோசனை! மறு நிமிடம் தன் கற்பனையை நிஜமாக்க முயன்றாள் அவள்.

அவசரத்தில் நிலத்தின் பாதி விலைதான் கிடைத்த போதிலும், அது போதும் அரசிக்குப் பரிசளிக்க!

X X X

மறு நாள்—

மாலினி அன்பளிப்பாகத் தந்த அந்த பூவேலை செய்த பட்டாடையைக் கண்டு திகைத்தாள் அரசி.

காதலுக்கு கண் இல்லை; பகைமை இல்லை; வேறெந்த விதமான வேற்றுமையும் கிடையாது என்பதற்கு எடுத்துக் காட்டு இந்த 'தண்டனை'

"மாலினி, இது ஏது? எங்கிருந்து வாங்கினாய்?"

மாலினி விஷயத்தை விளக்கிய போது அரசிக்கு ஏனோ கண்களில் நீர் துளிர்த்தது. தன்மீது மாலினி கொண்டுள்ள அன்பை எண்ணிப் பெருமிதமடைந்தாள் அவள்.

"மாலினி! எனக்காக......உன் ஒரே சொத்தான நிலத்தை விற்கத் துணிந்து விட்டாயா? பதிலுக்கு அதே போன்ற வேறொரு நிலத்தை நான் அரசரிடம் சொல்லி வாங்கித்

தருகிறேன். நிலத்திற்குப் பதிலாகப் பொற்காசுகளைக் கொடுக்கலாம். ஆனால் பொற்காசுகள் மறைந்து விடும்! நிலம் உழைப்பால் உயரும்.''

அரசி கூறிய மொழிகளை ஆமோதித்தாள் மாலினி. ஆனால்—

''அரசி! அன்பளிப்பிற்குப் பதிலாக நான் வேறு எந்தப் பொருளும் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. சமயம் நேர்ந்தால் நானே அதைக் கேட்டு வாங்கிக் கொள்கிறேன்''.

மாலினியின் மனத்துணிவை எண்ணி வியந்தாள் அரசி.

நாட்கள் சில உருண்டோடின. ஒரு நாள்— புள்ளி மான் ஒன்று தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்தது அக்காட்டில்! அது ஓடும் வேகத்தை அளவிட முடியாத மாலினி, அது ஏன் அப்படி ஓட வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள்.

அப்போது—

'விர்' ரென்று எங்கிருந்தோ வந்த அம்பு ஒன்று அவள் கன்னத்துடன் உரசியவாறு சென்று பூமியில் விழுந்தது! மாலினி திடுக்கிட்டு ஒரு அடி பின் வாங்கினாள். அப்போது-

தான் விட்ட அம்பில் மான் விழுந்திருக்கும் என்று எண்ணி வேகமாக ஓடி வந்த பிரதாபன், மான் நிற்கும் இடத்தில், மங்கை ஒருத்தி நிற்பதைக் கண்டு திகைத்தான்! ராமர் கால் பட்டதினால் கல்லாக இருந்த அக

விகை பெண்ணுக மாறியது போல், ஒரு வேளை தான் விட்ட அம்பு மானை மங்கையாக்கி விட்டதோ என்று திகைத்தான் அவன்!

"எங்கே மான்?"— பிரதாபன் கேட்டான்.

"ஓ! அம்பு விட்ட வீரர் நீங்கள் தானு? மானை வேட்டையாட வந்திர்களா? மனிதர்களை வேட்டையாட வந்திர்களா?".

அழகான பெண்ணைப் படைத்த பிரம்மன் ஏன் அவர்களின் நாவை இவ்வளவு கொடூரமானதாகப் படைத்துவிட்டான்? பிரதாபன் அந்தப் பெண் புலியின் சிற்றலுக்குக் காரணம் புரியாமல் திகைத்தான். மாலினி விளக்கினுள். மண்ணைக் குத்தி நிற்கும் தன் அம்பை எடுத்தான் பிரதாபன். அதிர்ஷ்டக்கார அம்பு! அந்தப் பெண்ணின் கன்னத்தைத் தொட்டுவிட்டதல்லவா? இளநகை ஒன்று அவன் இதழ்க் கடையில் நெளிந்தது. மாலினிக்கு எரிச்சலாக வந்தது.

"போதுமய்யா, உங்கள் புன் சிரிப்பு"

'சட்'டெனத் தன் முகபாவத்தை மாற்றிக்கொண்ட அவன் மாலினியின் அருகில் வந்தான்.

"அம்பு எங்கு பட்டது? இங்கா?" அவள் பட்டுப் போன்ற கன்னத்தை அவன் விரல்கள் சுட்டிக் காட்டின! அருகில் நின்ற அவன் விடும் உஷ்ண மூச்சு அவள் கன்னத்திலே வந்து மோதின! இதுகாறும் கோபம் கொந்தளித்த அவள் முகத்தில் புன்னகை ஊசலாட மென்னகை ஒன்று அரும்பியது!

இருவரும் சிரித்தனர்! இவ்வாறு ஆரம்பமான இவர்களது காதல் வளர்ந்தது காட்டிலும். மேட்டிலும், அந்தப்புரத்தின் வெளியிலும்! மாலினி இப்போதெல்லாம் தன்னிடம் அதகம் பேசாததின் காரணம் அறியாமல் திகைத்தாள் அரசி!

"மாலினி, என் மீது நீ கொண்ட காதல் உண்மையானது தானு?" என்று கேட்ட பிரதாபன் கண்களோடு தன் கண்களை மோத விட்டாள் அவள்.

"பிரபு! கதிரவனுக்கும், கமலத்திற்கும் உள்ள காதல் உண்மையானுல், நிலவிற்கும், அல்லிக்கும் உள்ள காதல் உண்மையானுல், வண்டிற்கும், மலருக்கும் உள்ள தொடர்பு உண்மையானுல் எனக்கும் உங்கள் மீது காதல் தான். ஆனுல் இது வாடாது தாமரை போல், மனம் மாருது வண்டைப் போல்"

"கள்ளி! நான் தான் மனம் மாறிவிடுவேன் வண்டைப் போல் என்று சொல்கிருயா?"

"இல்லை. மனச்சாட்சி யுள்ள வண்டு நீங்கள்!"

"மாலினி, நான் மகத நாட்டவன் என்று தெரிந்தும் நீ என் மீது காதல் கொள்கிருயே, கோசலத்தின் விரோதி யல்லவா நான்!"

மாலினி சிரித்தாள்.

"கோசலத்திற்கும், மகதத்திற்கும் தான் விரோதமே அன்றி, உங்களுக்கும் எனக்கு மல்ல"

"எனக்காக நீ எதுவேண்டுமானுலும் செய்வாயா?"

"உம்" ஏனே இப்போது மாலினியின் குரல் நடுங்கியது!

"இந்நாட்டு அரசிக்கு உன் மீது உண்மையான அன்புதானே?"

"ஆம்? ஏன்?"

"**அன்று நீ கொடுத்த** அன்பளிப்பிற்காக, பதிலுக்கு நிலம் தருவதாகச் சொன்னுர் என்று சொன்னுய் அல்லவா?"

"ஆம், இப்போது அந்தப் பழங் கதைகள் எல்லாம் எதற்கு?"

பிரதாபன் மெதுவாய் பேசினுன். "மாலினி, எனக்காக நீ ஒரு காரியம் செய்வாயா?"

"என்ன?"

"உன் அரசியிடம் ஸரஸ்வதி துர்க்கத்தின் அருகில் உள்ள நிலம்

உனக்கு வேண்டும் என்று கேட்டு வாங்கு.''

"பிரதாபன்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

"வாங்கி வா நிலத்தை! பிறகு நான் சொல்கிறேன். இன்னும் ஒரு திங்களில் நீ கோசலத்தின் ராணியாவாய்.''

"பிரதாபா!'' மாலினி கீச்சிட்டாள்!

"மாலினி! உனக்கென்ன பைத்தியமா? ஏன் இப்படிக் கத்துகிறுய்? உண்மையாக நீ என்னைக் காதலிக்கவில்லையா?''

"காதலிக்கிறேன்'' மாலினியின் வாய் முணுமுணுத்தது:

x x x

"சபாஷ் மாலினி! என் மாலினி கெட்டிக்காரி! ஸரஸ்வதி துர்க்கத்தின் நிலம் இனி நம்முடையது. மாலினி, கேள்! அரசர் இப்போது வேட்டைக்குப் போயிருக்கிறுர். ஸரஸ்வதி துர்க்கம் தான் தெற்கு எல்லை! அங்கு பலத்த காவல் இது வரை இருந்தது. இப்போது அந்த நிலம் நமக்குச் சொந்தமாகி விட்டதால், அந்த நிலத்தை நாம் சமதளமாக்குவது போல் சில தினங்கள் நடிக்கவேண்டும். அதற்கு என்னிடம் ஆட்கள் இருக்கின்றனர். பிறகு அசந்த சமயம் பார்த்து திடீர் படையெடுப்பு! கோசலம் இனி பிரதாபனின் அடிமை! பிரதாபன் கோசலத்தின் அரசன்! என் ராணி மாலினி!''

மாலினிக்கு ஒரு கணம் உடல் சிலிர்த்தது. தன் காதலன் கூறிய மொழிகள் அவளுக்குக் கசந்தனவா அல்லது இனித்தனவா? மாலினி குழம்பினுள். அவளிடம் இருந்த குதூகலம் விடைபெற்றுக் கொண்டது.

மேலும் சில தினங்கள் கழிந்தன. ஸரஸ்வதி துர்க்கத்தை பிரதாபனின் ஆட்கள் சீர்படுத்திக் கொண்டிருந்தனர். "மாலினி, இன்று இரவு மூன்ரும் ஜாமம் என் விஜய யாத்திரை.''

பிரதாபன் மாலினியிடம் விடை பெற்றுக்கொண்டான். அவன் விட்டுச் சென்ற குதிரை கனைத்துக் கொண்டிருந்தது.

"மாலினி!'' யாரோ சிரித்தார்கள்!

"சபாஷ், மாலினி சபாஷ்! சரித்திரம் இதுவரை உன்னைப் போன்று தாய்நாட்டுப்பக்தர்களைக்கண்டிருக்க முடியாது. அன்னியன் ஒருவன் மோக வலையில் சிக்குண்டு அன்புத் தாய் நாட்டை இழக்கத் தீர்மானித்து விட்டாயே, சபாஷ்!''

மாலினி கத்தினுள்—

"அன்னியனு? அவர் என் காதலர்''

"இருக்கலாம் காரியம் முடியும் வரை.''

"இல்லை. அவர் உண்மையானவர்.''

"இருக்கலாம் உன் உதவி தேவை இருக்கும் வரை! பைத்தியக்காரி! உன்னைப் போன்றவர்கள் நாட்டிலே பிறந்து விட்டால், நாடு சீரழிய வெகு நாட்கள் ஆகாது! ராணியாகப் போகும் ஆசையில் அன்னியன் ஒருவனுக்கு உள்ளே புக வழி காட்டிவிட்டாயே! நீ ராணியாவாய் என்று என்ன நிச்சயம்? அப்படி நீ ராணி ஆவதாக இருந்தாலும், அன்னியன், தாய் நாட்டின் விரோதி ஒருவன் அளிக்கும் பிச்சையிலா நீ உயிர் வாழ வேண்டும்? அதற்குப் பதில் இம் மண்ணிலிருந்தே விடைபெற்றுக் கொள்ளலாமே! அன்று உன் தந்தை தாய் நாட்டிற்காகத் தியாகம் செய்தார்! இன்று அவர் மகள் தன் தாய் நாட்டைத் தத்தம் செய்தாள் மாற்ருன் ஒருவனுக்கு! சபாஷ் மாலினி, சபாஷ்!''

மனச்சாட்சியின் எதிரொலி எக்காளமிட்டது! "போதும் நிறுத்து'' மாலினி வீரிட்டாள்! பிரமை! எல்லாம் பிரமை! குதிரை மட்

டும் கணேத்துக் கொண்டிருந்தது! மறு நிமிடம்—

குதிரை மீது தாவினுள் அவள். அந்தக் கும்மிருட்டில் காட்டை நோக்கிப் புரவியைச் செலுத்திஞள்!

x x x

பிரதாபனுக்கு எல்லாமே புதிராக இருந்தது! தான் போட்ட திட்டம் இப்படித் தவிடு பொடியாகும் என்று கனவில் கூடக் கருதவில்லே அவன்! காட்டிற்கு வேட்டை ஆடச் சென்ற அரசரும், மந்திரியும் எப்படி, எப்போது திரும்பினர்கள்? தன்னை எப்படிப் பிடித்தார்கள்? தான் படை எடுக்கப் போவது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

எல்லாமே அவனுக்குப் புதிராக இருந்தன! கையில் விலங்குடன் கைதியாக நின்ருன் அவன். சுற்றி நின்ற ஜனங்கள் சந்தோஷத்தால் ஆரவாரித்தனர்!

அரசர் வந்தார். மாலினியும் உடன் வந்தாள்! பிரதாபனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மாலினி அழவில்லே; அவள் கண்களில் நீர் வரவில்லே; அவள் உள்ளம் தான் செத்து விட்டதே!

அரசர் மாலினியைப் பார்த்தார். "மாலினி, உன் உதவியை நான் எப்படிப் போற்றுவேன்? அன்று ஒரு முறை உன் தந்தை கோசலத்தைக் காப்பாற்றினுர். இன்று நீ மீண்டுமொரு முறை காப்பாற்றினுய். உனக்கு என்ன வேண்டும் பரிசு? கேள். எதுவாயினும் தருகிறேன்"

பிரதாபனுக்கு விஷயம் விளங்கியது. மாலினி பிரதாபனைப் பார்த்தாள்! அவன் சிரித்தான்! என்ன நெஞ்சழுத்தம்? மரணத்தின் பிடியிலிருக்கும் அவன் ஏன் சிரிக்கிருன்? தன்னைக் கேலி செய்கிருனு? மாலினியின் உள்ளம் ஒரு முறை சிறகடித்தது. தான் விரும்பியது எதுவாயினும் அரசர் கொடுப்பாரா? அப்படியாயின் பிரதாபனின் விடுதலே.........

கூடாது, கூடாது; பிரதாபன் விடுதலே அடையக்கூடாது. விடுதலே அடைந்தால் மீண்டும் அவன் காதலனுக மாறுவான்! பிரதாபன் இருக்கும் வரை கோசலத்தின் வாழ்வு பயங்கரம் தான்! பின்...? பிரதாபன் இறக்கத்தான் வேண்டுமா? அப்படியாயின் அவள் காதல் ...?

ஆம். அவள் காதலும் அவனோடு மடியத்தான் வேண்டும்! கண்களை மறைத்த நீர்த் துளிகளைச் சுண்டி எறிந்தாள் அவள்!

"அரசே! நான் கேட்கும் பரிசை தாங்கள் கட்டாயம் தரவேண்டும்."

"கட்டாயம் மாலினி, கட்டாயம் தருகிறேன்."

"பரிசல்ல நான் கேட்பது! நான் கேட்பது எனக்கும் தண்டனே! ஆம் அரசே! எனக்கும் மரண தண்டனே விதியுங்கள்."

கம்பீரமாக இதைக் கூறிய அவள் பிரதாபனின் அருகே சென்ருள்.

"பிரதாபா, நம் காதல் மடியவில்லே! நாம் தான் மடிகிருேம்"

அவள் கைகளோடு அவன் கைகள் இணைந்தன! அரசரின் கண்களிலே இரு முத்துக்கள் சுடர் விட்டன!

[பிரபல ஹிந்தி நாவலாசிரியரான ஸ்ரீ பிரஸாத் அவர்களால் எழுதப்பட்ட 'புரஸ்கார்'-என்ற ஹிந்திக் கதையின் தழுவல்]

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந. பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed 934.

—:o:—

'B' Mills, Gerianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed : 6.

Labourers Employed : 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN :

L.T.M., L.M.E., L.E.E.,



தயாரிப்பாளர் ;

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை
பெரம்பூர், சென்னை.

வியாபாரவிஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை–5.

போன்: 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டி நெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி
மலர்க்கொடியாள் மனதினை மகிழ வைத்து,
தளிர்மேனி செவ்விதழாள்
மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து
அழகொளியை அள்ளி வீசும்,
எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை
சேலைகளை

வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபீஸ் : & சாயச்சாலை :– 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.

விற்பனைக் கிளைகள் : 11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை. 56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்டாக்கிஸ்டு: நியூ ராதா ஹால், பஜார் தெரு, சேலம்.

தலைவர் : A. K. **பழனிசாமி.**

பித்தமும் சித்தமும்

'வியார்ஜி'

ராஜு

என்னுடைய நண்பன் கேசவ மூர்த்திக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம். என்னுடைய அதிர்ச்சியை வார்த்தைகளில் வெளியிட முயலுவது பேதமை.

கேசவமூர்த்தியோடு நெருங்கிப் பழக நேர்ந்தவர்களுக் கெல்லாம் அது எவ்வளவு துயரத்தை அளிக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. நானே சிறு வயது முதல் கல்லூரி வரை அவனோடு ஒரு சாலை மாணவனாக இருந்து படித்தவன்.

கேசவமூர்த்தியை நாங்களெல்லாம் கேவலம் சராசரி மனிதனாக என்றுமே நினைத்ததில்லை. அவன் உண்மையிலேயே ஒரு மேதை. ஒரு மேதைக்குரிய சகல லக்ஷணங்களும் அவனிடம் பூரணமாகப் பொருந்தி யிருந்தன. உரையாடல் அவனைப் பொறுத்தவரை ஒரு கலையாக இருந்தது. அவனோடு இன்று பூராவும் பேசிக்கொண்டிருக்கலாம். நூறு பெரிய புத்தகங்களைப் படித்து முடித்த நிறைவு அவனுடன் பேசி விட்டு எழுந்திருக்கும்போது எங்களுக்குத் தோன்றும். அவனுடைய பேச்சிலே தான் எத்தனை நவநவமான கருத்துக்கள் பளிச்சிடும்! அவனது சின்னஞ்சிறு மூளை நிகழ்த்தும் அற்புதத்தைக் கண்டு நாங்கள் வியந்தோம். வணக்கம் செலுத்தினோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஒரு பெரிய நகைச்சுவையாளன். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். கார்கால இரவு நேரங்களில் கங்குல் படிந்த வானில் திடீரென்று பளிச்சிடும் மின்னலைப் போலச் சம்பாஷணைகளின் இடையே பளீரென்று வெட்டும் அவனுடைய இலக்கிய மதிப்பு வாய்ந்த உயர்ந்த நகைச்சுவையை இந்தப் பிறப்பில் மறப்பதற்கில்லை. அவனுக்கா இந்த அவலம்? அப்படிப்பட்டவனுக்கா, பைத்தியம் பிடித்து விட்டது?

பஸ்ஸில் அவன் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த என் மனம் திரும்பத் திரும்ப இதே கதியில் சிந்தித்து வட்டமிட்டது. உட்கார்ந்திருப்பது பஸ் என்ற சூழ்நிலையையும் மறந்து என் கண்கள் நீரைச் சிந்தி என்னுடைய சட்டையை நனைத்தன. அருகிலிருந்தவர்கள் என்னை ஒரு மாதிரியாகப்

பித்தம் தெளிய மருந்தொன்றிருந்தது. அந்த மருந்து 'ஆண்டாள்' என்ற பெண்ணுருவில் இருந்தது. ஆனால் அவள் முடிவு...? இதைத்தான் 'பித்தமும் சித்தமும்' சித்தரிக்கிறது!

பார்ப்பது தெரிந்தது. உணர்ச்சியின் சிகரத்திலே தாங்க முடியாத மனவேதனையில் என்னை அறியாது வெளிப்பட்டுத் தோன்றிய இந்த மெய்ப்பாட்டைக் குறித்து மற்றவர்கள் என்ன நினைத்துக்கொண்டாலும் சரி, நான் கவலைப்படப் போவதில்லை.

வேதனை அழுத்தும் நெஞ்சத்துடன் கேசவமூர்த்தியின் வீட்டை அடைந்தேன். உள்ளே நடுக் கூடத்தில் துயரமே உருவாக அவனுடைய தாயார் உட்கார்ந்திருந்தாள். நான் கேசவமூர்த்தியைப் பற்றிக் கேட்பதற்கு வாயெடுப்பதற்குள் பக்கத்து அறையிலிருந்து அவனுடைய குரல் உரத்த சத்தத்தில் கேட்டது. அது தான் அவனுடைய அறை. ஆங்கிலத்தில் எதையோ படிக்கிறானோ அல்லது நினைவிலிருந்து சொல்லுகிறானோ தெரியவில்லை. என் கால்கள் தாமாகவே அந்த அறையை நோக்கிச் சென்றன.

அறை வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. அவனுடைய தாயார் சைகையில் ஜன்னலைச் சுட்டிக் காட்டினாள். நான் மௌனமாக ஜன்னலை நோக்கிச் சென்றேன்.

அறைக்குள்ளே கேசவமூர்த்தி கையில் கற்றையாகச் சில காகிதங்களை வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் உரக்கப் பேசிக் கொண்டிருந்தான். அவன் அதைப் பார்த்துப் படிக்கவில்லை. நினைவிலிருந்துதான் சொல்லிக்கொண்டிருந்தான். அந்தக் காகிதங்களைக் கவனித்தபோது அவைகள் ஒரு பெரிய புத்தகத்திலிருந்து முரட்டுத்தனமாகக் கிழிக்கப்பட்டனவாகத் தோன்றின. ஓரங்கள் ஒழுங்கற்றுத் தாறுமாறாகக் கிழிந்திருந்தன.

ஜன்னலுக்கு வெளியே யாரோ வருவதை அறிந்து அவன் எழுந்து வந்தான்.

"என்னடா கேசவமூர்த்தி?" என்றேன் மிகுந்த கனிவுடன்.

அவன் என்னை வெறித்துப் பார்த்தான். என்னை மட்டும் குறிப்பாகப் பார்த்ததாகத் தெரியவில்லை. என்னுடைய முகத்திற்குப் பின்னால் எதையோ தேடுவதைப் போலக் கண்களை அலையவிட்டான். அவன் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று தெரிந்து கொண்டேன். அவன் கையில் இருந்த காகிதங்களை இப்பொழுது உற்றுப் பார்த்தேன். பெர்னார்ட்ஷா எழுதியிருந்த ஒரு நாடகத்திற்கு முன்னுரையாக அவர் எழுதியிருந்த பகுதியைத்தான் பிய்த்துக் கையில் வைத்துக் கொண்டிருந்தான்.

என்னை மறுபடியும் மொத்தமாகப் பார்த்துவிட்டு ஒரு சிரிப்புச் சிரித்தான். சிரிப்பா அது? என்னுடைய மயிர்க்கால்களை யெல்லாம் அப்படியே சுண்டி இழுத்து விட்டது அது. அவனுடைய அந்த கோலத்தைக் கண்டு என்னை அறியாமல் எனது மேல் துண்டு என் கண்களை நோக்கிப் போயிற்று.

திடீரென்று கேசவ மூர்த்தி உரக்கப் பேசத் தொடங்கினான். "டேய், ஷாவிடம் இருந்த குறைபாடு தெரியுமா? மனுஷன் குருவியின் தலையில் பனங்காயை வைக்கப் பார்க்கிறார். இவ்வளவு சிறிய நாடகத்திற்கு எவ்வளவு பெரிய முன்னுரை! ஹ ஹ் ஹா......!" என்று சொல்லிக் கொண்டே கையில் இருந்த காகிதங்களைப் பறக்கவிட்டான். அவை அறையினுள் நாலாபுறமும் பறந்து சென்றன. தரையில் இறங்குவதற்கு முன்பே அவை எல்லாவற்றையும் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓர் அசுர முயற்சி செய்து அவைகளைப் பிடிக்க அங்குமிங்கும் தாவிக் குதித்தான். வழியில் இருந்த மேஜை 'டாண்' என்று அவன் காலில் இடித்ததையும் சட்டை செய்யாமல் மேலும் தாவினான்.

காகிதங்கள் எல்லாவற்றையும் பொறுக்கிக் கொண்டு வந்து,

"செஸ்டர்டன், ஷாவுக்குப் பெரிதாக வக்காலத்து வாங்கிக்கொண்டு வருகிறார். செஸ்டர்டனுடைய சமாதானத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆம். நாம் ஏற்றுக் கொள்ள முடியாது! ஒருக்காலும் முடியாது!" என்று நாடக பாணியில் சொல்லிவிட்டு ஒரு அவுட்டுச் சிரிப்பு சிரித்தான்.

அது ஒரு வெறியனுடைய சிரிப்பு!

மேதைக்குச் சித்தம் கலங்குவது எத்தனை விபரீதமானது என்று எண்ணிக் கொண்டேன்.

அவனுடைய முகமும், கண்களும் இருந்த நிலை அவன் இரவு முழுவதும் தூங்கவில்லை என்று அறிவித்தது. நான் பரிவுடன், "கேசவமூர்த்தி, என்னப்பா இப்படி? நீ ராத்திரி முழுவதும் தூங்கவேயில்லை போலிருக்கிறதே" என்று விசாரித்தேன்.

"தூக்கமா, ஆமாம். தூக்கம்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிவிட்டு,

"மண்ணுறங்கும் விண்ணுறங்கும்
மற்றுள எல்லாம் உறங்கும்
கண்ணுறங்கேன் எம்இறைவர்
காதலால் பைங்கிளியே"

என்று பாட ஆரம்பித்து விட்டான். அதை முடித்த வேகத்துடன் நீலாம்பரியில் ஒரு தாலாட்டுப் பாடலைப் பாடி, கையிலிருந்த காகிதங்களைத் தூங்கப் பண்ண முயன்றான்!

நான் ஜன்னல் கம்பிகளுக் கிடையில் முகத்தைப் புதைத்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் பக்கம் திரும்பியவன், "ஹலோ" என்று விரைந்து அருகில் வந்தான். ஒரு கணம் என்னை அவன் அடையாளம் தெரிந்து கொண்டானோ என்று நினைத்தேன். என் அருகில் வந்து என் மூக்கைப் பிடித்து பலமாக இழுத்தான்.

"மூக்கு. மூக்கை விட்டு விடப்பா" என்றேன்.

"ஆமாம், மூக்கு, என் மூக்குத்தான். கிளியோபாட்ராவின் மூச்கு மட்டும் இன்னும் கொஞ்சம் குட்டையாக இருந்தால் இந்த உலகத்தின் கதியே மாறிவிட்டிருக்கும்" என்று சொல்லி விட்டு மீண்டும் பழைய சிரிப்பை உதிர்த்தான்.

அதன் பிறகு அவன் என்னைக் கவனித்ததாகவே தெரியவில்லை. மேஜை மீது ஏறி நின்றுகொண்டு ஒரு ஆங்கிலப் பாடலைப் பாடத் தொடங்கி விட்டான்.

நான் கூடத்திற்கு வந்து அமர்ந்தேன்.

கேசவ மூர்த்தியின் தாயாரைப் பார்த்து, "என்ன அம்மா இப்படி கேசவனுக்குத் திடீரென்று?" என்று கேட்டேன்.

"ஐயோ, எல்லாம் இந்தப் பாவியால் வந்த வினைதான் அப்பா. நன்றாக இருந்த பிள்ளையை இப்படி ஆக்கிவிட்டேனே, பாவி" என்று 'படீர் படீர்' என்று தன் தலையில் அடித்துக்கொண்டாள்.

அது ஒரு தாயின் துயரம் என்பதை நான் அறிந்திருந்தேன். இருந்தாலும் அந்த நிலையிலும் ஒரு நிமிடம் அந்த அம்மாள் செயலற்று ஒடுங்கியிருந்த நிலையைக் கண்டு அதிசயப்பட்டேன்.

x x x

எனக்கு கேசவ மூர்த்தியின் குடும்பத்தோடு பல வருடங்கள் இருந்த தொடர்பின் விளைவாக கேசவ மூர்த்தியின் வாயிலாகவே அந்தக் குடும்பத்தைப் பற்றிப் பல செய்திகளை அறிந்து கொண்டிருக்கிறேன். அந்த அம்மாள் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரே பெண். சில செல்வந்தர் குடும்பங்களில் நாம் காணுகின்ற ஒரு வித மௌடீகமான ஆணவம், வரட்டு கௌரவம், யாரையும் லட்சியம் செய்யாத போக்கு இவைகளெல்லாம் அந்த அம்மாளிடம் நிறைய இருந்தன.

'கேசவ மூர்த்தியின் தந்தை காலஞ்சென்ற சீனிவாசுலு, ஒரு கைப் பொம்மையாகவே இயங்கிக் கொண்டிருந்தார் என்று சொல்ல வேண்டும். வீட்டில் கேசவமூர்த்தியின் அன்னையைத் தவிர, அவளுடைய தாயாரும், அவளுடைய ஒரு அத்தைக் கிழவியும் இருந்தார்கள். மொத்தத்தில் அல்லி ராஜ்யமாக இயங்கிக் கொண்டிருந்த அக் குடும்பத்தில் அம்மூவர் இட்டது தான் சட்டமாக இருந்தது.

சீனுவாசலுவின் உடன் பிறந்த ஒரு சகோதரியையும்,ஒரு தம்பியையும் அவர்கள் நெருங்க விடவேயில்லை. சிறுகச் சிறுகக் காரணமற்ற துவேஷத்தைக்கிளப்பி அவர்கள் உறவையே அடியோடு கத்தரித்து விட்டார்கள்.அந்தக் குழப்பத்தில் இருந்த சீனுவாசலுவின் மனம் உண்மையில் எந்த நிலையிலிருந்தது என்பது உளநூல் ஆராய்ச்சியாளரின் சோதனைக்கே உரிய விஷயம்.

நீண்ட நாள் நோய்ப் படுக்கையில் இருந்து உயிர்விட்ட சீனிவாசலுவுக்கு மனநோய் காரணமாகவே மரணம் நேர்ந்திருக்கவும் கூடும். எது எப்படியிருந்த போதிலும் அந்தக் குடும்பத்தில் கேசவ மூர்த்தி வந்து பிறந்தது பெரிய அதிசயமே.

சீனிவாசலுவின் மரணத்திற்குப் பிறகு கேசவமூர்த்தி தன்னுடைய தந்தை வழி உறவினர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு உதவிசெய்ய முயன்றான். பற்றாக்குறை வருமானத்தில் கஷ்டப்பட்ட சிறிய தந்தையின் குடும்பத்திற்கும், வறுமையில் உழன்ற சீனிவாசலுவின் விதவை சகோதரிக்கும் மாதா மாதம் கணிசமான தொகை அனுப்பும்படி எஸ்டேட் மானேஜருக்கு உத்தரவிட்டான்.

தந்தையின் மரணத்திற்குப் பிறகு பக்கத்து ஊரிலிருந்த தன்னுடைய அத்தையம்மாளை முதன் முறையாக சென்று பார்த்தபொழுது அவளுக்கு எழில் குலுங்கும் பருவத்தில் ஆண்டாள் என்ற பெயரில் ஒரு நடமாடும் பூங்கொடி ஒன்று இருந்தது. பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டு வீட்டில் இருந்த அவளை அருகிலிருந்த நகரத்துப் பெண்கள் கல்லூரியில் சேர்த்து, அங்கேயே அவர்கள் குடியிருக்க ஏற்பாடு செய்தான்.

தேவைக்கு மீறி வந்து கொண்டிருந்த எஸ்டேட் வருமானத்தை இப்படிக் கிளை பிரித்துவிட்டு, செல்வர்க்கு அழகான காரியமாகிய 'செழுங்கிளை தாங்குத'லை அவன் மேற்கொண்டபோது உண்மையில் எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

அவனுடைய உழுவலன்பன் என்ற முறையில் அவனது உள்ளம் வளர்த்த மற்றொரு எண்ணத்தையும் நான் நன்றாக அறிந்திருந்தேன். ஆண்டாளை மணந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம்தான் அது. அந்த விருப்பத்தைப் பகிரங்கமாகவே அவன் பிரஸ்தாபிக்கவும் தொடங்கியிருந்தான். அந்தக் குறுகிய காலத்திற்குள் ஆண்டாளிடம் அவன் காட்டிய ஈடுபாட்டைக் கண்டு நானே சற்று பிரமிக்கத்தான் செய்தேன். 'முந்தைத் தொந்தம்' என்ற சொற்றொடரின் பொருள் எனக்கு அப்பொழுதுதான் விளங்கிற்று.

x x x

கேசவ மூர்த்தி செய்த புதிய ஏற்பாடுகளின் தொடர்ச்சியாக, அறியாமையும், அர்த்தமற்ற துவேஷமும் அந்தக் குடும்பத்தில் விளைத்த சோக நாடகத்தின் சிகரம்தான் கேசவ மூர்த்தியின் சித்தப் பிரமை.

இதை கேசவ மூர்த்தியின் அன்னை வாயிலாகவே நான் கேட்ட போது என் மனம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. கேசவ மூர்த்தி எங்கே ஆண்டாளைக் கலியாணம் செய்து கொள்வதன் மூலம் தங்கள் குடும்ப கௌரவம் குலைந்து விடுமோ என்றஞ்சிய அவனுடைய

னுடைய உணவிலும் கலந்து கொடுத்து விட்டார்களாம். அதன் விளைவுதான் அவர்கள் சற்றும் எதிர்பாராத இந்த அவலம்!

அந்தச் செய்தியைக் கேட்ட பொழுது, கேசவ மூர்த்தியின் மதிப்பையும் அருமையையும் ஒரு சிறிதும் அறியமாட்டாமல் அவனைக் குற்றுயிராக்கிவிட்ட அந்த ஜடங்களை அப்படியே அறைந்துவிட வேண்டும் என்று ஆத்திரம் வந்தது. கேசவ மூர்த்தியின் அன்னை, இப்படி மகனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்று கனவிலும்

தாயாரும் மற்ற இரு மூதாட்டிகளும் ஏதோ ஒரு 'பில்லி சூனியக்கார'னின் மூலம் அவன் மனத்தைத் திருப்ப முயன்றுளாம். அவன் மந்திரித்துக் கொடுத்த மருந்தைக் கேசவ மூர்த்தி அறியாமல் அவ

எதிர்பார்த்தவளல்ல. இப்பொழுது அவள் குரலில் உண்மையில் சொல்ல வொண்ணுத் துயரம்தான் எஞ்சி நின்றது. பழைய அகம் பாவத்தின் மங்கிய சாயைகூடக் காணப்படவில்லை.

x x x

'ஸ்பெஷலிஸ்டு' யோசனையின் பேரில் இரண்டு மாதங்களுக்கு மேலாக ஆண்டாளைக் கொண்டே கேசவ மூர்த்தியின் தேவைகளைக் கவனித்துக் சிகிச்சை செய்ததில் அவனது நிலைமை வெகுவாக முன்னேறியிருந்தது. மற்ற யாருக்கும் அடங்காத அவன் ஆண்டாளின் சொல்லுக்கு மட்டும் மந்திரம் போல் கட்டுப்பட்டதுதான் விந்தையிலும் விந்தை!

ஒரு முறை நான்சென்ற பொழுது ஆண்டாள் அவனுக்குக் கையில் சாதத்தைப் பிசைந்து போட்டுக் கொண்டிருந்தாள். கேசவ மூர்த்தி அருகில் பரமசாதுவாக ஒரு குழந்தை போல் உட்கார்ந்து கொண்டு கவளம் கவளமாக வாங்கி வாயில் போட்டுக் கொண்டிருந்தான். அந்தக் காட்சி உண்மையில் எவர் மனத்தையும் உருக்குவதாக இருந்தது.

சாளரம் வழியாக மறைந்து பார்த்துக் கொண்டிருந்த கேசவ மூர்த்தியின் தாயார் கண்களைத் துடைத்துக் கொண்டு என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தபடி, "கேசவனுக்கு வெங்கிடாசலபதி புண்ணியத்தில் சீக்கிரம் நன்ருக சொஸ்தமாகட்டும். அந்தக் குழந்தையையே அவனுக்குப் பண்ணி வைத்து அவர்கள் இரண்டு பேரையும் கலியாண கோலத்தில் பார்த்தால்தான் என் மனசு குளிரும். ஆண்டாள் மட்டும் இல்லை என்ருல் அவன் நல்லபடியாக ஆகியிருக்கவே முடியாது. அந்தக் குழந்தைதான் என் வயிற்றிலே பால் வார்த்தது" என்றுநன்றிப்பெருக்கால் தடுமாறிய படி மொழிந்தாள்.

டாக்டர்கூட என்னிடம் தனியாக "சார், உங்கள் நண்பர் குண மடைந்தது என்னுல்தான் என்று சொல்லகூடிய ஆணவம் எனக்கு இன்னும் வரவில்லை. அந்தப் பெண் மட்டும் இல்லையானுல் இந்தக் கேஸ் 'க்யூர்' ஆவதே அபூர்வம். இரவு பகல் என்று பாராமல் இரண்டு மாதத்திற்கு மேல் அந்தப் பெண் கஷ்டப்பட்டிருப்பது உண்மையில் அவளுடைய உடல் இருக்கும் நிலைக்கு மீறிய யத்தனம் சார்" என்ருர்.

டாக்டர் கடைசியாகக் கூறியது எவ்வளவு உண்மையான விஷயம் என்பது இரண்டு வாரத்திற்குப் பிறகுதான் நன்ருகப் புலப்பட்டது. கேசவ மூர்த்திக்குப் பூரணமாகக் குணமாகி விட்டபிறகு எல்லோரும் காரில் திருப்பதிக்குச் சென்று பிரார்த்தனையைச் செலுத்தி விட்டு வந்தோம்.

அன்று இரவே ஆண்டாளுக்கு ஜுரம் கண்டுவிட்டது. இரண்டு மாதங்களுக்குமேல் கண் விழித்து உடலை வருத்திக் கஷ்டப் பட்டது அவளை ஒரே யடியாகப் படுக்கையில் கிடத்தி விட்டது.

நீண்ட காலத்திற்குப் பிறகு தற்காலிகமாக மகிழ்ச்சி நிலவத் துவங்கிய அந்த குடும்பத்தில் மறுபடி ஒரு சோகம் வந்து கவிழ்ந்து கொண்டது. கேசவ மூர்த்தி தனக்குப் புனர் வாழ்வு அளித்த 'தெய்வ'த்திற்கு அருகிலேயே உட்கார்ந்து சிசுருஷை செய்தான். ஆனுல் எதுவும் பயனளிக்கவில்லை. தன்னுடைய கடமையைப் பரிபூரணமாக நிறைவேற்றி விட்ட திருப்தியில் ஒரு வாரத்திற்குப் பிறகு கேசவ மூர்த்தியின் மடியிலேயே நகை முகத்துடன் உயிர்விட்டாள் ஆண்டாள்.

நாங்களெல்லாம் பயந்தது நடந்தே விட்டது.

ஆம்! கேசவ மூர்த்திக்கு மீண்டும் சித்தம் கலங்கி விட்டது! O



USE ALWAYS REDFORT MATCHES

THE STANDARD MATCH INDUSTRIES.
POST BOX No. 27
SIVAKASI.

போன் : 151 தந்தி : VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவிதமான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதறாஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR ..... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

காப்டன் கண்ணுயிரம்

'புனர்வசு'

தீபாவளிக்குப் பதினைந்து தினங்களுக்கு முன்பு மலேயாவிலிருந்து சிங்கப்பூர் வழியாக சென்னைக்குச் செல்ல விருக்கும் 'எஸ். எஸ். அனுசுயா' கப்பலில் இடம் பிடிக்க அந்த வருஷம் பல நூறு மக்கள் தவித்துக் கொண்டிருந்தனர். என்ன காரணத்தைக் கொண்டோ தெரியவில்லை. குறிப்பாக அந்த வருஷம் தீபாவளி நன்னுளைத் தாய் நாட்டில் கொண்டாட மலேயா தமிழ் மக்கள் அனைவரும் விரும்பினர்.

ஆனால் 'அனுசுயா'வில் எழு நூறு பேர்களுக்கு மேல் பிரயாண வசதி கிடையாது. பணம் படைத்த பலரும் மற்ற நடுத்தர குடும்பங்கள் சிலவுமே இடம் பெற முடிந்தது.

அன்று 'அனுசுயா' மலேயா மண்ணை விட்டு விலகும் போது இரவு 11 மணிக்கு மேலிருக்கும். நல்ல நிலவு. காற்றின் இனிமையையும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த அந்த சூழ்நிலை பிரயாணிகள் யாவருக்கும் பரவசத்தைக் கொடுத்தது.

கப்பல் புறப்பட்ட மூன்ருவது தினம் ஒரு பெரிய அதிர்ச்சி கொடுக்கும் விஷயம் ஏற்பட்டு விட்டது. 'அனுசுயா'வில் கடந்த ஏழுவருஷங்களாகக் கேப்டனுக இருந்த கண்ணுயிரம் திடுமென இறந்து விட்டார். அதைவிட அவர் இறந்து போனதற்குக் காரணமான விஷயத்தை அறிந்ததும் மக்கள் மேலும் பீதியடைந்தனர்.

"கண்ணுயிரம் அவரறையில் யாரோ ஒருவரால் குத்தப்பட்டு ரத்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தார்."

'கேப்டன் கண்ணுயிரத்தைக் கொன்றது யார்? அதன் காரணம் என்ன?' என்ற விவரத்தை அறியப் பலர் துடித்தனர். ஆனால் எவருக்குமே கேப்டன் கொலை விஷயம் புரியவில்லை.

கேப்டன் கண்ணுயிரத்தின் மரணத்தைக் குறித்து அனுதாபப் பட்டவர்களில் நாகரத்தினமும் ஒருவர். நாகரத்தினம் வருஷத்தில் ஐந்தாறு முறை மலேயாவிலிருந்து சென்னை வந்து போவார். மலேயாவிலிருக்கும் கேப்டன் கண்ணுயிரத்திற்கும் அவர் குடும்பத்திற்கும் அன்னியோன்ய சகவாசம் இல்லாவிட்டாலும் ஒருவரை யொருவர் நன்கு அறிவர். கேப்டன் கண்ணுயிரம்'அனுசுயா'கப்பலில் உத்தியோகம் ஏற்ற முதலிலிருந்தே அவருக்கு பரிச்சயம் உண்டு. பிரயாணமாகும் ஒவ்வொரு முறையும் கப்பலில் கண்ணுயிரத்தைச் சந்தித்து நாகரத்தினம் மணிக் கணக்காகப் பேசி மகிழ்வார்.

நாகரத்தினம் மலேயாவில் தோல் வியாபாரம் நடத்தி வந்தார். அவருக்கு இரண்டு மூன்று பங்களாக்களும் இருந்தன. அடிக்கடி கேப்டன் கண்ணுயிரமும் நாகரத்தினத்தை அவர் பங்களாவில் சந்

ஓடும் கப்பலில் காப்டன் படுகொலை. கொலையான வரைப் பற்றிய விவரங்கள் கூறிய கிருஷ்ணசாமியோ திடீரென்று மறைந்து விட்டார். காப்டன் கொலைக்குக் காரணம் யார்? திடீரென்று மறைந்து விட்ட கிருஷ்ணசாமி எங்கே? கதையைப் படியுங்கள். கதையே இக்கேள்விகளுக்கு விடை கூறும்.

தித்து வருவார். தன்னடக்கமுள்ள மனிதர் கண்ணாயிரம். ஆகையால் அவரைப் பற்றி அவரிடமிருந்து நாகரத்தினம் அதிகமாக அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் அவர் நண்பர்கள் மூலமாக கேப்டன் கண்ணாயிரத்தைப் பற்றி பல ருசிகர மான சம்பவங்களை அவர் கேட் டிருந்தார்.

முக்கியமாகக் கண்ணாயிரம் ஒரு பிரம்மச்சாரியாக இருந்தும் அவ ரிடம் பெண்கள் சகவாசம் ஒன்றுமே கிடையாது என்ற ஒரு திருப்திகர மான செய்தியைக் கேட்டது முதல் நாகரத்தினம் கண்ணாயிரத்தின் மீது அபார மதிப்பு வைத்திருந்தார். அப்படிப்பட்டவர், 'திடுதிப்'பென்று யாரோ ஒரு சதிகாரனால் குத்தப் பட்டு இறந்து விட்டார் என்று கேட்டது முதல் நாகரத்தினம் துடி துடித்தார்.

செய்தி கேட்ட அதிர்ச்சியுடன் நாகரத்தினம் கேப்டன் அறைக்கு விரைந்தார். அங்கே கண்ணாயிரம் தன்னறையில் குற்றுயிரும் குலையு யிருமாகத் தரையில் காட்சியளித்த தைக் கண்டதும் நாகரத்தினம் கண்ணை மூடிக் கொண்டு வெகு வேகமாகத் திரும்பி விட்டார்.

'திடுதிப்'பென்று கப்பலில் ஒரு கொலை ஏற்பட்டுவிடவே பிரயாணி களுக்கு பெரும் பீதி ஏற்பட்டு விட்டது. ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிதுடித்தனர். காரணத்தைக் கண்டு பிடிக்கும் வரை ஒருவரை யொருவர் சந்தேகக் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கண்ணாயிரம் இறந்த செய்தி உடனே கப்பல் முதலாளிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. 'அனுசுயா' சிங்கப்பூரை அடைந்த மறுகணமே 'திபு, திபு'வென ஏற்கனவே அங்கு காத்துக் கொண்டிருந்த போலீஸ் கப்பலினுள் நுழைந்தனர். ஒவ் வொருவரும் சோதனை செய்யப் பட்டனர். சோதனை முடிய இரண்டு நாட்களாயின. சோதனையின் பலன் பூஜ்யம்தான். கண்ணாயிரத்தின் சடலத்தைச் சிங்கப்பூரிலேயே இறக் கினர். மறுதினமே மீண்டும் 'அனு சுயா' சென்னையை நோக்கிப் புறப் பட்டு விட்டது.

கொலை நடந்த கணம் முதற் கொண்டு பிரயாணிகள் கண்ணா யிரத்தின் கொலையைப் பற்றி அறி யத் துடித்தனர். யாரைக் கேட்டால் விளங்கும் என்று ஒருவருக்குமே தெரியவில்லை. இறுதியாகக் கண்ணா யிரத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் ஒரு ருசிகரச் செய்தியை அம்பலமாக்க முயற்சித்தார்.

கண்ணாயிரம் பிரம்மச்சாரியாக இருந்தாலும் அவருக்கும் மலேயா ஜாதியைச் சேர்ந்த ஒரு அழகிக்கும் நெடு நாள் தொடர்பு உண்டு என்றும் அவர் கதையைக் கூற ஆரம்பித்தார்.

நாகரத்தினம் அந்த நபரின் கட் டுக்கதையை கேட்க விருப்பவில்லை. ஏனெனில் கண்ணாயிரத்தைப் பற்றி அவருக்கு நல்ல மதிப்பு உண்டு. எனினும் தனக்குத் தெரியாது பல விஷயங்கள் இருக்கக் கூடும் என்று கருதியே அவரும் அந்தக் கதையைக் கேட்க முற்பட்டார்.

கிருஷ்ணசாமி என்ற கண்ணா யிரத்தின் அந்த உறவினர், மலேயா அழகிக்கும் கண்ணாயிரத்துக்கும் மூன்று வருடத்திற்கு முன்பு ஏற் பட்ட அந்தத் தொடர்பைப் பற்றி விவரமாகக் கூற ஆரம்பித்தார்.

2

பதினைந்து இருபது வருடங் களுக்கு முன்பு மலேயா மண்ணை மிதித்த தமிழ்க் குடும்பங்களுள் ரத்தினசாமியின் குடும்பமும் ஒன்று. அவருக்கு ஒரு பெண்ணும் பிள்ளை யும் இருந்தனர். ரத்தினசாமியின் மனைவி சொக்கம்மா நல்ல அழகான பெண்ணானதால் அவளுக்குப் பிறந்த பெண் குழந்தை முனியம்மா

வும் தங்கப் பதுமை போன்றிருந்தாள். ரத்தினசாமி மலேயாவில் காப்பித் தோட்டத்தில் ஒரு தொழிலாளி.

இயற்கையிலேயே ரத்தினசாமி பயந்த குணம் படைத்தவர். தெய்வ பக்தி மிக்கவர். பிறர் வம்புக்குப் போக மாட்டார். சில சமயங்களில் வீட்டில் சும்மா அடைந்து கிடக்கும் சொக்கம்மாவை ரத்தினசாமி காப்பித் தோட்டத்துக்கு அழைத்துச் செல்வதுண்டு. அதனால் சில நாட்கள் வரை அவர் குடும்பத்துக்கு இரு பங்கு ஊதியம் கிடைத்தது. ஆனால் சீக்கிரத்திலேயே அவருக்கு ஒரு ஆபத்தும் காத்திருந்தது.

ஒரு நாள் ரத்தினசாமி சுரமாக வீட்டிலேயே படுத்து விட்டார். அன்று சம்பள தினம். பணத்தை வாங்கி வரச் சொக்கம்மாவே சென்றாள். யாவருக்கும் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டது. ஆனால் சொக்கம்மாவுக்கு மாத்திரம் சம்பளம் கொடுக்கவில்லை. எல்லோரும் சென்றுவிட்ட பிறகு காப்பித் தோட்ட மானேஜர் சொக்கம்மாவை அருகில் அழைத்து, "இந்தா சொக்கம்மா, உனக்கு எத்தனை பசங்க?" எனக் குசலப் பிரசனம் விசாரித்தார்.

வெகுளியான சொக்கம்மா மானேஜர் கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டுச் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தாள்.

மானேஜருக்கு சொக்கம்மாவின் அழகு, பைத்தியத்தைக் கொடுத்தது. அவள் கரங்களில் இருமடங்கு சம்பளத்தைச் சேர்த்துக் கொடுக்கும் போது திடுமெனச் சொக்கம்மாவின் கரங்களைப் பற்றத் துணிந்தார். சொக்கம்மா அவருடைய எண்ணத்தை அறிந்து வீராவேசமாக மானேஜர் கன்னத்தில் பளீரென்று அறைந்து விட்டாள்.

திருடனுக்குத் தேள் கொ[illegible] போன்று அ[illegible] மானேஜர் கருவிக் [illegible] சென்றார். சம்பளத்தை வாங்காமலேயே தன் மனைவி அழுது கொண்டு வருவதின் விஷயத்தை ரத்தினசாமி அறியத் துடித்தார். சொக்கம்மாவின் மூலமாக மானேஜரின் எண்ணத்தை அறிந்த ரத்தினசாமி வெகுண்டார். அவருக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. அன்றிரவு நடுச்சாமத்துக்கு மேல் 'விர்' ரென மானேஜரின் பங்களாவிற்குச் சென்றார்.

எப்படியோ அவருடைய அறையினுள் நுழைந்து ஏற்கனவே தான் எடுத்துக் கொண்டு வந்த கத்தியினால் மானேஜரை ஓங்கிக் குத்தி விட்டு ஓடிவந்தார். ஆனால் சத்தத்தைக் கேட்டுத் துரத்திவந்த நாய் ரத்தினசாமியின் கால்களை நன்றாகக் கவ்விக் கொண்டது. பிறகு ரத்தின சாமியால் ஓடவே முடியவில்லை.

கொலைக் குற்றத்திற்கு ஆளான ரத்தினசாமி விரைவிலேயே தூக்கு மேடையில் ஏற்றப்பட்டார். பிறகு ரத்தினசாமியின் குடும்பம் சிதைந்து போய் விட்டது. அன்றிலிருந்து சொக்கம்மா தன் ஒரே மகள் முனியம்மாவையும் மகன் கந்தனையும் கண்மணிகள் போல் காத்து வந்தாள்.

ஒரு வெள்ளைக்காரன் பங்களாவில் சொக்கம்மாவுக்கு ஒரு தாதி வேலையும் கிடைத்தது. பிள்ளையையும் பெண்ணையும் அங்கே வளர்த்து வந்தாள்.

பல வருஷங்களுக்குப் பிறகு முனியம்மா பேரழகியாகத் திகழ்ந்தாள். அந்தச் சமயத்தில் தான் கந்தனுக்கு நெருங்கிய நண்பன் மூலம் காலேஜ் படித்து வந்த கண்ணாயிரத்தின் சிநேகமும் கிடைத்தது.

கண்ணாயிரம் அடிக்கடி கந்தனைப் பார்த்துப் போவதுண்டு. தன் எஜ[illegible]னை வெள்ளைக்காரத் துரை [illegible] கண்ணாயிரத்துக்கு அறி[illegible] வைத்தான்.

கப்பல் கேப்டனை இருக்கும் அந்த வெள்ளைக்கார துரைக்கு கண்ணையிரத்தை முதன் முறை சந்திப்பிலேயே அவன் மீது ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. கண்ணையிரம்தான் கப்பலில் சேர விரும்புவதாகவும் அதற்குண்டான வழிகளையும் உதவிகளையும் செய்யும்படி வேண்டிக் கொண்டான்.

இரண்டு மாதத்திற்குள்ளேயே கண்ணையிரத்துக்குக் கப்பலிலேயே உத்தியோகம் கிடைத்தது. உத்தியோகம் ஏற்ற சில மாதங்களிலேயே கண்ணையிரம் கெட்டிக்காரன் என்று பெயரெடுத்து விட்டான். மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஓய்வெடுத்துக் கொண்ட அந்த வெள்ளைக்கார துரை அவனைத் தன் ஆசனத்தில் வைத்து விட்டுச் செல்ல மறக்கவில்லை.

கேப்டன் பதவி ஏற்ற கண்ணையிரம் கந்தனை என்றும் மறந்தவனில்லை. வெகு நாட்கள் வரை கந்தனுக்கு ஒரு சகோதரி இருக்கிருள் என்பது கண்ணையிரத்துக்குத் தெரியவே தெரியாது.

ஒரு நாள் யதேச்சையாகக் கண்ணையிரத்தைக் கந்தன் முனியம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். எடுத்த எடுப்பிலேயே முனியம்மா கண்ணையிரத்தைக் கவர்ந்து விட்டாள். 'என்னைவிட அழகான மனைவி உனக்குக் கிடைக்க மாட்டாள்' என்று முனியம்மாவின் முதற் பார்வை சொல்லாமல் சொல்லிற்று. ஆனல் கண்ணையிரம் முனியம்மாவைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை. காரணம் அவன் உத்தியோகம் தான்.

அழகிய பொருட்களைக் கையில் எடுத்துப் பார்க்காது அவைகளை அந்தந்த இடத்திலேயே பார்த்துத்தான் மகிழ வேண்டும் என்பது கண்ணையிரத்தின் கோட்பாடு. ஆனல் முனியம்மா இதை எப்படி அறிவாள்?

தன் உள்ளத்தைத் திறந்து கண்ணாயிரத்திடம் காட்ட எவ்வளவோ முயன்றாள். அவளுக்கு அவ்வளவு துணிவில்லை.

ஒரு முறை முனியம்மாவின் கலியாணப்பேச்சு தலை தூக்க ஆரம்பித்தது. கந்தனும் சொக்கம்மாவும் கண்ணாயிரத்திற்கு முனியம்மாவைக் கொடுக்க உத்தேசம் கொண்டிருந்த சமயம் கண்ணாயிரம் அங்கு வந்து நின்றான். பேச்சோடு பேச்சாக அவன் காதிலும் விஷயத்தைப் போட்டு வைத்தனர்.

கண்ணாயிரமும் சிரித்துக் கொண்டே "இப்பொழுதென்ன அவசரம் கந்தா?" என்றான்.

"இன்னும் இரண்டு வருஷங்கள் பொறுத்துக் கொள்ளுங்களேன். பிறகு உங்களிஷ்டம் போல் செய்து விட்டால் போகிறது", என்று கூறி மழுப்பி விட்டான்.

வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு காப்பாற்ற சொக்கம்மாவுக்குத் துணிவில்லை, அதைக் கண்ணாயிரத்திடமே சொல்லவும் சொல்லி விட்டாள்.

கண்ணாயிரம் கண்டிப்பாகக் கூறிய பதில் இதுதான்: "பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு காப்பாற்ற உங்களால் முடியா விட்டால் அதற்கு நானென்ன செய்வது?," என்று கூறி விட்டுச் சென்று விட்டான்.

இரண்டு மாதத்திற்குப் பிறகு எங்கெல்லாமோ சுற்றி விட்டு மீண்டும் மலேயாவுக்குத் திரும்பியதும் அவனை யறியாமல் அவன் கால்கள் முனியம்மாவைக் காண அவளுடைய வீட்டிற்குச் சென்றன.

அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் மூலமாக அவனுக்குச் சில சமாச்சாரங்கள் கிடைத்தன. கந்தன் இறந்து விட்டானென்றும் அதற்குப் பிறகு சொக்கம்மாள் முனியம்மாவை அழைத்துக் கொண்டு சிங்கப்பூருக்குச் சென்று விட்டாள் என்றும் கூறினர். ஆனல் அவன் அதை

நம்ப மறுத்தான். எப்படியாகிலும் அவளைக் கண்டு பிடிப்பது என்று கண்ணாயிரம் துடித்தான்.

ஒரு சமயம் கண்ணாயிரம் சிங்கப்பூருக்குச் செல்ல நேர்ந்தது. ஒரு ஓட்டலில் உட்கார்ந்து கொண்டு பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயம் அவனைத் தாண்டிக் கொண்டு ஒரு பெண்ணும் ஆணும் சென்றனர். அவர்களைச் சற்று நேரம் கவனித்துக் கொண்டிருந்த கண்ணாயிரம் ஒரு கணம் திகைத்தான். அவர்களைப் பின் தொடர்ந்து மாடிக்குச் சென்றான்.

இரண்டாவது மாடியில் ஒரு அறையினுள் இருவரும் நுழைந்தனர். சற்று நேரத்தில் உட் கதவும் தாழ்ப்பாளிடப்பட்டது. அந்த கதவினருகே சென்றான் கண்ணாயிரம்.

கதவின் மீது 'மோகன்லால்சேட்' என்று பொறிக்கப் பட்டிருந்தது. ஆனால் உள்ளே இருவருமே தமிழில் தான் பேசிக் கொண்டிருந்தனர். அதுவும் தூய தமிழில். அப் பெண்ணின் குரல் பெரும்பாலும் முனியம்மாவின் குரலாகவே இருந்தது.

'முனியம்மாவுக்கு இந்தச் சிநேகம் எப்படிக் கிடைத்தது?', என்று தெரியாமல் கண்ணாயிரம் துடித்தான். எப்படியாவது இதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துடனே படியினின்று கீழே இறங்கினான்.

மறு நாள் பொழுது விடிந்ததும் விடியாததுமாக கண்ணாயிரம் அந்த ஹோட்டலுக்குச் சென்றான். மோகன்லாலைப் பற்றி விசாரித்தான். ஆனால் அவர்கள் அளித்த பதில் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. நேராக மோகன்லால் அறைக்குச் சென்று அவர்களைச் சந்திப்பது என்றே மாடி ஏறினான்.

மாடியிலிருந்து 'திபு, திபு'வென ஒரு ஆணும் பெண்ணும் இறங்கினர். பெண் உருவத்திலிருந்தவள் வடநாட்டு உடையை அணிந்து மிகவும் உயரமாகக் காணப்பட்டாள். அவளது விலை உயர்ந்த புடவைகள் மிகவும் ஆடம்பரமாக இருந்தன. அவர்கள் இருவரையும் சந்தேகிக்கவே இடம் இல்லாமலிருந்தது. மீண்டும் கண்ணாயிரம் அவர்களைப் பார்த்துக் கொண்டே வாயடைத்து நின்று விட்டான்.

மேலும் இரண்டு மாதங்கள் சென்றன. அதே ஜோடிகளைச் சென்னையை நோக்கிப் பிரயாணமாகும் கப்பலில் கண்ணாயிரம் கண்டு விட்டான். மேல் தளத்தில் இரவு வெகு நேரம் வரை பேசி கொண்டிருந்த இருவரும் அப்படியே தூங்கி விட்டனர். கேப்டன் கண்ணாயிரம் மிகவும் துணிச்சலுடன் மோகன்லாலுக்கு அருகில் படுத்திருக்கும் அந்தப் பெண்ணிடம் நெருங்கினான். நல்ல வேளையாகத் 'திடும்' என அந்தப் பெண்ணும் விழித்துக் கொண்டாள்.

கண்ணாயிரம் மிகவும் ஆவலாக, "முனியம்மா, இதென்ன வேஷம்? உன்னை நான் எங்கெங்கு தேடுவது?", என்று பரிதாபமாகக் கேட்டான்.

மாறு வேடத்தில் அலைந்து கொண்டிருந்த முனியம்மாவும் கண்ணாயிரத்தைப் புரிந்து கொண்டாள். "ஆ! நீங்களா?" என்று திடுக்கிட்டாள். மேலும் அவள், "என்னை நீங்கள் நம்புங்கள். சில நாட்களாக இந்தப் பணக்காரனையே சுற்றிக் கொண்டிருக்கிறேன். காரணம் என் சகோதரனை மீட்பதற்காக", என்று கூறி அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

கண்ணாயிரம் துடிதுடிப்புடன், "கந்தனுக்கு என்ன வந்து விட்டது முனியம்மா?", என்று பதறிக் கேட்டான்.

"ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள்? அவன் மீது அபாண்டமாக ஒரு திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அவனை மீட்கவே நான் இப்படி வேஷம் போட வேண்டியிருக்கிறது. என்னை

இந்த ஸேட் சில தினங்களுக்கு முன்பு சந்தித்தான். நான் கேட்ட பொருளையும் இந்த ஸேட் சென்னை சென்றதும் கொடுப்பதாகக் கூறி னான். இது வரை இவன் என்னிடம் தவருக நடக்கவில்லை. இனியும் நடக்க விடாமல் பார்த்துக் கொள்வேன். என்னை நீங்கள் உதாசீனம் செய்தாலும் நான் உங்களை அன்றிலிருந்து மறக்கவில்லை'', என்று கூறி முனியம்மா தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள். மேலும் அங்கு நின்று விரசமாக்க விரும்பாது கண்ணாயிரம் விடை பெற்றுக் கொண்டான்.

3

முனியம்மா கூறியது போன்று பதினைந்து தினங்களுக்குப் பிறகு தனியாக 'அனுசுயா' கப்பலில் மலேயாவுக்குப் பிரயாணமாகிக் கொண்டிருந்தாள். அவளைத் தனியாகச் சந்திப்பதில் கண்ணாயிரம் மகிழ்ச்சி அடைந்தான். ஆனால் முனியம்மா அவனைச் சோதனை செய்ய முற்பட்டாள்.

"நீங்கள் உண்மையாக என்னை விரும்புகிறீர்கள் என்பது என்ன நிச்சயம்? ஆதலால் மலேயா சென்ற பிறகு என்னை என் தாயின் அனுமதி பெற்று மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவரை என்னிடம் நெருங்க வேண்டாம்,'' என்று கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

வேறு வழியின்றி கண்ணாயிரம் முனியம்மாவை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அவள் கூறிய படியே கண்ணாயிரம் சொக்கம்மாவைக் காணச் சென்ருன். ஆனல் சொக்கம்மாவைப் பற்றியும் அவள் குடும்பத்தைப் பற்றியும் பலர் பல விதமாகக் கூறுவதைக் கேட்டதும் முனியம்மாவை ஏற்கக் கண்ணாயிரம் பின்வாங்கினன். தான் காதால் கேட்ட சில விஷயங்களைச் சொக்கம்மாவிடமே கேட்டு அறிந்து கொள்ள விரும்பினன்.

அன்று சொக்கம்மாவும் கந்தனும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயம் கண்ணாயிரம் அங்கு சென்ருன். முறைப்படி உபசரிப்புகள் நடந்தன. கண்ணாயிரம் தொண்டையைக்கனைத்துக்கொண்டு சொக்கம்மாவைப் பார்த்து, "உங்கள் பெண்ணை மணந்து கொள்ள எனக்கு இஷ்டம்தான். ஆனல் அதற்கு முன் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்'', என்ருன்.

"என்னப்பா? புதிர் போடுகிருய்'', என்று இடைமறித்தான் கந்தன் சிரித்துக் கொண்டே.

"புதிரில்லை கந்தா. கல்யாணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிரல்லவா?''

"வாஸ்தவம். உண்மைதான். உன் சந்தேகம் என்ன?''

"பலர் பலவிதமாகச் சொல்லிக் கொள்கிருர்கள். ஆனல் நான் அதை காது கொடுத்துக் கேட்கவில்லை. ஆனல் ஒன்றே ஒன்று. உனக்கு முனியம்மா சொந்த சகோதரிதானே?''

இந்தக் கேள்வி கேட்டதும் கந்தனுக்குக் கோபம் வந்து விட்டது. "இதோ பார் கண்ணாயிரம். நீ அனாவசியமான கேள்விகேட்டு எங்களைத் துன்புறுத்தாதே. என் தங்கையை மணந்து கொள்ள இஷ்டமில்லாவிட்டால் இஷ்டமில்லை என்று சொல்லிவிடு. இத்தனை நாட்களாக நீ என்னுடன் பழகியும் உனக்கு இந்தச் சந்தேகம் ஏற்பட்டது எனக்கு ஆச்சரியமாகத்தானிருக்கிறது. நாங்கள் நினைத்திருந்தால் அன்றைக்கே முனியம்மாளின் கலியாணத்தை முடித்திருப்போம். ஆனல் நீ வாக்கு கொடுத்ததால் நாங்கள் காத்துக் கொண்டிருக்கிரேம்'', என்று மிகவும் தைரியத்துடன் பேசினன்.

"வித்தியாசமாக நினைத்துக்

கொள்ளாதே கந்தா. நான் முனியம்மாவை மணக்கப் போவது நிச்சயம் தான். எங்கே எப்போது என்று கேட்டு விடாதே. அதுவரை அவளைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு'', என்று கூறி அவர்களிடமிருந்து கண்ணுயிரம் விடை பெற்ருன். அவன் சென்ற பிறகு கந்தன் தன் தாயிடம் ''இதோ பாரம்மா. இவனை நம்புவதில் பிரயோசனமில்லை. வேறு யாருக்காவதுதான் முனியம்மாவைக் கொடுக்க வேண்டும். அதுவு மல்லாமல் கண்ணுயிரம் கப்பலில் ஊர் ஊராகச் சுற்றுகிருன். அவனை நம்பிப் போகும் பெண் காலத்தை எப்படி நிம்மதியாகக் கழிப்பது? ஆதலால் நாம் சீக்கிரத்திலேயே முனியம்மாவுக்கு வேறு இடத்தில்தான் வரன் பார்க்க வேண்டும். கண்ணுயிரத்தை நம்புவதில் பிரயோசன மில்லை'' என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

இந்தச் சமயத்தில் சொக்கம்மாவின் தூர உறவினர் ஒருவர் அவளைத் தேடிக் கொண்டு அங்கே வந்தார். அவர் கூடவே முப்பது வயதுள்ள ஒரு வாலிபரும் வந்தார். அவளைப் பார்த்ததும் சொக்கம்மாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. எதையெல்லாமோ பேசிவிட்டு முனியம்மாவை அந்த வாலிபனுக்கு முடிப்பது என்று நிச்சயித்துக் கொண்டாள். ஆனல் முனியம்மாவின் மனத்தை அறியவும் ஆசை கொண்டாள். முனியம்மாள் ஒரே பிடிவாதமாகக் கண்ணுயிரத்தைத் தான் மணக்கப் போவதாகக் கூறிவிட்டாள். கூடவந்த வாலிபனுக்கு முனியம்மாவின் வார்த்தைகள் எப்படியோ கேட்டு விட்டன. முனியம்மா தன்னை மணந்து கொள்ள குறுக்கே இருப்பவன் கண்ணுயிரம் ஒருவன்தான் என்பதை அறிந்ததும் அவன் மனம் துடியாய்த் துடித்தது. அதிலும் முனியம்மாவின் அழகில் மனதைப் பறிகொடுத்த அந்த வாலிபன் கண்ணுயிரத்தை எப்படியும் தீர்த்துக் கட்டிவிடுவது என்று முடிவு செய்து கொண்டான். அந்தச் சந்தர்ப்பத்தையும் அவன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

அன்று ஒரு நாள். முனியம்மாவும் கண்ணுயிரமும் தனியே சந்தித்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவருடைய பேச்சிலிருந்து அவன் அறிந்து கொண்ட உண்மை இதுதான். 'முனியம்மா எப்படியும் கண்ணுயிரத்தைத் தான் மணந்து கொள்வாள்' என்பது.

முனியம்மாவிடமிருந்து விடைபெற்று சென்று கொண்டிருந்த கண்ணுயிரத்தை அந்த வேலப்பன் என்ற வாலிபன் பின் தொடர்ந்தான். கண்ணுயிரத்தைப் பயமுறுத்திமுனியம்மாவின் மீதிருக்கும் ஆசையை உதறி விடும்படி செய்ய அவனைப் பின் தொடர்ந்தான். அதற்கு இணங்கா விட்டால் தன் கையிலிருக்கும் கத்தியால் அவனை தீர்த்துக் கட்டிவிடுவது. அவன் இந்தயோசனைக்கு வருவதற்கு முன்பே வேறொன்று நிகழ்ந்து விட்டது. அவ்வழியாகவே வந்து கொண்டிருந்த கார் ஒன்றிலிருந்த கண்ணுயிரத்தின் நண்பன் அவனைக் காரிலேற்றிக் கொண்டு சென்று விட்டான்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திய கிருஷ்ணசாமி என்ற நபர் சுற்றிலு முள்ளோரைப் பார்த்தார். மறுகணமே கப்பலிலிருந்து ஒலிபெருக்கி மூலமாக எச்சரிக்கை வந்தது. கப்பல் சென்னைக்குநேராகச் செல்லாது என்றும் எதிர்பாராத விதமாக சென்னையில் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது என்றும் அநேகமாக இன்னமும் பன்னிரெண்டு மணி நேரத்தில் அந்தப்புயல் கப்பலை நோக்கி வர ஏதுவாக இருக்கும் என்றும் எச்சரிக்கப் பட்டது. அதைக் கேட்டு மக்கள் யாவரும் மேலும் திகிலடைந்தனர். கப்பல்

வேறு வழியின்றி அதே இடத்தி லேயே நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மீண்டும் கப்பலைத் திருப்பிச் செல்ல விரும்பினர் எனி னும் பெரும் பான்மையானவர்கள் எப்படியாகிலும் தாய் நாட்டிற்குச் சென்று விட வேண்டுமென்று துடிக் கவே கப்பலை அங்கேயே நிறுத்தி விட்டனர்.

கிருஷ்ணசாமி நிறுத்திய பாதிக் கதையை முழுவதும் கேட்க யாவ ரும் துடித்தனர். ஆனால் கிருஷ்ண சாமி எங்கேயோ சென்று விட்டார். அவரைப் பல இடங்களில் தேடியும் ஒருவருக்கும் அவர் கிடைக்கவில்லை. இதனால் பலருக்கு சுவாரஸ்யமான கதை நின்று விட்டதே என்ற ஒரு குறை. எப்படியாவது அவரைக் கண்டுபிடித்து மேலும் நடந்தவற்றை அறிந்து விடவேண்டுமென்று யாவ ரும் விரும்பியது தான் மிச்சம். கதையைக் கூறின கிருஷ்ணசாமி எங்கே சென்று விட்டார் என்று ஒரு வருக்குமே தெரியவில்லை. கப்பல் உத்தியோகஸ்தர் சிலரிடம் அவ ரைப் பற்றி விசாரித்ததில் அப்படிப் பட்ட ஒரு மனிதர் அங்கு பிரயா ணம் செய்யவில்லை என்று கூறிவிட் டனர். பெரும் பாலோருக்கு அந்த கிருஷ்ணசாமி ஒரு புதிராகவே தென்பட்டார். கதை கேட்டுவந்த நாகரத்தினத்திற்கு மாத்திரம் ஏதோ சந்தேகம். அவருக்கும் இந்த கொலைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று ஊர்ஜிதப் படுத் திக்கொண்டார். மீண்டும் கிருஷ்ண சாமியை சந்திக்க நேர்ந்தால் எப்படி யாவது அவரைப் போலீஸில் ஒப்ப டைத்து விடுவது என்றே தீர் மானம் செய்து கொண்டார்.

ஆனால் அந்த கிருஷ்ணசாமி எப் போது அகப்படுவார்?

முடிவில்லாத இப்பிரச்னைக்கு சென்னை சென்ற பிறகும் நாகரத்தி னத்திற்கு விடை அகப்படவில்லை. சென்னையிலிருந்து நாகரத்தினம் மீண்டும் தன் சொந்த ஊரான திருச்சிக்கு பிரயாணமாகிக் கொண் டிருந்த ரயிலில் இருவர் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருவன், "நீ என்ன கந்தா அவ் வளவு அவசரப்பட்டு விட்டாயே? அந்தப் பய வேலப்பன் உன்னு டைய தங்கையை கலியாணம் பண் ணிக் கொள்ள சபதமிட்டுக் கடை சியில் கண்ணுயிரத்தைக் கொன்று விட்டான். நீ என்னடா வென்றால் அந்தப்பாவி வேலப்பனை கப்பலிலே கொன்று விட்டது மல்லாமல் தண் ணியிலேயும் தூக்கிப் போட்டுட் டாயே" என்றான்.

கந்தன் பதிலளித்தான். "அடே! நீ ஒண்ணு. நானா அந்த கொலையை செஞ்சவன். அதைச் செய்தவள் என் தங்கை முனியம்மாதான் அப்பா. அவதானே அந்த 'கிருஷ்ணசாமிங்கிற வேலப்பனைத்' தீர்த்து கட்டினது. பாவம்! கண்ணு யிரம் உயிருள்ளவரையிலும் முனி யம்மா அவனையேதான் நம்பிக்கிட்டி ருந்தா. இப்போது கூட பிடிவாதம் பிடிக்கிறாள். தனக்குக் கலியாணம் வேணும், ஒண்ணும் வேணும்னு பிடிவாதம் பிடிக்கிறாள். நான் எவ்வ ளவோ சொல்லியாச்சு. அவ கேக்க மாட்டேங்கறு", என்றான் கந்தன் தழுதழுத்த குரலில்.

"நாம் என்ன பண்ணலாம் அவ தலையெழுத்து அப்படியிருந்தா? அவ அப்பிடி வேற ஒருத்தனைக் கலியாணம் பண்ணிக்கணும்னு நினைச்சிருந்தா அந்த வேலப்பனையே கட்டிக்கிட்டு இருக்க மாட்டாளா? அதுதான் போகட்டும். அந்த பய கண்ணுயிரம் வேறு ஒரு பெண்ணை கட்டிக்க நினைச்சிருந்தா கட்டிஇருக் கக் கூடாதா? ரெண்டு பேருமே அதிசயப் பிறவிகள்", என்று சமா தானம் கூறினான்.

"ஆமாம்! கண்ணுயிரமும் முனி யம்மாவும் அதிசயப் பிறவிகள் தாம். அதுமட்டு மல்ல தெய்வப் பிறவி களும் கூட" என்று நாகரத்தினத் தின் மனம் ஆமோதித்தது.



1. கால வழியில் நெடுந்தூரம்—சரிதம்
காண அரிய இருட்பாதை
ஆல விடமொடு செந்தழலும்—கூடி
அரசன் உருவினில் ஆண்டனகாண்.

2. பன்னும் அறநூல் பலகூறும்—பழி
பாவம் அனைத்தும் அவன்புரிந்தான்
என்ன கொடுமைகள் உண்டுலகில்—
அவை
எல்லாம் விளைந்தன அவ்வுலகில்.

3. புதிய விதிகள் நிதம்செய்வான்—எதிர்
போதனை செய்தால் அதம்செய்வான்
விதியின் கொடுமை என்றெண்ணி—பலர்
வேற்று நகரம் விரைந்திட்டார்.

4. பின்னும் துயர்கள் நிற்கவில்லை—இடம்
பெயர்ந்தோர் தொல்லையும் பெயரவில்லை
அன்னம் அறியா மதலைகளும் - அவன்
ஆணை அறிந்தே பதறுமம்மா.

5. மக்களில் அறிஞர் பலர்கூடி—அவன்
மாளிகை முன்னே ஒருமித்தார்

அக்கணம் மன்னன் மதிலேறி—அவர்
அத்தனை பேரையும் கொல்வனென்றான்.

6. நல்லோர் கையினில் வாளில்லை—எந்த
நாளும் சமரினில் நின்றறியார்
கல்லா அரசன் சொல்லுணரான்—எனக்
கடவுளை வேண்டிக் கரங்குவித்தார்.

7. அணுவில் உறைந்திடும் ஆண்டவனை—அவர்
அணுகுண் டருளிட வேண்டவில்லை
அணுவாய் உலகம் சிதறுதற்கே–வகை
ஆன கருவிகள் கேட்கவில்லை.

8. கரிய மனத்துக் காவலனை—வெற்றி
காணுதற் கான வழிதோன்றி
பெரிய மனத்தவர் உத்தமர்கள்—அருட்
பெருமான் தன்னையே வேண்டிடுவார்:

9. "வானின் றருளும் முகில்வண்ணா-நீதான்
வரமொன் றருளிட வேண்டுமய்யா
ஊனில் உறங்கிடும் மக்களிடை—உயிர்
ஊட்டும் கவிஞனைத் தந்திடுவாய்!".

MACHADO BROTHERS

GENERAL MERCHANTS, SHIPPING AGENTS & CLEARING AGENTS.

"CAPTAIN MACHADO BUILDING",
Beach Road, Tuticorin.

Telegrams : "MACHADO"   Phone : 1 and 333.

Agents in Tuticorin Port of following Shipping Lines:

EASTERN STAR LINES LTD, COLOMBO:
Tri-weekly service to Colombo.

MAERSK LINE, COPENHAGEN:
Bi-monthly service to : U.S. Atlantic & Canadian Ports.

EVEREST STEAMSHIP CORPORATION S/A:
Monthly service to : Far East, Japan & Pacific Ports.

ELLERMAN BUCKNALL & ASSOCIATED LINES:
Regular Service to: U.S., East-African & South American Ports.

INDIA STEAMSHIP COMPANY LTD:
U.K. and Continental Ports.

For everything in PRINTING

Please Contact

THE KARCO LITHO WORKS

PHOTO OFF-SET & LITHOGRAPHIC PRINTERS

EQUIPPED WITH LATEST MACHINERIES & EXPERT PRINTERS

POST BOX No. 56, SIVAKASI

காமனை வென்ற கண்

மனிதர்களுடைய திறமைக்குள் முக்கியமானது பிறர் மனம் நோகாமல், எதிராளிகளோடு மாறுபடுவதே. இதையே திருமதி பாண்டித்துரை செய்து கொண்டிருந்தார்.

"முத்தையன் இருந்தால் எங்களுக்கு என்ன? கப்பல் ஏறினால் எங்களுக்கு என்ன? காட்டிலே புலியைக் கொன்றால் எங்களுக்கு என்ன? எங்கள் வீடு புகுந்து, எங்கள் வீட்டிலே யாரைக் கொல்ல கத்தியும் கையுமாக வந்து விட்டாய்? நீ பெண்ணா, பேயா? உனக்கு நன்றி கிடையாதா?"

கேள்விக்கு மேல் கேள்வியாக வில்லிலிருந்து வரும் அம்பைப் போல செண்பகத்தின் நெஞ்சிலே சரமாரியாகப் பாய்ந்து கொண்டிருந்தன. பாண்டித்துரையின் மனைவி ஆக்ரோஷமாகப் பேசப் பேச, ஆத்திரம் கொண்ட அரவம் வேர்ப்பை கண்டதும் தலையைக் கீழே தாழ்த்துவது போன்று முகத்தைக் குனிந்தாள் செண்பகம். மீண்டும் சொல்லம்புகள் பாயப்பாய முகத்தைச் சுவருக்கு நேரே திருப்பிக் கொண்டாள். கதவின் பக்கமாக நகர்ந்து வெளியேறி விடுவாள்; கதவு அடைத்திருக்கிறதே!

"கதவைத் திறந்து வெளியே அனுப்புங்கள். நல்லவர்களுக்கு உதவி செய்தால் நன்றி உண்டு; அல்லாதவர்களுக்கு உதவி செய்தால் ஆபத்து" என்றாள்.

செண்பகம் காதைப் பொத்திக் கொண்டாள். அவள் காதிலே ஈயம் உருக்கி விட்டது போல் இருந்தது. செண்பகம் திட்டுகளை வாங்க வாங்க எனக்கே மனம் வெதும்பியது. "பெண்தானே, போனால் போகிறது. விட்டுவிடம்மா" என்றேன்.

"விட்டு விடுகிறதா? இவளுக்காக இரவு பகலாக 'ராஜா' (பாண்டித்துரை) அலைகிறார். நீங்கள் அலைகிறீர்கள். பணமும் விரயம்; சிரமம். இந்தப் பெண் கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தாளா? யாருக்காக இத்தனை கஷ்டம் நாம் அடைகிறோம். இவள் சுகப்பட நாம் உதவி புரிவதை எண்ணினாளா?"

"நீங்கள் எவரும் கஷ்டப்பட வேண்டாம்," என்று மீண்டும் தலைதூக்கிச் சீறினாள்.

சுகி

"உன்னிடம் நாங்கள் கேட்க வில்லை. உனக்காகப் பயந்து முத்தையனை எவரும் தேட வில்லை. முத்தையன் மீது எத்தனையோ பேருக்கு அக்கறை உண்டு. அவரவர்கள் கொண்டுள்ள பாசத்தையும் பந்தத்தையும் நீ யார் கட்டுப்படுத்த?"

"அவர் என்னுடையவர். அவரைக் கோழையென யார் சொன்னாலும் நான் சம்மதிக்க மாட்டேன். அவர் மீது களங்கம் வருவதற்கு யார் காரணமோ அவர்களைப் பழி தீர்ப்பேன்."

செண்பகத்தின் குரலில் உறுதியும் தளரா ஊக்கமும் பிணைந்து நின்றது. பாண்டித்துரை சிரித்துக் கொண்டு "உனக்குள்ள அக்கறையை நாங்கள் பாராட்டுகிறோம்; உனக்காகத்தான் நாங்கள் அக்கறை எடுக்கிறோம் செண்பகம். நீ வீணாக சந்தேகப்பட்டு மனதைப் புண்படுத்த வேண்டாம். போய்ச் சேர்," என்று சமாதானமாகச் சொன்னார்.

"இவளுக்கு என்ன பயமா? நாளை முதல் இங்கே அரண்மனையில் கால் வைக்கட்டும். உதைத்து அனுப்பச் சொல்லுகிறேன். கத்தி பிடிக்க உனக்குத்தான் தெரியுமா? எங்களுக்குத் தெரியாதா? கை யில்லையா?"

செண்பகம் என்ன நினைத்தாளோ, அவள் மனம் எத்தனை அவதிப்பட்டதோ, 'ஓ' வென அலறிக் கொண்டு ஜமீந்தாரிணியைக் கட்டிக் கொண்டு கதறி விட்டாள். எத்தனை கொடிய அரக்க உள்ளமாக இருந்தாலும் இரக்கம் காட்டும் நிலை வரும். செண்பகம் அழுது புலம்பியதும், "என் காதலன் கோழையன்று, வீரன்", என்ற உயரிய எண்ணமும் என் மனதிலே மாற்றந் தந்தன. முத்தையனைப் பற்றி எவ்வளவு உயர்வாக எண்ணுகிறாள்; வீரனாக நினைக்கிறாள்!

"செண்பகம், நீ அழாதே. சிங்கப்பூர் கப்பலில் முத்தையன் போகவில்லை. போனதை நான் பார்க்கவில்லை. பார்த்ததாகக் கடிதம் எழுதியதாகச் சொன்னதும் பொய்."

என் மனம் இளகி உள்ளதைச் சொல்லிவிட்டது. படுபாவி பாண்டித்துரை எவ்வளவு நெஞ்சழுத்தம் உள்ளவர். என்னையே விழுங்கி ஏப்பம் விடுகிறாரே!

"ஏனய்யா! நீங்கள் பார்வதியம்மாள் உயிர் பிழைக்க உண்மை எழுதினீர்கள்; இப்போது செண்பகம் கோபங் கொள்ளாதிருக்க நடந்ததை மாற்றிச் சொல்லுகிறீர்கள். இரண்டில் எது உண்மையோ? எப்படி இருந்தாலும் என்னிடம் முத்தையனைப் பற்றி யாரும் என்றைக்கும் ஒரு வார்த்தை காதிலே போட வேண்டாம். முத்தையன் புலிவேட்டை ஆடினாலும் சரியே; இல்லை; சிங்கப்பூரில் மூட்டை தூக்கினாலும் சரியே..."

பாண்டித்துரை என்னை எதிர்த்துப் பேசி அறியேன், அவர் குரலில் கோபம் இருந்தது; முகத்தைப் பார்த்தேன்; விஷமம் கேள்விக் குறி போடுகிறது. ஏதோ சூது இருக்க வேண்டும் என்ற திட்டத்தில் நான் வெளியேறினேன். அப்பால் எனக்கு வெளியுலகம் அனைத்தும் விழும் அருவி, வீசும் தென்றல், பசுமைக்

காட்சி அனைத்தும் 'பொய் பொய்' என்று ஓலமிட்டன.

உள்ளே பாண்டித்துரையின் மனைவி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்; அத்தனையையும் மறுவார்த்தை பேசாமல் செண்பகம் கேட்டிருக்க வேண்டும். அரை மணிக்குப் பின்னல் வெளியே வந்த செண்பகத்தின் கண்களில் கோப வெறிக்குப் பதில் குளிர்ந்த பார்வையும் நன்றி யுணர்ச்சியும் வட்டமிட்டன; அன்பின் மலர்ச்சியாக முகம் பூரிப்பாய் இருந்தது.

அடடா! பெண்கள் இதயமும் கோபமும் தொட்டாச் சுருங்கி செடியைப் போல எவ்வளவு பாதரஸ வேகத்தில் மாறுகின்றன? என்ன விதமாக செண்பகத்திற்கு சமாதானம் சொல்லி அனுப்பினர்கள்? உண்மையிலேயே, கப்பலில் ஏறித்தான் முத்தையன் போய் விட்டானு? பாண்டித்துரையிடம் முத்தையன்வந்து கெஞ்சியிருப்பான்; செண்பகத்தினல் தான் உயிரிழக்கவும் ஊரில் இருக்கவும் பிரியம் கொள்ளவில்லை; கண்காணுத சீமைக்குப் போக வேண்டும்—உதவி தேவை—என்றிருப்பான். முத்தையனைக் காப்பாற்ற பாண்டித்துரையே அனுப்பியிருக்கலாமோ? முத்தையன் போன விபரத்தை மறைக்க என் பெயரைப் பயன் செய்து

கடிதம் வழியாக நாடகப் படுத்தி விட்டார்! இவ்வாறு சிந்தித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் கோபாலவாரியாரின் நீலக் கடிதத்தை வாசித்தேன். எல்லாம் குழப்பம். எதைத் தெளிவு படுத்த வந்தேனே அதனல் குழம்பி நிற்கிறேன்.

நிமிர்ந்த உற்சாக உள்ளம் மீண்டும் குறுகிப் போக ஆரம்பித்தது. அவ்வேளையில் பாண்டித்துரை சிரித்தபடியே அறைக்குள் வந்தார். நெருப்பின் ஜ்வாலை என் மீது வீசுவதாக உணர்ந்தேன்.

"எவ்வாறு செண்பகம் சமாதானம் அடைந்தாள்? போகும் போது சிரித்துக் கொண்டு போனளே?"

"பெண்தானே"

"உலகத்திலேயே கையாள முடியாத கடின யந்திரம் பெண்மைதானே"

"மிகவும் சுலபம். அவள் எதை எதிர்பார்த்தாளோ அதைச் சொன்னேம். உலகத்தில் நம்மிடம் யோசனை கேட்பவர்கள் யோசனை கேட்க வரவில்லை; தங்கள் யோசனைக்கு ஆதரவு கேட்க வருகிருர்கள் என்பதை நான் அறிவேன்; அவள் யோசனை, முடிவே சரியென்று ஆதரவு தந்தோம். சிரித்தபடி போய்விட்டாள்!"

"பாண்டித்துரை, அந்தப் பெண் என்னைக் கொன்ருலும் கொன்று விடும். எங்கள் பரம்பரையில் எவருமே வாழையிலை நறுக்குவதைத் தவிர வேறு காரணத்திற்கு கத்தியை எடுக்காதவர்கள். இன்றே இப்போதே நான் திருச்சி போகிறேன்."

"பயந்து விட்டீர்களா? பயப்பட வேண்டாம். நீங்கள் திடுதிப்பென்று வந்து என் திட்டங்களை குளறுபடி செய்து விட்டீர்கள். செண்பகம் இனி இங்கே வரமாட்டாள். சத்தியம் செய்து கொடுத்து விட்டாள்."

"நான் பயமின்றி இருப்பதற்குப் பொய் சொல்லுகிறீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது."

"சில நாட்களுக்கு முன் காட்டிலே, மலைப் பாம்பையும் இராப் பொழுதையும் பயமின்றி கழித்தது எனக்குத் தெரியும். நீங்கள் உண்மையைக் கேட்கிறீர்கள். முத்தையன் தாயிடமும் ஒரு வார்த்தை பேசப் போவதில்லை, இந்தச் செண்பகம்."

"நம்ப முடியவில்லையே பாண்டித்துரை."

"முத்தையனுக்கு யாரால் கஷ்டம் வந்தது? முத்தையன் தாய்க்கு யாரால் மனத்துயரம் வளர்ந்தது. உங்களுக்கும் எனக்கும் நிம்மதி குலைந்தது யாரால்? கஷ்டங்களை உண்டாக்கியவள் யாரோ, அவள் தானே கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்."

"நானும் நீயும் நிதானத்தோடு ஒப்புக் கொள்ளுகிறேம். கிற வந்த சிறுத்தை எவ்வாறு ஒப்புக் கொண்டது?"

"ஒப்புக் கொண்டதோடு முத்தையன் சிங்கப்பூரில் வாழ்வதாக அவளே தன் மாமியிடம் சொல்லப் போகிருள்!"

"நிஜமாகவா?"

"வெற்றிக்கு வேண்டிய ஒரே எண்ணம் நம்பிக்கை."

பாண்டித்துரை சொல்லச்

சொல்ல வானம் பெயர்ந்து விழும்போது வட்டநிலா மட்டும் என் தலையிலே கிரீடமாக உட்கார்ந்தது போல் புளகாங்கித மடைந்தேன். சிங்கப்பூரில் முத்தையன்! இதனைச் சொல்லுகிறவள் செண்பகம். உலகத்தில் எது வேண்டுமானாலும் நடக்கும். இனி உண்மை செத்தது என்ற வியப்பில் ஆழ்ந்து விட்டேன்.

"வாருங்கள். சந்தேகம் இருந்தால், முத்தையன் வீட்டிற்குப் போகலாம்."

"நீங்கள் அங்கே வரமாட்டீர்களே!"

"காரில் போவோம். நீங்கள் முத்தையன் வீட்டுக்குள் போய்ப் பாருங்கள். நம்ப முடியாத காட்சியைக் கண்ணாரக் காணுங்கள்; காதாரக் கேளுங்கள்."

"முத்தையனே பிழைத்து வந்து விட்டானா?"

பாண்டித்துரை பேசாது கார் நிற்குமிடத்திற்கு நடக்க பசுவின் பின் செல்லும் கன்றானேன். காரில் ஏறினோம்.

பார்வதியம்மாள் வீட்டுக்குள் பேச்சுக் குரல்; ஒட்டி நின்று கேட்க கேடகப் பொழுது போய்க் கொண்டிருந்தது. என் புலன்களை நம்ப முடியாமற் தவித்தேன். பார்வதியம்மாள் ஆனந்தபரவசத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள். செண்பகம் ஒவ்வொரு சொல்லுக்கும் 'அத்தை கேளுங்கள். அத்தை, கேளுங்கள்' என்ற அடைமொழியில் குழைத்துத் தேனாக்கிக் கொண்டிருக்கிறாள்.

"முத்தையன் சிங்கப்பூர் போனது உண்மை; அங்கே இருக்கும் அவனை எப்படியேனும் அழைத்து வர வேண்டும். புலியை அடிக்கச் சொன்னது தப்பு. இனிச் சொல்லவும் மாட்டேன். சொன்னது தவறு. மன்னிக்க வேண்டும். எப்படியும் தன்னை மருமகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று மேலே மேலே பேசிக் கொண்டிருந்தாள். கேட்டுக் கிறுகிறுத்துப் போய்விட்டாள், முத்தையன் தாய்.

"செண்பகம், நீ சொல்வது அத்தனையும் எனக்குத் தேனாக, தேவாமிர்தமாக இருக்கிறது. உன்னை வந்து முன் பின் யோசிக்காமல் அடித்து விட்டேனே. என் பிள்ளை தாய் சொல் தட்டாதவன்; இப்போதாவது அறிந்து கொண்டாயே செண்பகம். திருச்சி ஐயா எழுதின கடிதப்படி சிங்கப்பூரி லிருந்து அழைத்து வருவார்!"

மகன மீது நம்பிக்கையுள்ள தாயைக் கண்டேன். மாமியார் மீது நம்பிக்கையுள்ள மருமகளாக செண்பகம் எவ்வாறு மாறினாள்? பாண்டித்துரை தம்பதிகள் என்ன மந்திரத்தையும் மாயத்தையும் போட்டார்களோ? ஒட்டுக்கேட்டபடியே வீதியில் நின்ற காருக்குத் திரும்பினேன். அப்போதுதான் ராமையாவின் தலை தெரிந்தது.

"என்ன 'ராஜா' வெளிப் பக்கம் மோட்டாரில் இருக்கவா நீங்கள் வீட்டுக்குள்ளே போய் வருகிறீங்க?"

"ஆமாம. முக்கிய தகவல் ஒன்று கொடுக்க வேண்டியதிருந்தது. அதனால்தான் வந்தேன்."

"ஆமாங்க. இந்தப் பய முத்தையன் செத்து ஒரு மாசம் ஆகப்போகுதே. சிங்கப்பூரிலே என்ன சிங்கம் புடிக்கிறான்? நல்ல புருடா விட்டிங்க. கடுதாசி எழுதியிருக்கிறீங்களே"

"ஆமாம் சிங்கப்பூருக்குப் போயிருக்கிறான். வந்துவிடுவான். அதுவும் அரண்மனை காரியமாகப் போயிருக்கிறான்" என்றேன். ராமையாவுக்கு என் மீது அவநம்பிக்கை. ஒரு வேளை முத்தையன் சிங்கப்பூருக்கே போயிருக்கலாமோ என்றும் யோசனையில் ஆழ்ந்தான். நான் அங்கிருந்து விடுதலை பெற்றுக் காருக்குள் வந்தமர்ந்தேன்.

பாண்டித்துரை "என்ன பார்த்தீர்கள்?"

நான் "செண்பகம் மனம் மாறி விட்டதைக் கண்டேன். எப்படி மாறினாள்?"

"எல்லாம் உங்கள் வாக்கு சாதுர்யம்"

"நீங்களே என்னை ஆட்டி வைத்துக் கொண்டு நான் ஆட்டுவிப்பதாக பலரையும் நம்ப வைக்கும் திறமை படைத்தவர்"

"மன்னியுங்கள். பெரிய ஜீவனை பார்வதியம்மாள் உயிர் பிழைத்திருக்க இதைச் செய்தேன். செண்பகத்திற்கு நல்ல உதையாம். தன்மகன் சிங்கப்பூர் ஓடி விட்டதற்கு அவளே காரணம் என்று அடித்தாளாம். அடிபட்ட வெறியில் நம் வீட்டுக்குக் கத்தியோடு கர்வமாக வந்து நின்றாள்."

"பாவம். இனி நடக்க வேண்டுவது என்ன?"

"பொய்யைக் கொண்டு ஒருவாறு மெய்யைப் போன்று திரை போட்டு வைத்து விட்டோம். நீங்கள் சொல்ல வந்த கடிதப்படி வேண்டுவன செய்வோம்."

"உலகம், 'முத்தையன் வேட்டைக்குப் போகவில்லை. பொய் சொல்லி விட்டுக் கண் காணாத சீமைக்குப் போய் விட்டான்' என்று எண்ண வேண்டும். நாம் உளவறிய வேண்டும். இது உங்கள் யோசனையா?"

"ஆமாமாம். அப்போதுதான் பார்வதி அம்மாளும் செண்பகமும் நம்முடைய வம்புக்கு வர மாட்டார்கள்?"

"அப்படியானால், நாம் இனி ஆராயப் போவது, தேடிப் போவது எவருக்குமே தெரியக் கூடாதா?"

"கூடாது. நாம் ஆராய்ந்து முடிவு கட்டும் வரை செண்பகம் முத்தையன் தாயிடம் பாதுகாவலாக இருக்க வேண்டும். அடிக்கடி முத்தையன் புலி வேட்டைக்குப் போக வில்லையென்று சொல்லவும் வேண்டும்"

"இதைச் சொல்லுவதற்கு எவ்வாறு சம்மதங் கொண்டாளோ?

"தங்களுடைய நீலக் கடிதத்திலிருந்து முத்தையன் மலையாளத்தில் வைத்தியர் வீட்டில் சிகிச்சை பெற்று வருகிறதாகச் சொன்னேன். நானும் நீங்களும் மலையாளம் போக இருக்கிறோம். போய்த் தேடுவதாகவும் செண்பகத்திடம் சொல்லியிருக்கிறேன்"

"உம்"

"உங்களுடைய கோபாலவாரியாரைப் பார்க்கவேண்டும்?"

" பார்த்து...? "

" அங்கே முத்தையன் வந்தானு என்று கவனிக்கவேண்டும்"

" கவனித்து .."

பாண்டித்துரையின் முகத்திலே கோபம் நெளிந்தது. என்னுடைய பரிகாசம் பிடிக்கவில்லை. எனக்கு ஒரு உண்மை தெரிந்தது. எவர் எவர் மனம் எதை விரும்புகிறதோ அதை அவர்கள் நம்பும்படி செய்வது தான் முன்னுக்கு வரும் சிக்கலில்லாத சீரிய வழி. பாண்டித்துரைக்கு இது கல்லாக் கல்வியாகப் படிந்திருக்கிறது. மனோசக்தி நிறைந்த பாண்டித்துரைக்குப் பிறர் மனசில் இடம் கிடைத்ததில் வியப்பில்லை.

" தம்பி, உங்களுடைய பாசத்தையும் பரிவையும் எண்ணி வந்தது தவறு. முத்தையன் எக்கேடு கெட்டால் என்ன? நான் நிஜமாகவே திருச்சி திரும்புகிறேன் "

" அப்படியே செய்யுங்கள். நானும் குற்றுலத்தை விட்டு தலை மறைவாய் போய் விட வேண்டும். இல்லாவிட்டால் கருணை நிறைந்த தாயோ, காதல் வெறி கொண்ட பெண்ணோ உயிரைப் பழிவாங்குவார்கள். "

கல் கிணற்றுக்கு ஏற்ற இரும்புத் தோண்டியாக பதில் வந்தது. இருவரும் சமாதானம் செய்து கொண்டோம். ஒரு வார காலம் மலையாளம் போய் கோபால்வாரியாரைப் பார்த்து அவர் எழுதிய கடிதம், அனுப்பிய விவரம் அறிய ஒப்பந்தம் செய்தோம். எங்கள் பிரயாணம் அவரது மனைவியைத் தவிர எவருக்கும் தெரியாது; தெரியவும் கூடாது என்றும் எண்ணினோம்.

கார் மெதுவாக அவர் பங்களாவுக்குள் நுழைந்தபோது நான் திடுக்கிட்டேன்.

யாரோ 'போர்டிகோ'வில் நின்றபடியே " இது தானு பாண்டித்துரை பங்களா? " என்று காவலாளியிடம் கேட்டு கொண்டிருந்தார். அந்தக் குரல் ரெயிலில் கேட்ட நினைப்பு வந்தது.

"அதோ, அவர்தான் கோபாலவாரியார் " என்று கத்தினேன்.

கோபாலவாரியார் திரும்பிப் பார்த்தார்,

(தொடரும்)



நெய்க்காரன்:— நெய் வேணுங்களாம்மா?
வீட்டுக்காரம்மா:—போன தடவை கொடுத்தது நீதானே?
நெய்க்காரன்:— ஆமாங்க...
வீட்டுக்காரம்மா:— அப்படின்ன வேண்டாம்.

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409

Telegrams: "TEXTOOLCO"

வந்தானே, மாணிக்கம்!

~ ராஜன் ~

[நாட்டுப் புறத்திலிருந்து வந்திருந்த லட்சாதிபதி மகாராசன் மைந்தன் மாணிக்கம் பட்டணத்தில் கடற்கரையில் உட்கார்ந்திருக்கிருன். அங்கே வந்து சந்திப்பதாகச் சொன்ன அவன் நண்பன் கிட்டுவிற்காகக் காத்திருக்கிருன். கிட்டுவருகிருன்.]

கிட்டு : அடடே! நீ இங்கேயா உட்கார்ந்திருக்கிருய்! நான் கடற் கரையை சல்லடை போட்டுச் சலித்து விட்டேன்.

மாணிக்கம் : அதுதானே பட்டணத்து வழக்கம்! இல்லாத இடத்தில் ஒன்றைத் தேடுவது....

கிட் : பலே. பலே, ஒரு வாரத்திற்குள் பட்டணத்தை அறிந்து கொண்டு விட்டாயே! ஆனல் நான் மட்டும் விதி விலக்கு.

மாணி : ஓஹோ, பத்திரிகை கிருபர் அல்லவா? விதி விலக்கு எங்குமே உண்டு. இதோ, நிலக்கடலை, சாப்பிடு..

கிட்: மாணிக்கம், நீ ஒரு லட்சாதிபதியின் மகனு? நிலக்கடலையாம், நிலக்கடலை! ஏதாவது முந்திரிப் பருப்பு, சீமை இலந்தைப்பழம் வாங்கி வர வேண்டாமோ ?

மாணி : அதற்கெல்லாம் பணம் எங்கே கொண்டுவந்திருக்கிறேன் ?

கிட் : சுத்தச் சுக்குச் செட்டியாய் இருக்கிருயே ! ஊருக்குத் திரும்பிப்போக, 'ரிடர்ன்' டிக்கட்டாவது எடுத்துக் கொண்டு வந்திருக்கிருயா? பணத்தை மூட்டை கட்டி கிராமத்திலே ஒரு மரத் தடியிலே புதைத்து வையுங்களேன் !

மாணி : இங்கே கொண்டு வந்து கடலில் கரைக்கச் சொல்லுகிருயா ?

கிட்: நீ கடலைக் காய்ச்சி உப்பாக்கி ஊருக்குக் கொண்டு போகாமலிருந்தால், அதுவே போதும். பெரிய ஆளப்பா, நீ.

[கிட்டுவின் சிநேகிதன் ஓவியன் பூபதி வருகிருன்.]

ஹலோ, பூபதி. உட்கார், உட்கார். மாணிக்கம், இவன்தான் ஓவியன் பூபதி...

மாணி: வணக்கம்.

பூபதி: வணக்கம். நீங்கள் தான் லட்சாதிபதி மகாராசனின் மைந்தன் மாணிக்கமோ?

மாணி : ஆமாம்.

கிட் : மாணிக்கம், இவன் பெரிய ஓவியன். "கண்ராவிகலா மண்டலி' காட்சி ஜோடனைகள் முழுவதும் இவனுடைய கை வேலைதான். நாடகத்தைப் பார்க்க வென்று ஐந்து பேர் வந்தால், காட்சி ஜோடனைகளைப் பார்க்கப் பத்துப் பேர் வருவார்கள்...

பூப : இன்னும் எத்தனையோ கற்பனைக் களஞ்சியங்கள் என் மனத்தில் இருக்கின்றன. ஒரு சந்தர்ப்பம் மட்டும் வாய்த்தால்...

வந்தான் மாணிக்கம். வரவேற்ருர்கள்; பணப்பை காலி என்றதும், பாராமுகம் காட்டினுர்கள். ஏன் ?

கிட் : என்ன அப்படிச் சொல்லி விட்டாய், பூபதி ? சந்தர்ப்பத்தை சிருஷ்டிக்கத் தானே மாணிக்கம் வந்திருக்கிறுன் ..

[நாடகாசிரியன் சாரங்கனும், நடிகை மஞ்சுளாவும் வருகிறுர்கள். கிட்டு அவர்களைப் பார்த்து]

எங்கே கிளம்பினீர்கள் ? ஏதாவது கடற்கரைக் காட்சி ஒத்திகையோ ?

சாரங்கன்: இல்லை. நாடகம் அடுத்த வாரந்தானே இருக்கிறது.. உட்காரலாமா, கிட்டு ?

கிட் : பேஷாய் உட்கார். இந்தக் கடற்கரை இன்னும் என் கை வசம் வரவில்லை... மிஸ் மஞ்சுளா உட்காருங்கள்.

சார : புதிதாக ஒரு திட்டம் நினைத்திருக்கிறேன்....

கிட் : திட்டத்திற்குத் தானு குறைச்சல் ! என்ன திட்டம் ? திட்டவட்டமாகச் சொல்லு..

பூப : வட்டமாகவே யிருக்கட்டும். அப்படி யிருந்தால் தான் சுற்றிச் சுற்றி வரலாம். நேர் கோடாக இருந்தால் முடிந்துவிடும்.

சார : அமெச்சூர் நாடக சபாவைக் கலைத்து விட்டு, தொழில் முறையில் ஒன்று துவக்கலாமென்று யோசனை. கொஞ்சம் முதலீடு மட்டும் இருந்தால்...?

கிட் : (மாணிக்கத்தைச் சுட்டிக் காட்டி) இது யாரென்று நினைத்தாய் ? கலியுகக் காமதேனு ! மகாராசன் மகன் மாணிக்கம்.

மஞ்சுளா : இவர்தானு மாணிக்கம் ? நமஸ்தே...கிட்டு நேற்று உங்களைப் பற்றிக் கூறினுர். நுண்கலைகளில் இந்த வயதில் இவ்வளவு ஈடுபாடு யாருக்குத் தான் வரும் ?

மாணி : எனக்குக் கலைகளில்....

கிட் : நீ சும்மாயிரு மாணிக்கம். சாரங்கா, உன் திட்டத்தைச் சொல்லு.

சார : தொழில் முறையில் ஒரு நாடகக் கம்பனியை ஆரம்பித்து ஊர் ஊராக சென்னை ராஜ்யம் முழுவதும் நாடகங்கள் ஆட வேண்டும். அப்போதுதான் தூங்கி வழிகிற மக்களைத் தட்டி எழுப்பமுடியும்.

பூப : உன்னுடைய அரங்கேருத நாடகங்களுக்கும் ஒரு விமோசனம் ஏற்படும்.

சார : என்ன, அப்படிச் சொல்லி விட்டாய் ? என் நாடகங்களுக்கு என்ன குறைச்சல் ? நன்ருக விளம்பரம் மட்டும் செய்து விட்டால் , பெட்டியை உடைத்துக் கொண்டு வசூல் வெள்ளம்போல் வராதா ?

மஞ் : பிறகு, வெள்ளத்தை நிறுத்த ஒரு முனிபுங்கவரைத் தான் அழைக்க வேண்டும் !

பூப : நாடகம் எவ்வளவு மோசமாக யிருந்தாலும் என்னுடைய காட்சி ஜோடனைகளை வைத்து சரிக்கட்டி விடலாம். உண்மையில் என் கைத்திறனைப் பார்த்து அநுபவிக்க வேண்டுமென்ருல், நாடகம் பாடாவதியாகத் தான் இருக்கவேண்டும் !

சார: பூபதி ! உன் ஹாஸ்யம் எனக்குத் தெரியாதா ? இப்போதுதானு அதை அவிழ்த்து விடவேண்டும் ?

கிட் : விளம்பரத்திற்கு நான் இருக்கிறேன். ஒவ்வொரு விளம்பரமும் அப்படியே ஜனங்களைக் கையைப் பிடித்துக் கொட்டகைக்குள் தள்ளும். இதோ ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள். தலைவலி, ஜலதோஷம், வாய்வு, ஜுரத்திலிருந்து அபாயமின்றியும், துரிதமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் அளிப்பது எங்கள் நாடகம் !'..எப்படி யிருக்கிறது ?

மஞ் : ஏதோ, தலைவலி மாத்தி

உண்மையில் உறுதியாக,

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது

இணைக்க சுலபம்

பார்வைக்கு திருப்தி கொடுக்கும்

சிக்கனமானது

ஜலம் உட்புகாது!

தீயை தாங்கக் கூடியது

"EVEREST"

ASBESTOS CEMENT

TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு & ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

ரையின் விளம்பரம் போல இருக்கிறதே?

சார: என்னுடைய நாடகங்களே அப்படித்தானே! சமூக ஊழல்களுக்கு ஏற்ற கைகண்ட மாத்திரைகள்!

பூப: மாத்திரைகளைத் தின்று விட்டு அந்தப் பாழாப் போன ஊழல்கள் பருமனாகிக் கொண்டே வந்தால்...?

கிட்: அதற்குத் தான் நம் மஞ்சுளாவின் நடிப்பு இருக்கிறதே! ஒரே வினாடியில் அது உயிர் விட்டு விடும்!

மஞ்: நீங்கள் கேலி செய்வதாகயிருந்தால் நான் போகிறேன்.

[எழுந்திருக்கிறாள்]

பூப: இதில் என்ன கேலி இருக்கிறது? ஊழல்கள் செத்துப் போனால் நல்லது தானே!

கிட்: ஊழல்கள் போய்விட்டால் ஜனங்கள் நாடகம் பார்க்க வர மாட்டார்களே! முதலில் நாடகம் எழுத சாரங்கனுக்கு ஊழல்கள் கிடைக்காமல் போய் விடுமே!

சார: மஞ்சுளா, நீங்கள் உட்காருங்கள். மாணிக்கம், இதோ பாருங்கள். முதலில் ஒரு பத்தாயிரம் இருந்தால் போதும். ஒரே வருஷத்தில் அதில் ஒரு பூஜ்யத்தைச் சேர்த்து விடலாம்.. அதாவது ஒரு லட்சமாகிவிடும்.

பூப: ஒரு பூஜ்யத்தை அழித்து விடவும் செய்யலாம் அப்போது...

கிட்: அப்போது உன்னுடைய சின்களை (யெல்லாம் கிழித்து முக்காடு போட்டுக் கொள்ளலாம்..

மஞ்: நாடகம், நாடகம் என்று இன்னும் ஏன் நேரத்தைப் போக்குகிறீர்கள்? ஒரு சினிமாப் படம் எடுத்தால் என்ன?

சார: அதுவும் சரிதான்! ஐம்பதினாயிரம் போதும். என் கைவசம் ஏற்கனவே நாலைந்து கதைகள் இருக்கின்றன. ஆர்ட் டைரக்டர் பூபதி. விளம்பரம் கிட்டு.. நானும் மஞ்சுளாவும் கதா நாயகன், நாயகி, மாணிக்கம் புரொடியூசர்!

மாணி: எனக்குக் கலைகளில்...

கிட்: நீ சும்மாயிரு மாணிக்கம். சினிமாப் படம் என்றால் லேசா? நான் விளம்பரத்திற்கு இப்போதே திட்டம் போட்டுவிட்

டேன். தரத்திலும், சுவையிலும் ஈடற்றது!

மஞ்: ஏதோ சாக்லட் விளம்பரம் மாதிரி இருக்கிறதே!

கிட்: தாயே, மஞ்சுளா! என் சிந்தனையைக் கலைக்காதீர்கள்..

பூப: என்னிடம் ஒரு அருமையான சமூகக் கதை இருக்கிறது. 'சட்டி பிடித்தவள் சண்டாளி' என்று பெயர். அதில் ஒரு கனவுக் காட்சி வருகிறது.... 'வெண்ணிலவு பொங்கி வருகிறது-தடாகத்திலிருந்து தாமரை வெளியேறி மலர்கிறது. அதிலிருந்து...

கிட்: தாமரையா, அல்லியா?

பூப: ஏதாவது ஒன்று! அதிலிருந்து மஞ்சுளா, இல்லை... இல்லை... கதாநாயகி வெளியே வருகிறாள்.

மஞ்: அப்படியானால் அந்தப் படத்தில் நான் கதாநாயகி இல்லையா? நான் போய்வருகிறேன்.

[எழுந்திருக்கிறாள்]

சார: நீங்கள் இருங்கள் மஞ்சுளா.. பூபதியின் கற்பனைதானே! படம் எடுக்கும்போது நான் மாற்றிக் கொள்கிறேன்!

ப: கதாநாயகியின் கையிலிருந்து தாமரை மொட்டுகள் வெளியாகி, ஆகாயத்தில் மிதக்கின்றன. மொட்டுகளிலிருந்து வெள்ளிக் கலசங்கள் பூர்ண கும்பத்துடன் வெளியாகி, அந்தப் பூர்ண கும்பக் கலசங்களிலிருந்து கந்தர்வர்கள் வெளியாகி ..

சார: ஆஹா, ஆஹா, பிரமாதம்! இதுவரை இதுபோன்று வெளியேற்றுக் கனவு எந்தப் படத்திலும் வெளியானதில்லை!

கிட்: ஆமாம்.. அந்தக் கந்தர்வர்கள் கையிலிருந்து ஒவ்வொரு சம்மட்டி வெளியாகி, பூபதியின் மண்டைக்குள்ளிருக்கிற களிமண்ணை வெளியாக்குகிறார்கள்!

மஞ்: (கலீரென்று நகைத்து) அப்படித்தான் வேணும்! என்னைக் கதாநாயகியாக கற்பனை செய்யாதவருக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! சமூகக் கதைகளை விட்டுத் தள்ளுங்கள், சாரங்கன்..

சார: சமூகக் கதை வேண்டாமென்றால், சரித்திரக் கதையை எடுத்துக் கொள்வோம். இரண்டு சரித்திரக் கதைகள் என் கைவசம் இருக்கின்றன. தொல்காப்பியத்தற்கு முற்பட்ட காலம்! அகத்தியரும் தொல்காப்பியரும் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி...

பூப: இவர்கள் சரித்திர புருஷர்களா, புராண புருஷர்களா?

சார: இதிலென்ன சந்தேகம் வந்து விட்டது?

மஞ்: (சிரித்து) அவர்கள் கையிலும் இரண்டு தாமரை மொட்டுகள் கொடுக்க முடியாதே என்று எண்ணுகிறார் ஓவியர்!

கிட்: ஆமாம்! இருவர் கையிலிருந்தும் இரண்டு ஏடுகள் அகத்தியமும், தொல்காப்பியமும் வெளி வருகின்றன. அந்த ஏடுகளிலிருந்து இரண்டு எழுத்தாணிகள் வெளிக் கிளம்பி...

[பூபதி கிட்டுவை விறைத்துப் பார்க்கிறான்]

சார: சரி. முதலில் பணத்தைப் புரட்டுவோம். பிறகு கற்பனைச் சிறகடித்துப் பறந்து வராதா? நாடகமா, சினிமாவா? மாணிக்கம்!

மாணி: எனக்குக் கலைகளில்...

சார: அநுபவந்தானே! நாங்கள் உண்டாக்கிக் கொடுக்கிறோம். பத்தாயிரமா? ஐம்பதாயிரமா?

மாணி: என்னிடம் பணம் கிடையாது.. இப்போது

பூப : பரவாயில்லை... ஊரில் போய் தயார் செய்து கொண்டு வாருங்கள்..

சார : நானும் வருகிறேன்.

மஞ் : நானும் கூடவே வருகிறேன்.. உங்கள் தகபபனுரிடம் சொல்லி...

மாணி : நான்தான் பணம் கிடையாது என்கிறேனே.

கிட் : அப்படியானுல் சாரங்கனுடைய, "தயாபரா, அருள் புரிவாய்!" என்ற அடுத்த நாடகத்திற்கு டிக்கட்டாவது வாங்கிக்கொள்.

சார : ஆமாம். இதோ டிக்கட்டுகள். பத்து ரூபாய், ஐந்து ரூபாய். பத்து ரூபாயில் மூன்று கொடுக்கட்டுமா ?

மாணி : என்னிடந்தான் பணம் இல்லையென்கிறேனே !

கிட் : ஏண்டா, பஞ்சப் பாட்டு பாடுகிருய் ?

மாணி : உண்மைதான், கிட்டு. அவர் சொல்படி நான் கேட்கவில்லை யென்று, என் தந்தை எல்லா சொத்தையும் தர்மத்துக்கு எழுதி வைத்து விட்டார்..

எல்லாரும் : ஆ ! அப்படியா ?

[விரைவாக எழுந்து எல்லாரும் மாணிக்கத்தைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் செல்லுகிருர்கள். அவர்களை ஏமாற்றி விட்டதை நினைத்து மாணிக்கம் சிரித்துக் கொண்டு வேறு பக்கம் செல்லுகிருன்.]

பாண்டியன் லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு ஹோட்டல்

8, வெங்கலக்கடை தெரு,
மதுரை.

N. B: கோழிப் பிரியாணி,
கோழிச் சாப்ஸ்
புருச் சாப்ஸ்
தினசரி கிடைக்கும்.

திங்கள், சனிக்கிழமைகளில்
வான்கோழிப் பிரியாணி,
வான் கோழிச் சாப்ஸ்
கிடைக்கும்

Prop- P.K.S.S.

சிங்காரமான 'லித்தோ' அச்சு

வேலைகளுக்குச் சிறந்த இடம்!

செந்தமிழ் நாட்டின் பெருமை !

தி ரத்தின விலாஸ் லித்தோ பிரஸ்

சிவகாசி—தென் இந்தியா

Tel: PREMIER Phone No. 66

THE PREMIER LITHO WORKS

Post Box No. 37

P. K. S. STREET, SIVAKASI (S. INDIA)

Creative Lithographers and offset Printers,

(Premier House for Attractive Calenders, Posters, Invitations for all commodities)

We undertake the printing of lables for matches, Beedies, Fireworks etc., soap wrappers waxed and ordinary.

Speciality : **PHOTO OFFEST PRINTING.**

பிரீமியர் லித்தோ ஒர்க்ஸ்,

தபால் பெட்டி 37, சிவகாசி

அழகான கலர் காலண்டர்கள், போஸ்டர்கள், அழைப்பிதழ்கள், சோப் ராப்பர்கள், சோப் லேபில்கள், தீப்பெட்டி, பீடி, வாண தொழிற்சாலைகளுக்கான லேபிள்கள் பிரிண்ட் செய்கிறோம்.

கோயமுத்தூர்

தனலட்சுமி சேலைகள்

DHANALAKSHMI

100s SAREES

-AJANTA-

DHANALAKSHMI 100s SAREES

Mfrs: Dhanalakshmi Handloom Weavers' Co-op. P. & S. Society Ltd., No. K. 1554. Coimbatore.

உத்திரவாத முள்ளவை

Sole Agents for Greater Bombay:

M/S M. KHANDWALA & CO.,

KALBADEVI ROAD, BOMBAY-2.

உழைப்பிலும், தரத்திலும் சிறந்தவை.

தலைவர்

G. மருதாசலம்

விந்தை மனிதன்

எம். கே. நாதன்

நான் கல்லூரியிலே படித்து வந்த காலமது. அப்போதெல்லாம் எனக்கு நிரம்ப ரயில் பிரயாணம் செய்வதற்கான பொழுதும், சந்தர்ப்பங்களும் கிடைத்து வந்தது. எனது கல்லூரி விடுமுறை காலங்களிலெல்லாம் நான் தவருமல் ஒவ்வொரு ஊர்களுக்கும் விஜயம் செய்து திரும்பி வருவது வழக்கம். எனது அந்த வாலிப நாட்களிலேயே பல வகையான மனிதர்களைச் சந்தித்து அவர்களோடு பழகியதின் காரணமாக ஏதோ எனக்கோர் விதமான தனி அறிவு கிடைத்தது என்றே நினைத்துக் கொண்டேன். எனது வாலிப காலமல்லவா அது ! உடலில் ஒருவிதமான தெம்பும் உள்ளத்தில் ஒருவிதமான துடிப்பும் என்னிடம் குடி கொண்டிருந்தது. ஆமாம் ; மனிதன் வாழ்விலே திரும்பப் பெற முடியாத ஒவ்வொரு மனித இனமும் ஒரே ஒரு முறைதான் அந்த பொற் பாதை வழியே நடை போட முடியக்கூடிய காலமல்லவா அந்த வாலிபக் காலம். வனப்பும் வளமும் நிறைந்த என்னைக் கண்டால் ஒரு நிமிடம் திரும்பிப் பாராதவர்கள் இருக்க மாட்டார்கள். இதென்ன ! என் அழகை நானே புகழ்ந்து கொள்கிறேனே என நினைத்து விடாதீர்கள் ! எந்த மனித உள்ளமும் தன்னை கண்ணுடியில் பார்க்கும் போது, தான் அழகில் சிறந்ததாக எண்ணிக் கொள்வது போல எனக்கு நான் அழகாக இருந்தேன். அவ்வளவுதான் !

ஏதோ விடுமுறை தவருமல் ரயில் பிரயாணம் செய்வதால் என் உறவினர் யாரோ ரயில்வே இலாகாவில் பணி புரிகிருர்கள். இலவசமாக டிக்கட் கிடைத்திருக்குமென தப்புக் கணக்கு போட்டு விடாதீர்கள் ! அப்படியென்ருல் பெரிய பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும் எண்ணி விடாதீர்கள். என் தந்தையார் ஒரு சின்ன வியாபாரி திருவனந்தபுரத்தில். அவர் மக்கட் செல்வத்தை நிரம்பப் பெற்றிருந்தார். எல்லாம் ஆண் பிள்ளைகள் தான். நான் தான் கடைசி மகன். என் மூத்தவர்கள் மூவர். அந்த மூவரையும் என் தந்தை படிக்க வைத்து வேலைகளையும் வாங்கிக் கொடுத்து விட்டார். என் மூத்த அண்ணு போலீஸ் ஏட்டு—இரண்டாவது அண்ணு கோர்ட்டில் குமாஸ்தா—மூன்ருவது அண்ணு ஒரு கம்பெனியில் டைப்பிஸ்ட். அந்தந்த வயதில் அவரவர்களுக்கு திருமணமும் செய்து வைத்து, அவரவர்களுக்கான தனிக் குடித்தன வசதியையும் செய்து கொடுத்திருந்தார்.

இவர்களெல்லாம் ஒவ்வொரு ஊரிலாக இருந்து வந்தனர். அவர்கள் வீட்டு நல்லது கெட்டதுகளுக்கெல்லாம் என் வீட்டார் என்னைத் தான் அனுப்பி வைப்பார். காரணம் என் தந்தையாருக்கு வியாபாரத்தை விட்டு எங்கும் அசைய பொழுதே

மனிதப் பிறவிகளில் அதிசயப் பிறவிகளும் உண்டு. வேடிக்கையான விநோதப் பேர்வழிகளும் உண்டு. ஆனல் கள்ளமிலா உள்ளம் படைத்த இந்த விந்தை மனிதர்களை நீங்கள் சந்தித்ததுண்டா?



வாய்க்காது. அப்படி என் கல்லூரி விடுமுறை யல்லாத நேரங்களில் கூட எனக்கு வெளியூர் போக வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்திருக்கின்றன. என் அண்ணிமார் வீட்டு நன்மை திமைகளுக்கும் என் குடும்ப பிரதிநிதியாக நான்தான் சென்று வருவேன்.

இது காரணமாக எல்லா உறவினர்களும் என்னைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தனர். எனக்கு கல்யாணத்திற்கு சில உறவினர்கள் தூண்டி அவர்கள் மருமகனுக்கி விட கொள்ளை ஆசை கொண்டிருந்தனர். என் தந்தையாருக்கு கடைசி மகனுன என்னை நன்கு எம். ஏ. வரை படிப்பித்து நல்ல வேலையில் அமர்த்தி விட வேண்டுமென்பது அபிலாஷை. என் தாய்க்கோ படிப்பைப் பற்றியெல்லாம் கூடச்சிந்தனையில்லை; தனக்கு வாய்க்கப் பெற்ற மருமகள் பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணுக வாய்க்க வேண்டுமென்பதுதான் ஒரே ஆசை.

எனக்கென்ன ஆசை என்று மட்டும் கேட்டு விடாதீர்கள்? வழக்கமாக ஏதாவது ஒன்றை காதல் செய்து அதைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் செய்யும் கல்லூரி ஸ்டைல் மட்டும் என்னிடம் இல்லையென்று சொல்லி விடுகிறேன்.

எனக்கு வாழ்க்கையிலேயே ஒரு ஆச்சரியம் இதுதான். என்னமோ காதல்; கன்னி என்றெல்லாம் பேசிக் கொள்கிருர்கள். அதற்காக அம்பிகாபதி-காதல்; லைலா-மஜ்னு காதல்; ரோமியோ-ஜூலியட் காதல் என்றெல்லாம் உள் நாட்டு வெளி நாட்டுக் காதலர்களையெல்லாம் சுட்டிக் காட்டி ஆ-உஹும்... என்கிருர்களே, என்னளவில் இவைகளுக்கு இடமே இல்லை. இதுவரை எந்தப் பெண்ணும் என்னைக் காதலித்ததாகவோ, ஏன் திரும்பிப் பார்த்து புன்னகை புரிந்ததாகவோ கூட இல்லை. ஒரு வேளை மறந்திருப்பார்கள், என்னிடம்காதல் செய்ய உரிமைப்பட்டவர்கள்:

ஒரு வழிக்கு அதுவும் நல்லது தான். பிறகு எங்கள் காதலுக்கு ஒரு வில்லனை சிருஷ்டிக்க அந்த பிரம்ம தேவனுக்கு வேலை ஏற்பட்டு விடும். நெருக்கடியான அவர் வேலைகளுக்கிடையே என் காரணமாக அவருக்கேன் வீண் தொல்லைகள்? சில சமயம் எங்கள் காதல் நிறைவேருமல் என்னை காதலித்த பாவத்துக்கு உள்ளான பாவை அந்த யமதர்ம ராஜனுக்கு ஏன் வேலை கொடுக்க வேண்டும்; இல்லை, அப்படி நேருமாயின் எத்தனை யெத்தனை பேருக்குதான்

தொல்லை. என்னமோ ஒரு சிலருக்கு அது லாபமிருக்கலாம். அது தான் மறு நாள் கொட்டை எழுத்துக்களில் செய்தியைத் திட்டி பத்திரிகையின் விற்பனையை அதிகப் படுத்திக்கொள்ள எண்ணும் பிரகஸ்பதிகளுக்குத்தான், வேறு யாருக்கு? என்னைப் பற்றி 'அழகன்' என முதலில் சொல்லி விட்டு எந்தப் பெண்ணும் என்னைக் காதலிக்கவில்லை என்று சொன்னல் நம்புவீர்களோ? நானறியேன். ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். அவர்களுக்கு மட்டும் நான் ஓர் பயங்கர மனிதனகக் கண்களில் பட்டிருப்பேன் என்றே நினைக்கிறேன். இப்படிப்பட்ட என்னை நான் ஓர் 'விந்தை மனித'னென்றேயெண்ணியிருந்தேன். ஆனல் அந்த சம்பவம் நடந்த பின் என்னைவிட சிறந்த ஒரு விந்தை மனிதனை என் கண்களால் காண முடிந்தது.

அதுதான் அந்தச் சம்பவம். என் மனதையல்ல; எங்கள் குடும்பத்தினர் அனைவர் மனதையும் ஆட்டி வைத்த சம்வம்!

வழக்கம் போல் ஒரு

மானேஜர்:- என்ன மிஸ்டர் கையில்?
குமஸ்தா:- தயவு செய்து இந்த ஒரு காலண்டரையாவது எங்க வீட்லே போட விடுங்க ஸார்!

எனது மூத்த சகோதரன் 'ஏட்டண்ணு' ஆம், நாங்கள் அவரை அப்படித்தான் அழைத்து வந்தோம்'. தனுஷ் கோடியில் வேலையாக இருந்தார். அவர் ஊருக்கு சென்றுவர திட்டமிட்டு புறப்பட்டுச் சென்றேன். பெரிய புண்ணிய ஸ்தலமல்லவா! என் தாய் தந்தையரும் நான் அங்கே சென்று என் விடுமுறையை கழிக்க மனமிசைந்து சந்தோஷமாக வழியனுப்பினர். அவ்வூரைப் பற்றி பல விதமான கதைகளை கேட்டிருக்கிறேன். இராமாயணத்தில் 'இராவணன் மீது ராமன் போர் தொடுத்தபோது தனது தனுசை காட்டிய கோடி என்றும் படித்திருக்கிறேன். வானரங்களெல்லாம் சேர்ந்து ராமேஸ்வரத்தினருகே இலங்கைக்கு கல்பாலம் அமைத்த கதையும் எனக்கு நினைவுக்கு வந்தது.

அத்தகைய சரித்திரப் புகழ் பெற்ற ஊருக்கு இந்தத் தடவை போய்வர இருக்கிறோம் என்று நினைக்கையில்' என் மனதில் சொல்ல முடியாத ஆனந்தம் பொங்கி வழிந்தது; என் நடையிலேயே ஓர் விதமான தெம்பு தாண்டவமாடியது.

அந்த ரயில் பிரயாணம் எனக்கு தூக்கத்தையே கொடுக்கவில்லை. பிரயாணப் பாதையிலேயே திருப்பம் கொண்டதல்லவா! புது இடங்களை பார்வையிட்டுக் கொண்டே சென்றேன். ரயில் வேகத்தையும் கடந்து என் மனவேகம் சென்று கொண்டிருந்தது. ரயில் வளைந்தும் நெளிந்தும் காட்டாறுகளையும் கானகத்தையும் வளமான சோலைகளையும் வெட்ட வெளிகளையும் கடந்து சென்று கொண்டிருந்தது. இரவும் பகலுமாக பிரயாணம் செய்த களைப்பே தட்டவில்லை.

ரயில் பாம்பன் அருகே வந்தது. அங்கேதான் பெரிய பாலத்தைக் கடந்தது. அப்பப்பா! எத்தனை பெரிய பாலம்! என்ன பயங்கரமான கொந்தளிப்பு. அந்தப் பாலத்தின் அடியிலே காணும் கடலுக்கு இது வரை ஆறுகளின் மீது ரயில் சென்றதைத் தான் கண்டிருந்தேன். இப்போது தான் முதல் தடவையாக கடலின் மீது பாலத்தில் ரயில் கடப்பதைக் கண்டேன். இத்தகைய பிரமாண்டமான பாலங்களை இணைத்தவர்களுக்கு என் மனதுள்ளேயே நன்றி செலுத்திக் கொண்டேன்! என்னல் அவர்களுக்கு வேறென்ன பிரமாதம்? 'அந்தக் காலத்திலே ராமனுக்காக குரங்குகள் கூட பாலங் கட்டி முடித்தது பாருங்கோ...' என ஓர் வேதாந்தி முணு முணுத்தது என் காதில் அப்போது விழாமல் போகவில்லை.

"என்ன உலகம்! மேல்நாட்டுக்காரன் இன்றெல்லாம் செவ்வாய் கிரகத்துக்கு எப்படிச் செல்வது என சிந்தித்துக்கொண்டிருக்கிருன். நம் மக்கள் செவ்வாய் தோஷம் பார்ப்பதிலேயே கண்ணும் கருத்து

மாக இருக்கிறார்கள் என நினைத்தவனாய் அந்த வேதாந்தியைப் பார்த்து ஓர் முறை, புன்னகை புரிந்தேன்.

அவர், நான் அவர் கூற்றுக்கு சப்புக் கொட்டிக் கொண்டதாக எண்ணி இருப்பார்! அந்த ரயிலிலேதான் எத்தனை பக்தர்கள். ராமேஸவரம் வரை சொல்லமுடியாத கூட்டம். அத்தனை பக்தர்களும் ஒரே பெட்டியில் ஏறிவிட்டதாக எண்ணி ஸ்டேஷனில் வண்டி நிற்கும் வேளையில் மற்றப் பெட்டிகளைப் போய்ப் பார்த்தேன். எல்லாம் ஒன்றுக் கொன்று அதிகமாகவே காணப்பட்டது.

எப்படியோ பாம்பன் ஸ்டேஷனுக்கு வண்டி வந்ததும் அத்தனை பக்தர்களும் இறங்கிக் கொண்டனர். நானும் இங்குதான் இறங்கி வண்டிமாற வேண்டுமோ என நினைத்தேன். ஆனால் என் சந்தேகத்தை என் சக பிரயாணி தீர்த்து வைத்தார். அவரும் தனுஷ்கோடி செல்பவர்தான். ராமேஸ்வரம் கோயிலுக்குச் செல்பவர்கள் தான் பாம்பனில் இறங்கி கிளை லைன் வழியாகச் செல்லவேண்டுமென அவர் சொன்னார்

ரயில் வண்டி மீண்டும் புறப்பட்டது. பின்னர் ரயில் வண்டி கடந்த இடம் ஒரே மணல் பரப்புத்தான், கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வெண்மணல் பரப்பு. அதன் பின்னால் என்கண்ணிலே பட்டது நீல நிறக்கடல். அதற்கு விதானம்போல் அமைந்திருந்தது நீலவானம். இயற்கை எழில் வழியை ரசித்துக் கொண்டேயிருந்தேன். ஊரும் வந்துவிட்டது. ஸ்டேஷனில் என்னை வரவேற்க என் அண்ணாவும் வந்திருந்தார். என் வருகையை நான் முன்னதாகவே தெரிவித்திருந்தேன்.

என் அண்ணாவின் வீடு ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள லைன் வீடுதான். அங்கு மற்ற ஊர்களைப் போல் ரஸ்தாவோ; வாகனங்களோ காணமுடியாது; ஏனென்றால் ஒரே மணலல்லவா! மணல் வெளியில் காலில் செருப்பில்லாது நடக்கவே முடியாது. எத்தனையோ பேர் இந்த ரகஸியத்தை எண்ணிக்கூடப் பாராமல் செருப்பின்றி வந்து மணலில் 'தகிடுதத்தம்' போடுவதைக் கதைகளாகக் கேட்டேன். நான் நேரில் கூட பார்த்தேன். இதற்காக அவ்வூர் பஞ்சாயத்தார் தண்ணீர் கொட்டி ஒரு நடை பாதையைச் சிருஷ்டித்திருந்தனர். வீடுகள் எல்லாம் ஒரே மூங்கில் பாய்களால் கட்டப்பட்டதற்காலிகவீடுகள்தான். சுருக்கமாகச் சொன்னால் ஒரு பாலைவனம் போல்தானிருந்தது. அங்கு ஒரே ஜனக்கூட்டம்.

x x x

விடிந்தால் அமாவாசை. பொழுது புலருமுன்னரே சேதுக்கரை சென்று ஸ்நானம் செய்து திரும்ப வேண்டுமென நாங்கள் திட்டம் போட்டிருந்தோம்.

என் அண்ணா பெரிய தைரியசாலிதான்; அப்படியிருந்தும் அவர் வெளியே போகும் போதெல்லாம் என் அண்ணிக்குக்குரல் கொடுத்து "எவனாவது பிள்ளை திருடர்கள் கும்பலில் சுற்றிக் கொண்டிருக்கப் போகிறார்கள், குழந்தை 'மாலா'வை வெளியே போகவிடாது ஜாக்கிரதையாகக் கவனித்துக்கோ" என்று எச்சரித்துச் சென்றதைக் கேட்டதும் எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

'மாலா' என் அண்ணனின் ஒரே மகள் ஐந்து வயதுகூட நிரம்பியிராத பருவம்! எவ்வளவோ நாட்கள் பிள்ளையில்லாமலிருந்து பின் பெற்றெடுத்த கண்மணி! ஆகவே அதை மிகுந்த செல்லமுடன் வளர்த்து வந்தனர். நேரத்துக்கு நேரம் விதவிதமான உடையணிந்து என் முன்னே விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எவ்வளவு மனோரம்யமாக இருக்கும்! அவள் நல்ல துடுக்

கான பெண்.

வெளியே சென்றிருந்த அண்ணு வந்தார். எங்கள் இரவுச்சாப்பாட்டை யெல்லாம் முடித்துக் கொண்டு நாங்கள் நித்திரை செய்ய ஆயத்த மானேம். அப்போது எங்கள் அண்ணு எத்தனையோ விதமான பிள்ளைத் திருடர்களைப் பற்றி என் அண்ணியிடம் சொல்லிக் கொண் டிருந்தது என் காதுகளில் விழுந் தது.

காலதேவனின் அரவணைப்பில் நாங்கள் தூங்கி விட்டோம்; அவ னும் தன் வேலையிலே கண்ணும் கருத்துமாக முனைந்திருந்தான். சொல்லி வைத்தாற்போல் அந்த ஜீவன் இல்லா அலாரம் சரியாக ஐந்து மணிக்கு அலறியது. நாங்கள் அவசர அவசரமாக எழுந்து கடல் ஸ்நானத்துக்குப் புறப்பட்டோம்.

அப்போது 'மாலா' ஜன்னல் வழியாக வெளியே ஆட்கள் செல்லும் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தாள். "சித்தப்பா இதைப்பாரேன்" என மழலை வாய் மொழிய நானும் அவளருகே சென்று அந்தக் காட்சியைக் கண் டேன். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் ஜனங்கள், ஒருவர்பின் ஒருவராகச் சென்று கொண்டிருந் தார்கள்.

சிறிது நேரத்தில் நாங்களும் அந்தக் கும்பலில் சேர்ந்து நடை போட்டோம். ஒவ்வொரு மனித இனமும் ஒவ்வொன்றைத் தங்கள் மனதில் வேண்டிக் கொண்டுதான் சென்றிருக்கும். அவர்கள் ஏதேதோ பாஷைகளில் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். நான் இயற் கையைரசித்தபடி மெய்மறந்துசென் றேன் என் கைப்பிடியில்தான் 'மாலா' நடந்து வந்தாள். இடையிடையே என் அண்ணு 'தம்பி குழந்தையை கவனமாகப் பாத்துக்க' என எச் சரித்து வந்தார். எதிர் திசை நோக்கி பறவைக் கூட்டங்கள் உல்லாசமாகப் பறந்து கொண்டிருந்தன. அவை களும் தீர்த்தமாடிவிட்டுச் செல்வ தாக என் மனம் முடிவு கட்டிக் கொண்டது.

தீர்த்தமாடித் திரும்புவோரிடம் பிச்சை பெற்று இன்ருவது தன் முழுவயிறை நிரப்பிக்கொள்ளலாம் என்ற ஆசையில் எல்லோருக்கும் முன்ருக ஸ்நானத்தை முடித்துப் பண்டாரங்களும், பரதேசிகளும் கூன் குருடு முதலிய அங்கயீனர் களும் வரிசையாக வழிநெடுகக் காத்து இருந்தனர். கடலில் கரை யோரமாக தலைநாள் மீன்பிடிக்கச் சென்ற செம்படவர்க் கூட்டம் கும் பலாகத் திரும்பிக் கொண்டிருந்தது. தாடி, ஜடை முடி தரித்த பயங்கர ரூபம் கொண்ட சந்நியாசிகளைக் கண்டால் "சித்தப்பா இவன் தான் பிள்ளை பிடிக்கிறவன்" என என் மாலா என்னிடம் சொல்லி வந்தாள். இதைக்கேட்ட அவனும் என்னைப் பார்த்தான்; நானும் அவளைப் பார்த்தேன். லேசாகப் பல்லைக் காட்டிக் கொண்டான். அந்தப் பல்லிளிப்பில் எனக்கென் னமோ ஓர் வித சந்தேகம் உரு வெடுத்தது.

சேதுக்கரையும் வந்து விட்டது. நானும் முதலில் குளித்துவிட்டேன். 'மாலா'வை முதலில் குளிக்கச் செய்து என்னிடம் ஒப்படைத்தனர். நான் பொருட்களையும் குழந்தை யையும் கவனித்துக் கொண்டிருந் தேன். அண்ணனும் அண்ணியும் கை கோர்த்து ஒன்ருகக் கடலில் குளித்தனர். சதிபதிகளாகக் குளித் தால் புண்ணியமெனச் சொல்வார் களாமே!

இயற்கையழகையும்; செயற்கை யழகையும் பருகியபடியே 'மாலா'வின் பிடியை விட்டு என் சட்டையை மெதுவாகக் கழற்றி னேன். தலை வழியாகக் கழற்ற வேண்டிய சட்டை கணநேரம் என் கண்களை மறைத்தன. பின் திரும் பிப் பார்த்தேன்.... 'மாலா'வைக் காணேம். எனக்கு பகீரென்றது; உடலெல்லாம் திடீரென ஜில்லிட் டது... என்னபயங்கரம்... 'மாலா'

மாலா' என உரக்கக் கத்தினேன். என் அண்ணனும் அண்ணியும் வந்து விட்டார்கள். அவர்கள் பார்வையை என்னால் சகிக்க முடிய வில்லை. என் அண்ணி 'ஓ' வென கதறி அழுது விட்டாள். என் அண்ணா என்னைத் திட்டியபடி கூட்டத்திலெல்லாம் 'மாலா மாலா' என்னை அழத்துப் பார்த்தார். எந்த விதமான பதிலும் வரவில்லை.

ஏட்டைய்யாவின் குழந்தையைக் காணவில்லை என போலீஸார்களெல்லாம் தேடினர். நான் முதலில் கண்ட அந்தத் தாடி ஜடைமுடி ஆசாமி இருக்கிறரா எனக் கவனித்தேன். அவன் அங்கு இல்லை. என் சந்தேகம் முன் நினைத்தபடி வலுத்து விட்டது. என் கண்கள் பொல பொல வென கண்ணீரைக் கொட்டின. என் உள்ளம் முடிக்கிவிடப் பட்ட கடிகாரத்தைப்போல அடித்துக் கொண்டது. எல்லா இடமும் வலை போட்டுதேடியாயிற்று. நிமிடம் மணியாயிற்று. பலனில்லை. என்ன செய்வதெனப் புரியாமல் நாங்கள் அனைவரும் கண்ணீரும் கம்பலையுமாக வீடு திரும்பினோம். என் அண்ணா போலீஸ் ஸ்டேஷனில் தகவல் கொடுத்துவீடு திரும்பினர்.

வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையிலுமாக இருந்தோம். என் மனம்தான் தாங்க முடியாத வேதனையைக் கொண்டிருந்தது.

அன்று மாலை நேரம்! ஒரு குள்ள மனிதன் எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்தான், என்ன ஆச்சரியம்! அவனோடு என் அண்ணன் மகள் 'மாலா'! காணமல் போன செல்வம் வந்து விட்டாள்.

"ஏன் சாமி! இப்படியா குழந்தையைக் கவனிப்பது! கோதண்ட ராமஸ்வாமி பல்லக்கு வந்தது பாருங்க அது திரும்ப கோவிலுக்கும் திரும்பியது. அந்தப் பல்லக்கு சுத்தம் செய்ய துணிமணிகளை வாங்கிக் கொண்டிருந்தேன். சுகமாக குழந்தை அதனுள் நித்திரை செய்து கொண்டிருந்தது. நான் பார்த்தேன். ஆஹா! இது நம்ம ஏட்டய்யா பிள்ளையல்லவா என எண்ணி அதை அப்படியே உங்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்துவிட்டேன்" எனக் கூறி விட்டு விடை பெறமுயன்றான்.

"அப்பாஅப்பா! சாமி பாக்க போனவள் அப்படியே பல்லக்கில் தூங்கிவிட்டேன். இந்த மாமா என்னை உங்களிடம் கொண்டு விட்டார். நீங்கள் என்னை ஏன் விட்டு வந்து விட்டீர்கள்" என்று 'மாலா' மழலை மொழி கொட்டித் தன் அம்மாவை ஓடோடிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

என் அண்ணியும் நானும் அவனை வெறுங் கையோடு அனுப்ப விரும்ப வில்லை. நல்ல விருந்து போட்டு அவனை நன்கு பராமரித்து அனுப்ப எண்ணியிருந்தோம்! என் அண்ணா மட்டும் மௌனமாகவே இருந்தார். அவனை அவர் ஏற இறங்கப் பார்த்தபடியே இருந்தார். ஆனால் எங்கள் செய்கைகளுக்கு எந்த விதமான மறுப்பும் தெரிவிக்க வில்லை. மாலை காப்பி அருந்தி விட்டு நான் அந்தக் குள்ளனோடு கடற்கரைவரை காற்று வாங்கச் சென்றேன்.

அவனும் நானும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். அவன் இதன் முன் என்னசெய்து கொண்டிருந்தான் எனக்கேட்டேன்-

அவன் சொன்னான்! "மதுரையில் சித்திரை மாதப் பௌர்ணமி மிகவும் முக்கியமானதல்லவா. அதற்கு நானும் சென்றிருந்தேன்! இதேபோன்ற கூட்டம்தான் அங்கும். நான் கூட்டத்தில் இதுபோல் ஒரு குழந்தையைக் காப்பாற்றப் போய் 'பிள்ளைத் திருடன்' எனப் பட்டம் சூட்டப் பட்டு ஒரு ஏட்டய்யா விடம் ஒப்படைக்கப் பட்டேன். அவர் என்னை நையப் புடைத்தார். நான் துடி துடித்தேன். பழி ஓர் இடம் பாவம்ஓர் இடம். பின் என்மீது வழக்குத் தொடரப் பெற்று மூன்று மாதச்சிறைத் தண்டனையில்

வாடினேன். நேற்று முன் தினம் தான் விடுதலையானேன். உடனே இங்கு கோதண்டராமர் கோவிலில் ஓர் கூலிக்காரனைகச் சேர்ந்தேன்.........''

இதைக் கேட்டதும் நான் பச்சாதாபப்பட்டு யார் அந்த ஏட்டு என ஆத்திரமுடன் கேட்டேன் அதற்கு அவன் பதில் சொல்லவில்லை.

நேரம் வெகு நேரமாகியது. நானும் அந்தக் குள்ள மனிதனும் வீடு திரும்பி உணவருந்தினோம். குள்ள மனிதன் வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டான். என் அண்ணாவும் வெளியில் சென்றிருந்தவர் வந்தார்! ஏன் குள்ளனைக் கண்டதும் மௌனமாக எந்தவிதமான நன்றியும் தெரிவிக்காமல் இருந்தீர்கள் எனக் கேட்க வேண்டுமென முடிவு கட்டினேன். கேட்டும் விட்டேன்.

''அது என்கடந்தகாலநினைப்பைக் கிளறுகின்றது. இவனைப் போன்ற ஒருவன் என் வேலையில் குறுக்கிட்டான். நான் அப்போது மதுரையில் வேலைசெய்து வந்தகாலம். சித்திரை பௌர்ணமி; இதுபோல் ஒரு குழந்தையைக் காணவில்லை; இவனைப் போன்ற ஒருவன் அந்தப் பிள்ளையைத் திருடிவிட்டதாக என்னிடம் மக்கள் புகார் செய்யவே நான் அவனைப்பிடித்து கையப் புடைத்து வழக்குத் தொடர்ந்து மூன்று மாதச் சிறைத் தண்டனையும் வாங்கிக் கொடுத்தேன். எனக்கு உள்ளூர வருத்தம் தான்! என்ன செய்ய? வேலையல்லவா! இவன் அவனாக இருக்குமா என்ற சந்தேகத்தில் நான் மௌனமாக இருந்து விட்டேன். ஆனால் இவன் நல்லவனாகப் படுகிறது. அவனாக இருக்க முடியாதென்றே எண்ணுகிறேன்'' என்று சொன்னதும் குள்ளன் அன்று மாலை என்னிடம் சொன்ன கதைக்கும் இதற்கும் தொடர்பிருப்பதாக முடிவுகட்டி நான் குறுக்கிட்டு ''அண்ணா அந்தக் குள்ளமனிதன் உங்கள் 'மாலா'வைக் காப்பாற்றியதும் இதைப் போலவே. முன்பும் அவன் குழந்தையைக் காப்பாற்றப் போய் ஆபத்தில் மாட்டிக் கொண்டான். இந்த உண்மையை அவன் என்னிடம் சொன்னான்'' என்று சொன்னேன். அண்ணா உண்மையறிந்து பெரிதும்வருந்தினர். அந்தக் குள்ள மனிதனிடம் காலில் விழுந்து மன்னிப்புக்கோர எண்ணினர். உடனேயே கதவைத்திறந்து திண்ணையைக் நோக்கி ஓடினர்; அவனைக் காணவில்லை. நாங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு விட்டானோஎன்னவோ. வெளியே போயிருப்பான்.

தீமை செய்த ஒருவனுக்கு நன்மை செய்து காந்தி மகானின் லட்சியத்தை நிலை நாட்டி விட்டான் அந்தக் குள்ள மனிதன்.

அவனை எல்லா இடத்திலும் தேடிவிட்டார் என் அண்ணா. எப்படியாவது அவனைக்கண்டு மன்னிப்புக் கேட்கவேண்டுமென்ற ஒரே ஆசைதான் அவருக்கு!

காணாமல் போன அந்த ''**விந்தை மனிதனை**''க் கண்டால் உடனே நீங்கள் என் அண்ணாவுக்கு தகவல் கொடுக்க மட்டும் மறந்துவிடாதீர்கள்!

மதுரையில் போட்டோ எடுக்கச் சிறந்த இடம்

விக்டோரியா ஸ்டுடியோ

(ஸ்தாபிதம் 1925)

3, அப்பாவு பிள்ளை சந்து,
மீனாட்சி கோயில் தெரு,
மதுரை.

Phone Nos. Madurai 356 Periakulam 22
Kodaikanal 56 Ammayanaickanoor,
(Kodairoad) P.C.O. Extension 1

Avail your immediate opportunity to visit

KODAIKANAL

FAMOUS HEALTH RESORT IN SOUTH INDIA
AT 7000 FEET.

OUR BUSES & LORRIES PLY TO KODAIKANAL

FROM:

MADURAI — PERIAKULAM — DINDIGUL & KODAIKANAL ROAD.

Our buses provide comfortable journey over the distance of fifty miles (20 miles on plains & 30 miles on picturesque ghat section full of Natural Sceneries). The buses are plying at convenient timings, start at the correct time and reach the destination in time.

Note. Tickets are issued direct to the hill station Kodaikanal from all stations in India and Ceylon. Return tickets are issued by the railway during season period at a concession rate for visiting Kodaikanal.

We are plying regular lorry service to other important stations besides our many bus-routes connecting important places in Madurai and Ramnad Districts.

Kodaikanal,
1st Feb. 1958.

S. G. JAYARAJ NADAR,
Managing Director,
Kodaikanal Motor Union (Private) Ltd.

விமர்சனம்:

கலைப்பகுதி

நல்ல இடத்து சம்மந்தம்

ஒரு பொல்லாத கணவனிடம் சிக்கித் தவிக்கும் ஒரு பெண்பாவையின் சிதைந்த வாழ்வை சித்தரிக்கும் குறைந்த காலத்தில் வெளிவந்த ஒரு 'நல்ல' படம் தான் இந்த நல்ல இடத்து சம்மந்தம். கதையின் தலைப்புக்கும் கதைப் போக்கின் தன்மைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் கதை அம்சத்தில் சில நல்ல கருத்துக்களும் இல்லாமலில்லை.

'வருகிறது வருகிறது' என்று தண்டோராப் போடாமல் இரண்டரை மாதகாலத்தில் தயாரான இப்படத்தில் குறைபாடுகள் சற்று அதிகரித்திருந்தாலும் விறுவிறுப்பு குன்றாமல் கதைப் போக்கு அமைந்திருப்பது பாராட்டுதலுக் குரியது தான். கதையமைப்பில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்தி இருந்தால் சம்பவக் குறைவுக்கு இடமேற்பட்டிருக்காது.

கதையின் அமைப்புக்கு - போக்குக்குத் தக்கபடி செட்டான வார்த்தைகளைக் கொண்டு வசனம் எழுதப்பட்டுள்ளது. நடிகவேள் எம். ஆர். ராதா, மூர்த்தி என்ற மூர்க்கத்தனமான பாகத்தை ஏற்று நடிக்கிறார். திரு. ராதாவுக்காகவே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பாத்திரமாகவே தோன்றுகிறது. ராதாவின் நடிப்பில், வசன உச்சரிப்பில் 'ரத்தக் கண்ணீர்' வாடை வீசுவதோடு மிகையாகவும் தோன்றுகிறது. தகப்பனார் முன்பும், பெரிய மனிதர்கள் முன்பும் பண்பற்ற முறையில் மூர்த்தியாக வரும் ராதாவின் நடிப்பு யதார்த்தத் தன்மைக்கு புறம்பானதாகத் தோன்றுகிறது. எவ்வளவு தான் கொடியவனாக இருந்தாலும் எந்த மகனும் தன் தந்தைக் கெதிரில் மரியாதைக் குறைவாக நடக்க மாட்டான். தமிழ் நாட்டுச் சூழ்நிலையில் உருவான இந்தக் கதையில் அந்தப் பகுதியில் மட்டும் டைரக்டர் சற்று கவனம் செலுத்தியிருக்கலாம். மற்றபடி ராதாவின் நடிப்பில் எவ்விதக் குறைவும் சொல்வதிற்கில்லை. மூர்த்தியின் மனைவியாக - பண்புள்ள தமிழ்ப் பெண்ணாக - பொறுமையின் சின்னமாக நடிக்கும் சௌகார் ஜானகியின் நடிப்பு உண்மையில் படத்தின் தரத்திற்கு சிகரம் வைத்தால் போல் அமைந்துள்ளது. அந்த அளவுக்கு

பாத்திரத்தோடு ஒன்றி மிக அமைதியாக நடித்துள்ளார், ஜானகி. மூர்த்தியின் தந்தையாக வரும் வி. கே. ராமசாமியும், தாயாக வரும் சி. கே. சரஸ்வதியும் மிக 'படபடப்பாக' நடித்துள்ளார்கள். அவர்கள் நடிப்பில் நகைச்சுவையும் கலந்துள்ளது, எம். என். ராஜம் இதில் மரகதமாக வருகிருள். எம். என். ராஜத்திற்கு இது ஒரு புது மாதிரியான பாகம். கொடுமைக்காரியாகவும், வில்லியாகவும் நடித்துப் பழகிப் போன அவருக்கு 'குணவதி'யாகவும் கூட நடிக்க முடியும் என்பதை மரகதம் என்ற நர்ஸ் பாத்திரம் பறைசாற்றுகிறது. பிரபல மலையாளத்து நடிகரான பிரேம் நசீர் இதில் போலீஸ்காரனுக வந்து சக்கைப் போடு போடுகிருர். அவர் பேசும் தமிழில் தான் மலையாள வாசனை வீசுகிறது. தமிழகத்தில் அவருக்கு நல்லதோர் எதிர் காலம் உண்டு என்பதை அவரது நல்ல நடிப்பு ஊர்ஜிதப் படுத்துகிறது. மற்றும் சாயிராம், ஏழுமலையின் பாகம் கதைப் போக்குக்குத் தேவையற்ற ஒரு அம்சம். நகைச் சுவை நடிப்பில் பேர்போன சாரங்கபாணி, நல்ல குணசித்திர பாக மேற்று சிறப்பாக நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. எஸ். வி. ராஜகோபால், மாடிவீட்டு லட்சுமி அனைவரும் குறைகூற முடியாத அளவு நடத்திருக்கின்றனர்.

இந்தப் படத்தில் ஒரு புதுமை என்ன வென்ருல், கதாநாயகர்கள் பாடி படம் பார்ப்பவர்களின் பொறுமையைச் சோதிக்கவில்லை. ஒருக்கால் எம்.ஆர். ராதாவின்குரலுக்குத் தக்க பின்னணி பாட பாடகர்கள் கிடைக்கவில்லையோ என்னவோ? பெண்பாத்திரங்கள் அனைவருமாகச் சேர்ந்து ஒரு அரை டஜன் பாட்டுக்களைப் பாடுகிருர்கள். "இவரே தான் அவரு! அவரே தான் இவரு" என்ற முதல் பாட்டு, கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. மற்றும் ஒலி, ஒளிப்பதிவுகள் அனைத்தும் குறை கூற முடியாத அளவுக்குச் சுமாராக அமைந்துள்ளது டைரக்ஷனில் புதுமை எதுவும் இல்லை. இந்த நல்ல இடத்து சம்மந்தம் அவசர கோலத்தில் தயாரான படமென்ருலும் 35 சதவிகிதம் பாஸ்மார்க் அளிப்பதில் அசம்மந்தம் எதுவும் இல்லை.

—"கண்ணுடி"

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாய மாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

நாட்டியம்

ரஞ்சன் பி. ஏ., எம். லிட்.

புத்துணர்ச்சி :

உலகத்தில் அமைதிக்குரிய காலம் வந்தது. உலர்ந்த மரங்கள் தளிர்க்கத் தலைப்பட்டன. களிப்பைக் கண்டுபிடிக்க மக்கள் புறப்பட்டனர்: புதைக்கப்பட்ட பிணம் தோண்டி எடுக்கப்பட்டது. விஞ்ஞானம் அதைப் பரிசோதிக்கலாயிற்று. நாடக அரங்கு மூச்சு விட்டது. கலையுணர்ச்சி இரு மடங்கு வேகத்துடன் எழுந்து நின்றது. மேடையை மின்சாரம் அலங்கரித்தது.

நடனும் நடியும் நிலைக்கலானுர்கள் :—அஜந்தாவின் நாட்டியச் சித்திரந்தான் எவ்வளவு அழகு! ஆடப்பட்டு வந்த அக் காலத்தில் அது எப்படி இருந்திருக்கும்!

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்புதான் நாட்டியக் கலையைப் பற்றிய உணர்வு சற்றுத் தீவிரமாகியது எனலாம். இதன் மூலம் பழைய ஏடுகள் ஓரளவு புறப்பட்டன. பழக்கம் குறைந்து விட்டதனுல் சம்பிரதாயச் சொற்களும் முறைகளும் தெளிவடையக் கூடவில்லை. பரம்பரையாக வந்த இக் கலைவல்லுனர் மூலம் அறியப்படுபவைகளையும், நூல் வழக்கையும் ஒத்திட்டு ஆராய்வதன் மூலம் கலை நுணுக்கங்களில் தெளிவுகாண ஓரளவு நம்பிக்கையும் ஏற்பட்டு வருகிறது.

இதுவரை முயன்ற அறிஞர் பலரும் பட்ட வர்த்தனமான விஷயங்களில் தெளிவு காட்டியுள்ளனர். இதன்படி பாட்டியம், கீதம், அபிநயம், ரஸம் என்ற நான்கு அம்சங்களும் பொருந்திய நடனம் மூன்று வகைப்படும். நாட்டியம், நிருத்யம், நிருத்தம் என அவை வழங்கும்.

பாட்டியம் :

அதாவது ஓதுதல்; நடனத்திற்கான கருத்துக்களைச் சிதறுண்டு போகாமல் அமைத்து வைத்துக் கொள்ளுதல் அவசியம். தோன்றிய கருத்து மறைந்து போகாமலும், மறந்து போகாமலும் இருப்பதற்கு இப் பகுதி அவசியமாகிறது எனவே

அறிவிப்பு

சந்தாதாரர்களும் ஏஜன்டுகளும் கடிதப் போக்குவரத்தும் பணம் அனுப்புவதும்,

மானேஜர்,

புதுமை,

202, ஜான் ஜானி கான் ரோட்,

சென்னை-14.

என்று விலாசமிட்டு வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

இப்பாட்டியமும் ஊன்று கோலாக இருக்கின்றது.

கீதம் :

இது உணர்ச்சியை விம்மும்படி செய்கின்ற அம்சமாகும்; வீரமோ, சிருங்காரமோ, கருணையோ உள்ளத்தில் தினையளவாக இருப்பது பனையளவாகப் பெருத்து விடக் கீதமே சிறந்த காரணமாகும். இனிய உணர்ச்சிகளையும், இதர உணர்ச்சிகளையும் கிளறி விடுவதற்கேற்ற இசை நிலைகள் பரந்து கிடக்கின்றன. ஏற்றமும் இறக்கமும் கொண்ட ஸ்வரக்கிரமங்கள் எடுத்துரைக்க முடியாத உணர்ச்சியின் உயிருள்ள சாயைகளேயாம்.

அபிநயம் :

இதை ஜாடை, சைகை என்ற சொற்களால் குறிப்பிடலாம். இது இரண்டு முறையாக அமையும். குழல், சங்கு முதலியவற்றைக் குறிக்கப் பிடிக்கப்படும் அபிநயம் ஒரு முறை; ஒரு பொருளைச் சுட்டுவதற்கு இம்முறை கையாளப்படுவதாகும். மற்றொன்று, பாவத்தைப் பார்ப்பவர் முன் நிறுத்துவதற்காக உபயோகப்படுவதாகும் வடிவமில்லாத பாவத்தை அழகிய சொற்கோர்வையால் காவியம் வெளியிடுவது போலவே, சிறந்த அங்க அசைவுகள் மூலமாக பாவத்தை வெளியிடுதலாம். பாவ அபிநயமே இக் கலையின் உயிர்நாடியாகும்.

ரஸம் :

இதைச் சுவை யென்று சுருக்கமாகக் கூறலாம். கலையின் உயிர் இதுவே. இறைவன் பிராணிகளிடம் உயிராக இருப்பது போலக் கலையின் சுவையாக உள்ள ஈசனை உணர்ந்து களிக்கிறோம். எனவே இதை அடையும்படி வழி வகுத்துக் கொடுக்கும் நடனே கலைஞன் என ஒப்புக் கொள்ளப்படுவான். ஈசனைப் போலவே இதன் நிலையை ஆனந்த வெள்ள மென்றுதான் குறிப்பிட வேண்டும்.

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98 / ஆபீஸ் 533 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044

மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20S நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை

சென்னை, ஆந்திர மாகாணங்களில்

மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. RAMASWAMY NAIDU &

Sri G. V. MUTHUSWAMY NAIDU

Committee of Directors.

ஸ்ரீ பாலராமவர்மா
டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384
மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் கரையாளர் &
ரங்கசாமிநாயுடுஸன்ஸ் கம்பெனி

இயற்கை வைத்தியம்

கேள்வி :— 1

53 வயதுடைய ஒருவருக்கு பக்கவாதம் வந்து இடது கை, இடது கால் விளங்காமலிருக்கிறது. இந்த வாதம் வந்து பத்து மாதங்கள் ஆகி விட்டன. இன்னும் சௌகரியமாக வரவில்லை. ஆகையினால் உங்கள் இயற்கை வைத்தியத்தின் மூலம் சௌகரியமாகும் என நம்பி மேலே குறிப்பிட்ட வாதத்தை எழுதினேன். அவ்வாதத்திற்கு தகுந்த மருந்தையும், உபயோகிக்கும் முறையையும் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பதில் :—

ஆரோக்யத்திற்கு மனிதன் இரத்தம் 20% அமிலமும் (acid) 80% கரிசலும் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். (புதுமை 1958 பிப்ரவரி பக்கம் 75 கட்டுரையை பார்க்கவும்). மிதமிஞ்சி அமிலத்வம் வாய்ந்த (acidose) இரத்தத்தை ஊடுருவி (bathed in acid medium), கால் வகைகளை இயக்கும் நரம்புகள் ஓடுவதினால், அவயவங்களை அடக்கி ஆளும் சக்திகளை இவைகள் இழக்கின்றன, இதற்கு இங்கிலீஷ் மருந்தில் நிரந்தர சிகிச்சையும் இல்லை. அம்மருந்துகள் விஷத் தன்மை வாய்ந்தவைகள் மட்டும் அல்லாமல், பக்க பலன்களும் (side effects) பயங்கரமானவையும் கூட.

வியாதி வந்து 10 மாதம் தான் ஆனபடியால் எளிதில் குணமடையும் என்று நினைக்கிறேன். தெரிந்த இயற்கை வைத்தியர் இருந்தால் உடன் அவரைக் கலக்கவும், இல்லாவிட்டால் பின் முறையைக் கையாளவும்.

ஆரம்பத்தில், இரண்டு நாளைக்காவது நான்கு மணி நேரத்திற்கு ஒரு தபா ஆரஞ்சு ரஸம் ஒரு டம்ப்ளர் சாப்பிடவும். பின் இரண்டு நாளைக்கு ஆரஞ்சு பழங்களும் அத்துடன் பாலும் சாப்பிடவும். பின் கை குத்தல் அரிசி சோறும் (கஞ்சி வடிக்காமல்) மிதமாக வேக வைத்த காய் கறிகளும் பழங்களும் ஏராளமாய் சாப்பிடவும். ஆரஞ்சுகளுக்கு பண வசதி இடம் கொடுக்க வில்லை என்றால் எலுமிச்சம் பழ ரஸத்தில் உப்பு போட்டு சாப்பிட்டாலும் போதும். சீனி உபயோகப் படுத்தக் கூடாது. மேலே சொல்லிய முதல் நான்கு நாளில் வேறு ஒரு உணவும் அருந்தக் கூடாது.

ஆரம்ப காலத்திலிருந்தே சூரிய ஸ்நானம், தண்ணீர் ஸ்நானம், களிமண் பூசுதல் தினம் செய்ய வேண்டும். இவைகளின் விபரம் வருங்கால (future) புதுமை இதழ்களில் எதிர்பார்க்கவும்.

கேள்வி :—

2. சிலருக்கு வயிற்றிலிருந்து இறைச்சல் வருகிறதின் காரணம் என்ன?

3. என் நண்பர் ஒருவருக்கு ஆறு மாதங்களுக் கிடையே வலதுகால், இடது கை இவை இரண்டும் சுமார் அரை மணி நேரம் சுண்டி, சுண்டி இழுக்கிறது அதன் காரணம் என்ன?

4. என் தந்தைக்கு மழை காலங்களில் அல்லது குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் ஆளைப்பு வருகிறது. அதை நிவர்த்திக்க என்ன செய்ய வேண்டும்?

5. வர்மம் எதனுல் ஏற்படுகிறது? அதை நிவர்த்திக்க என்ன செய்யலாம்?

6. நோயற்று வாழ ஒரு வழி சொல்லுங்கள்.

7. தொண்டையில் சதை எதனுல் வளர்கிறது? அதற்கு என்ன செய்ய வேண்டும்?

உணவு வயிற்றில் போனதும், அதை ஜீரணிக்க பல ரஸங்கள் வயிற்றின் உள் சுவரிலிருந்து கக்கப்படுகின்றன. இந்த ரஸங்களை உணவுடன் செவ்வனே கலக்கச் செய்யும் வயிற்றின் முயற்சிகள் தான், இரைச்சலுக்குக் காரணம். இதனுல் உபாதை ஏதாவது ஏற்படுகிறதா?

சுண்டு வாதம்

கேள்வி நெ. 1ன் பதிலை பார்க்கவும்.

ஆஸ்த்மா

இதற்கு நிரந்தர நிவாரணம் ஆங்கில முறையில் இல்லை என்பதை டாக்டர்களே ஒப்புக் கொள்ளுகிருர்கள். ஒன்று, இரண்டு வருஷங்களாக இருக்கும் ஆஸ்த்மாவை சீக்கிரம் குணப்படுத்தி விடலாம். டாக்டர்கள் இதை நம்பாமலிருக்கலாம். என் அனுபவத்தை வைத்து இதை சொல்லுகிறேன்.

சிகிச்சை முறை

கேள்வி 1ன் பதிலைப் பார்க்கவும்.

வர்மம்

ஆயுர்வேத வைத்தியர்கள் இந்த பதத்தைப் பல நோய்களுக்கு உபயோகப்படுத்துகிருர்கள். நோயை குறிப்பிட்டுச் சொன்னுல் பதில் கொடுக்க முடியும்.

தொண்டைப் புண்

கழுத்திற்கு மேல் தான், தேகத்தின் பிரதான பாகங்களான மூளை, கண்கள், காதுகள் இருக்கின்றன. இவைகளை போஷிக்கும் இரத்தம் சுத்தமாய் இல்லா விட்டால், அவைகள் கதி என்னவாகும். அதன் காரணமாக, இயற்கை அன்னை Cympatic glanda என்று அழைக்கப்படும் டான்ஸில்ஸ் இரண்டு த்வார பாலகர்களை தொண்டையின் வாசலில் (gate) சிருஷ்டித்திருக்கிருள். இவை மேலே போகும் இரத்தத்தி லிருக்கும் அசுத்தங்களை விழுங்கி (நீல கணம்) சுத்த ரத்தத்தை மேலே அனுப்புகின்றன. அசுத்தங்கள் ஜாஸ்தியானுல், அவைகள் வீங்குகின்றன. அவைகளை தேகத்திலிருந்து நீக்கி விட்டால், வியாதி தீர்ந்து விடும் என்பது, ஜலதோஷத்திற்கு மூக்கை வெட்டுவது மாதிரிதான்.

பரிகாரம்

கேள்வி 1ன் விடையைப் பார்க்கவும்.

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி

தபால் பெட்டி நெ. 30

போன் : **58 & 75** தந்தி : **"லித்தோகிராப்"**

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ்,ஜவுளி,காபி, டீ,மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோ விலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடி மேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரீஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

137692

தபால் பெட்டி எண்: **69**

நாடு முழுவதும் மாத்திரமல்ல.....

நாநிலம் எங்கும் புகழ் பெற்றவை

எங்கள் பட்டாசு ரகங்களும்,

மத்தாப்பு வகைகளும்......!

தீ ஸதர்ன் இண்டியா எக்ஸ்போர்டிங் கம்பெனி

சிவகாசி. (தென் இந்தியா.)

பீடி சக்கரவர்த்தி
த.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
த.பி.சொக்கலால்
RAMSAIT
BEEDI
ராம்சேட்
பீடி
முக்கூடல்
INDIA No.5901
CEYLON No.5929
By
RAJAN & Co. SVKS.

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

Pappanaickenpalayam,

COIMBATORE.

Telephone : 18 & 818
Telegrams : 'LAKSHMI'

Branch at Kovilpatti : Telephone : 18
Telegrams : 'LAKSHMIMIL'

SPINDLAGE AT
Coimbatore — 59,680 & Looms 200
Kovilpatti — 51,120

SPINNERS OF :

Quality Cotton Yarn 20s to 100s Combed and Staple Fibre Yarn

Manufacturers of :

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.